www.padippakam.com


# புதிய பூமி

Puthiya Poomi

புදිය පුමි

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA.

சுற்று 08 யூலை/ஒகஸ்ட் 2001 பக்கம் 12 விலை 10/= சுழற்சி 41


## ஜனாதிபதியின் ஏதேச்சதிகார முடிவு!

## அன்று ஜே.ஆர். இன்று சந்திரிகா

இன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் நிலைத்து நீடிப்பதாலோ அன்றி அதற்குப்பதிலாக ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைப்பதாலோ அல்லது தேர்தல் ஒன்று நடத்தப்படுவதாலோ நாடும் மக்களும் எதிர்நோக்கியுள்ள பூதாகரமான பிரச்சினைகள் எதனையும் தீர்க்க முடியாது. இரண்டு பேரினவாத ஆளும் கட்சிகளிடமும் அதற்கான உருப்படியான வேலைத்திட்டம் கிடையாது பேரினவாத ஆட்சி அதிகார சுவைப்பு மட்டுமே அவர்கள் வேண்டி நிற்பதாகும்.

அரசாங்கம் அண்மைய வாரங்களில் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் கடுமையான எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை. அமைச்சர் மகிபால ஹெரத்திற்கு' எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணை. அவசரகாலச் சட்ட நீடிப்பு செய்ய இயலாமல் போனமை. முழு அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கான முன்னறிவித்தல் ஆகியன பாராளுமன்றத்தில் எதிர் கொள்ள முடியாத பிரச்சினைகளாகி உள்ளன.

மேற்படி பிரச்சினைகளைப் பாராளுமன்றத்தில் எதிர்த்து முறியடிக்கும் பலத்தை அரசாங்கம் இழந்து விட்டது. 109 ஆசனங்களில் உள்ளவர்களே அரசாங்கப் பக்கத்தில் இருக்கின்றனர். அவர்களிலும் சிலர் எதிர்ப்புறத்திற்கு தாவ முற்பட்டுள்ளனர். அதே வேளை எதிர்த் தரப்பில் 115 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் எல்லோரும் ஒரே முகமாக இல்லாது விடினும் எந்த நேரத்திலும் ஒரே நிலைக்கு வந்தால் அரசாங்கம் அதோ கதி என்ற நிலைதான்.

எனவே தான் அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்ற முடியாத சூழலில் பாராளுமன்றத்தை இரண்டு மாதம் வரை இடைநிறுத்தும் முடிவை ஜனாதிபதி எடுத்துள்ளார். தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பாவித்து இவ் ஏதேச்சதிகார முடிவை மேற்கொண்டுள்ளார் முன்பு பாராளுமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அதனை நிறைவேற்ற முடியாது கட்டி வைக்கப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தை தூசி தட்டி அதற்கே சர்வசன வாக்கெடுப்பு நடாத்தப் போவதாக திகதியும் அறிவிக்கப் பட்டுள்ளது,

எதிர் வரும் ஒகஸ்ட் 21ம் திகதி நடாத்தப்படும் சர்வசன வாக்கெடுப்பில் வெற்றி பெற்றால் புதிய அரசியல் யாப்பு நடைமுறைக்கு கொண்டுவரப்படுவதன் மூலம் இன்றைய ஜனாதிபதியே பிரதமராகி அதிகாரங்களையும் வைத்திருக்க முடியும் என்றே நம்பப்படுகிறது. அதற்கான முயற்சியே சர்வசன வாக்கெடுப்பாகும். அன்று ஜே.ஆர். செய்து கொண்டதைத் தான் இன்று சந்திரிகா செய்து கொள்கிறார்.

நமது நாடும் மக்களும் செல்ல வேண்டிய சரியான திசை மார்க்கத்தை அன்றும் இன்றும் இந்த அரசாங்கம் வரையறுக்கவில்லை. மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. அவற்றை நிறைவேற்றுவதற்கு நேர்மையான முயற்சிகளில் ஈடுபடவுமில்லை. நாட்டை நாசகார பாதையில் இட்டுச் சென்று கொண்டிருக்கும் யுத்தத்திற்கோ பொருளாதாரத்தைக் குட்டிச் சுவராக்கிய திறந்த பொருளாதாரக் கொள்கைக்கோ மாற்றுக் கொள்கைகளோ நடை முறைகளோ பின் பற்றப்படவில்லை.

### அந்நிய சக்திகளுக்கு விலை போனதால் ஆட்சியை இழக்கும் நிலை!

மேற்படி இரு பிரதான விடயங்களிலும் அந்நிய சக்திகளின் ஆலோசனைகளும் வழிகாட்டல்களுமே முற்று முழுதாகப் பின்பற்றப்பட்டன. உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் என்பனவே பொருளாதார வழிகாட்டும் ஆணைப் பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் விளைவு பல்தேசியக் கம்பனிகளும் தனியார் மயமும் நமது பொருளாதாரத்தை கட்டுப்படுத்தி விழுங்க ஆரம்பித்தன. நமது நாட்டின் நாணயம் பெறுமதியைக் கூட நாமே தீர்மானிக்க முடியாத அளவுக்கு டொலர் ஆதிக்கத்திற்கு இரையாக்கப்பட்டது.

மறுபுறத்திலே யுத்தப் பிசாசுக்கு நாளாந்தம் கோடிக்கணக்கில் கொட்டித் தீர்க்கப்படும் நிலை வளர்க்கப்பட்டது. யுத்தத்திற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் மக்களிடமிருந்து பணம் உறக்கப்படுகிறது. அபிவிருத்தி என்பது வெறும் ஏமாற்றாகவே இருந்து வருகிறது.

இவற்றினால் பொருளாதாரச் சீர்குலைவுர் கஷ்டங்களும் அதிகரித்து வந்துள்ளன., மக்கள் வாழ்க்கைச் சுமையைத் தாங்க முடியாது அவதியும் அல்லலும் படுகின்றனர். விலை உயர்வு. கட்டண அதிகரிப்புகள். மோசமான வரி அறவீடுகள் மக்களை விரக்தியின் விளிம்பிற்குக் கொண்டு சென்றுள்ளன. சம்பள உயர்வுகளுக்குப் பதிலாக மக்கள் மீதான சுமைகளே மேன் மேலும் சுமத்தப்படுகின்றன.

யுத்தத்திற்கு முடிவுகட்டி சமாதானம் கொண்டு வரப்படுவது என்ற போலித் தனமான பேச்சுக்கள் யாவும் கைவிடப்பட்டுள்ளன. ராணுவமயப் படுத்தல் விரிவாக்கம் செய்யப்பட்டு நவீன ஆயுதக் கொள்வனவிற்காக கோடிகோடியாகப் பணம் கொட்டப் படுகிறது. யுத்தத்தை முன்னேடுக்கும் உள்ளார்ந்த நோக்கத்திற்காக அமெரிக்காவும் இந்தியாவும் போதிய உதவி ஒத்துழைப்பு ஆலோசனை வழங்கி வழிகாட்டி வருகின்றன.



"கெடுகுடி சொற்கேளாது சாக விரும்புபவன் மருந்து குடிக்கமாட்டான்" என்பது முது மொழி. அவ்வாறே பொதுசன முன்னணிக்கு இடதுசாரி ஜனநாயக சமாதான சக்திகள் கூறிய எந்த ஆலோசனைகளும் செவிகளுக்கு ஏறவில்லை. அமெரிக்காவையும் இந்தியாவையும்

தொடர்ச்சி 12ம் பக்கம்

## இலங்கை மீதான இந்திய மேலாதிக்கத்தின் 3 அபாயத் திட்டங்கள்

1. கண்டியில் 432 ஹெக்டெயர் காணியில் தகவல் – பௌதீக தொழில் நுட்பக் கைத்தொழில் பேட்டை நிறுவுதல்.

2. பிபிலையில் 19474 ஏக்கர் நிலத்தில் அன்னாசிப் பழச் செய்கையும் பழச்சாறு உற்பத்தியும்

3. திருகோணமலையில் முழு அளவிலான சர்வதேச துறைமுக அபிவிருத்தியும் புதிய நகர நிர்மாணமும்.

மூன்றாவது திட்டத்தோடு இணைந்ததாக 26 மைல் நீளமான மிகப் பெரிய பாலம் பாக்கு நீரிணைக்கு மேலால் போடப்படும்.

விபரமான கட்டுரை 8ம் பக்கத்தில்

## வடக்கு கிழக்கு மலையகம் இணைந்த வெற்றிகர வெகுஜன எதிர்ப்பு நாள்

யூலை 6ம் திகதி 11தமிழ் முஸ்லிம் கட்சிகளின் அழைப்பின்பேரில் நடைபெற்ற ஹர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது. வடக்கு கிழக்கு, கொழும்பு, மலையகம் ஆகிய இடங்களில் மேற்படி ஹர்த்தால் இடம் பெற்றது. கொழும்பு மருதானையில் அமைந்திருக்கும் பொலிஸ் சோதனை சாவடியில் மலையகத் தமிழ் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவிற்குட் படுத்தப்பட்டதற்கு எதிர்ப்பை தெரிவிக்கு மாறு ஹர்த்தரல நடத்தப்பட்டது.

கொழும்பு நகரில் கடைகள் மூடப்பட்டன. கோட்டை ரயில்வே நிலையத்திற்கு முன்பாக மறியல் போராட்டமொன்றும் நடைபெற்றது. அந்த மறியல் போராட்டத்தில் உணர்வு பூர்வமாக கலந்துகொண்டவர்களின் எதிர்ப்புணர்வு தொகுத்து எடுத்துக் காட்டப்படவில்லை என்பது குறைபாடாகும். அம்மறியல் போராட்டத்தை ஏற்பாடு செய்தவர்களின் அனுபவ மின்மை காரணமாக இருக்கலாம். அம்மறியல் போராட்டத்தினூடே தனிப்பட்ட ஒருவரின் 'இமேஜ்ஜை' வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன என்பது அப்பட்டமாகவே தெரிந்தது. இப் போராட்டங்களில் இவ்வாறான கொச்சைத்தனங்களும், தேர்தலில் வாக்குகள் சேகரிக்கும் நோக்கமும் இடம்பெறாமல் இருப்பதே சரியானது. வெளிவெளியாகவே அவை தெரிந்தமை பெரிய குறைபாடாகும்.

தமிழ்ப் பெண்கள் மீதான பாதுகாப்பு படையினரின் பாலியல் வல்லுறவுக்கான எதிர்ப்பியக்கம் ஒரு பொதுப் பதாகையின் கீழ் எல்லா

தொடர்ச்சி 12ம் பக்கம்

## தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவை நிறுத்து!



## பல்கலைக்கழக மாணவர்கள் பழிவாங்கப்படுகின்றனர்!

வடக்கு கிழக்கில் பல்கலைக் கழகங்களின் மாணவர்கள் மீதான படையினரின் பழிவாங்கல் ஆரம்பித்து விட்டதா என்ற அச்சம் எழுந்துள்ளது. யாழ் பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் அண்மையில் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் மீது புலி முத்திரை குத்தப்பட்டுள்ளது. தம்மிடம் ஆதாரங்கள் இருப்பதாகப் படைத்தரப்பு அறிவித்துள்ளது.

இவரது கைது தடுப்பு வைப்பு என்பனவற்றை எதிர்த்து யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் எதிர்த்து பகிஸ்கரிப்பில் இறங்கி யுள்ளனர். அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் கொழும்பில் கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்துள்ளது.

யாழ் பல்கலைக் கழகத்தின் மீது படையினருக்கு நீண்ட நாட்களாக கண் இருந்து வந்துள்ளது. காரணம் பல்வேறு நெருக்கடி காலங்களில் மாணவர்கள் மக்கள் சார்பாக நின்று போராடி வந்தவர்கள். பொங்கு தமிழ் எழுச்சி உச்சத்திற்குச் செல்வதற்கும் அது வடக்கு கிழக்கில் பரவுவதற்கும் அவர்கள் முன் நின்றுள்ளனர். அவ் வேளையிலேயே பல முன்னணி மாணவர்களின் விபரங்கள் குறிக்கப் பட்டுக் கொண்டன.

எனவே காத்திருந்து இப்போது பழிவாங்கும் படலம் ஆரம்பிக்கப் பட்டுள்ளதா என்ற கேள்வி எழுந்துள்ளது. இன்று யாழ் பல்கலைக் கழகம் நாளை வவுனியா வளாகம் அடுத்து கிழக்குப் பல்கலைக் கழகமா என்றே மக்கள் கேட்கிறார்கள். அதனைத் தொடர்ந்து மலையக உயர்கல்வி நிலையங்களிலும் மட்டுமன்றி தென் கிழக்குப் பல்கலைக்கழத்திலும் இப்பழிவாங்கல்கள் தொடராது என்பதற்கு என்ன உத்தரவாதம்.

தொடர்ச்சி 12ம் பக்கம்

படிப்பகம்

# மலையக மக்களது விமோசனத்திற்கு சந்திரசேகரன் கூறும் கொள்கை என்ன?

கொள்கை கொள்கை என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரம் அடிக்கடி பேசி வருகிறார். அவர் கொள்கையென்று குறிப்பிடுவதென்ன? மலையக தமிழ் மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்று மக்கள் விரோத யூ.என்.பிக்கு முட்டுக்கொடுத்துக் கொண்டிருப்பதா? பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் சந்திரசேகரத்திற்கும் அரவது சகாக்களுக்கும் கூடுதலான சலுகைகளை கொடுத்தால் மீண்டும் அதனுடன் சேர்ந்து கொள்வதா? இ.தொ.கா வுடனும் அதன் தலைவர் ஆறுமுகத்துடனும் சேர்ந்து கொண்டு அக்கூட்டில் மக்கள் நலன் இருப்பதாக கூறுவதா?

மலையக தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை முன்நிறுத்துவதாக கூறிக்கொண்டு அரசியலுக்கு வந்த அவர், ஆரம்பத்தில் முன்வைத்த மலையகத்தமிழ் மக்களுக்கென தனி மாகாணம் என்ற கோரிக்கைக்கு தற்போது என்ன நடந்துவிட்டது? மலையகத் தமிழ் மக்கள் ஒரு தனியான தேசிய இனம், அவர்களுக்கு சுயாட்சி, அவர்களின் அலுவல்களை தமிழ் மொழியில் செய்து கொள்வதற்கான உரிமை போன்ற அடிப்படை விடயங்கள் பற்றி அவர் இப்போது பேசுவதில்லை.

தனியார் தோட்டக் கம்பனிகளின் அடக்குமுறைகளுக்கு எதிராக அவர் முன்வைக்கும் திட்டம் என்ன என்பதும் தெரியவில்லை.

மலையகத் தமிழ் மக்களின் உரிமைகள் பற்றி பெரிதாக அக்கறை காட்டுவதாக அறிவித்து வரும் அவர், அவரின் கட்சியின் கொள்கைத்திட்டம், வேலைத்திட்டம் என்று எதனையும் காட்டுவதற்கு முடியாதவராகவே இருக்கிறார்.

இவ்வருடம் அவரின் தொழிற்சங்க அங்கத்துவ எண்ணிக்கை பெரிதும் வீழ்ச்சியடைந்து காணப்படுவதால் அவர் 'கொள்கை' பற்றி பேசுகிறார். தானும், தனது கட்சியுமே கொள்கையை கொண்டுள்ளதாக கூறுகிறார்.

பிந்துனுவெவ முகாமில் இடம்பெற்ற படுகொலைகளுக்கு எதிராக உயிர்க் கொலைகள், சேதங்கள் தொடர்பான அவரின் அக்கறை மிகவும் வரையறுக் கப்பட்டதாகவே இருந்தது. தற்போது எல்லாவற்றையும் யூஎன்.பிக்கு அளவாக முன்னெடுப்பதில் மிகவும் நிதானமாக இருக்கிறார்.

அவரின் கொள்கை என்பது யூ.என்.பி யுடன் அல்லது அரசாங்கத் துடன் இணைந்து அவற்றுக்கு நோகாத வகையில் பேரம் பேசுவது தானா? அது அவ்வாறெனின் மலையக தமிழ் மக்கள் கோரிக்கையாக இருக்க முடியாது. யூ.என்.பி.யும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் போடுகின்ற பிச்சைக்கு ஏற்ற 'பாத்திரத்தை' ஏந்தும் நிலையாகவே இருக்க முடியும். அதைத்தான் காலஞ்சென்ற சௌமிய மூர்த்தி தொண்டமானும் செய்து வந்தார்.

கொழும்பிலே ஜ.தொ.கா தலைவர் அதனையே செய்ய வேண்டும் என்று வெளிப்படையாக பேசுகிறார். அதாவது மேல்மாகாணத் தமிழர்கள் ஒன்று சேர்ந்து பாராளுமன்ற பிரதிநிதித் துவத்தை உறுதி செய்து பலமான பேரம் பேசும் வாய்ப்பை பெறவேண்டும் என்ற கூறுகிறார். அதனை போன்று வெளிப்படையாக சொல்லுவதை விட்டுவிட்டு சந்திரசேகரம் மறைமுகமாக கொள்கை 'கொள்கை' என்ற கூவி பாராளுமன்ற வியாபாரம் செய்ய முயற்சிப்பது வேடிக்கையானது.

கொள்கை கொள்கை என்று உரத்துப் பேசுவதால் மலையக மக்களின் விமோசனத்திற்கு கொள்கையும் வேலைத்திட்டமும் உருவாகப் போவதில்லை. சந்திரசேகரன் கூறுவது கொள்கை எதுவும் அல்ல. வெறும் ஏமாற்றேயாகும்.

# தமிழ் பெண்கள் மீது படையினர் நடாத்தும் பாலியல் வல்லுறவு ஈனச் செயல்

தமிழ்ப் பெண்கள் மீது படையினர் நடாத்தி வரும் பாலியல் வல்லுறவுச் செயல்கள் மிலேச்சத்தனமான கட்டத்தை அடைந்துள்ளது. வீட்டிலும் இருக்க முடியாது வீதியிலும் நடமாட முடியாது என்ற அவலநிலைக்கு தமிழ்ப் பெண்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இப்பாலியல் வல்லுறவு ஈனச் செயலில் ஈடுபட்டு வருபவர்களில் படைகளில் இருப்போரே முன்னணியில் இருந்து வருகிறார்கள். வடக்கிலும் கிழக்கிலும் கொழும்பிலும் தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு என்னும் கொடுமை தொடரும் நிகழ்வுகளாகிக் கொண்டே செல்கிறது. ஒரு சம்பவம் இடம் பெற்று அதன் அதிர்ச்சியில் இருந்து விடுபடுவதற்கு முன்பாக மற்றொன்று நடைபெற்று விடுகின்றது.

இவற்றைச் செய்வதில் ராணுவம், பொலீஸ், கடற்படை, விமானப்படை ஆகிய நாற்படைகளும் சம்மந்தப் படுகின்றன. இன்றைய யுத்த சூழலில் தமிழ்ப் பெண்களைப் புலிகள் என்ற பெயரில் எதுவும் செய்து கொள்ளலாம் என்ற நிலையே காணப்படுகிறது.

தமது காம இச்சையைக் கீழ்த்தரமாகத் தீர்த்துக் கொள்ள எத்தனிக்கும் எந்தவொரு படையினரும் தமிழ்ப் பெண்களை புலிச் சந்தேகம் என்ற சாட்டில் பாலியல் வல்லுறவுக்கு பலியாக்கிக் கொள்கின்றனர். இத்தகைய படையினருக்கு அவசர காலச் சட்டமும், பயங்கரவாதத் தடைச்சட்டமும் கைகொடுத்து உதவுகிறன்றன. இவை மட்டுமின்றி நீதிமன்றத் தீர்ப்புகள் கூட இவ் ஈனச் செயல் புரிவோருக்கு துணை புரிந்து வருகின்றன.

மன்னார் உப்புக்குளத்தில் இரண்டு இளம் தமிழ்ப் பெண்கள் கடற்படை-நாசகாரத் தடுப்புப் பொலிசார் என்போரால் மோசமான பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டனர். பன்னிரண்டு பேர் மேற்படி பெண்களால் நீதிமன்றத்தில் அடையாளங் காட்டப்பட்டனர். ஆனால் அவ் வழக்கு தற்போது முடக்கப் பட்டிருக்கிறது.

நீர்கொழும்பில் ஒரு தமிழ்ப் பெண் பொலிசாரால் மிகமோசமான பாலியல் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டார். தனக்கு நடந்த கொடுமையை அவர் மனித உரிமை மீறல் மனுவில் விபரித்திருக்கிறார். ஒரு பெண்ணை ஜனாதிபதியாகக் கொண்ட பௌத்தம் பேசும் நாட்டில் தான் இத்தனை தமிழ்ப் பெண்கள் பச்சை பச்சையாகப் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்படுகிறார்கள்

அண்மையில் பம்பலப்பிட்டி லொட்ஜில் தங்கியிருந்த இரண்டு பெண்கள் பம்பலப்பிட்டி பொலிசாரால் பாலியில் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டிருக் கிறார்கள். இதனை மூடி மறைக்க அவர்களைத் தடுத்து வைத்துக் கொண்டே வீடியோ பதிவின் மூலம் 'இல்லை' என்ற மறுப்புக்கு நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர்.

இதனை எழுதிக் கொண்டிருக்கும் போது மருதானையில் மலையகத் தமிழ் யுவதி ஒருவரை மூன்று பொலிசார் மாறி மாறி பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கியிருக்கிறார்கள். வேறு எங்கும் அல்ல, புலிகளைக் கண்டு பிடிப்பதற்கு கென்று நிறுவப்பட்ட சோதனைச் சாவடியில் வைத்தே இக் கேடுகெட்ட செயலைப் புரிந்துள்ளார்கள்.

பேரினவாத ஒடுக்குமுறைச் சிந்தனையும், அவ்வொடுக்கு முறைக்கு வழிகாட்டி நிற்கும் கொடிய சட்டங் களும், அச்சட்டங்களைத் தமது கையில் எடுத்து நிற்கும் படைகளைச் சேர்ந்தோரும் எவ்வித அச்சமும் இன்றி தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் செயல்களைப் புரிந்து வருகின்றனர்.

நாட்டின் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டுச் சீரழிவின் உச்சநிலை காரணமாக என்றுமில்லாத அளவுக்கு நாளாந்தம் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் செயல்களும் அவை சார்ந்த கொலைகளும் நாடு பூராவும் இடம் பெற்று வருகின்றன என்பது ஒருபுறம். அதே வேளை மறுபுறத்தில் தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவும் அவை சார்ந்த கொலைகளும் முற்றிலும் பேரினவாத ஒடுக்கு முறை அடிப்படையிலேயே நடந்து வருகின்றன என்பது மறுக்கப்பட முடியாத ஒன்றாகும்.

இத்தனை இடம் பெற்றும் கூட பெண் ஜனாதிபதியின் தலைமையிலான பொதுசன முன்னணி அரசாங்கம் பாலியல் வல்லுறவுக்கு எதிரான எந்தவொரு சட்டத்ததையும் கொண்டு வரத் தாயாராக இல்லை. ஏன் என்று பார்க்கும் போது பேரினவாத ஒடுக்கு முறை புரிந்து நிற்கும் படையினரைப் பாதுகாக்கும் நோக்குடனேயே அவ்வாறு அரசாங்கம் நடந்து கொள் கிறது என்பது புலனாகும். அத்தகைய கொடுமைகளைப் புரிவோருக்கு சகல விதச் சலுகை களையும் வழங்கிப் பாதுகாப்பதிலேயே அரசாங்கமும் அதன் யந்திரங்களும் மும்முரமாகி நிற்கின்றன என்பதே காணும் உண்மையாகும். படைகளிடமும் சட்டத்திடமும் நீதி நியாயத்தைத் தமிழ் பெண்கள் பெறமுடியாது என்பதையே அடுத்தடுத்து இடம் பெறும் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

## தோழர் தம்பிக்கு எமது அஞ்சலி



தோழர் வீ. சின்னத்தம்பி (தோழர் தம்பி) அண்மையில் இயற்கை எய்தினார். தனது மாணவப் பருவம் முதல் இறக்கும் வரை பொதுவுடமை வாதியாகத் தன்னை நிலைநிறுத்தி அந்த லட்சியத்திற்காக எழுத்தாலும் பேச்சாலும் செயல்பட்டு வந்தவர். தோழர் சின்னத்தம்பி மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை என்னும் பதாகையை உயர்த்தி நிற்பதில் சளைக்காது நின்று வந்தார். தனது உயிர் பிரிந்த பின் இரண்டு கண்களையும் யாழ் மருத்துவமனைக்கு தானம் செய்து கொள்ளும்படியும் உடலை யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு கையளிக்கும் படியும் குடுபத்தினரை வேண்டியிருந்தார். அவ்வாறே அவரது கண்களும் உடலும் வழங்கப்பட்டன. தோழர் தம்பியின் மறைவுக்கு புதிய பூமி அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக் கின்றது.

# நாலு நடக்கு மண் உலகிலே நற்குணன்

## பா.உ.வின் வினோத விளக்கம்

தமிழரசுக்கட்சி பா.உ. ஜோசப் பரராஜசிங்கம் நவசமசமாஜக் கட்சியின் தமிழ் ஏட்டுக் அளித்த நேர்காணலில், பாரதிய ஜனதா கட்சி ஈழத் தமிழர் விடயத்தில் நடந் கொள்ளும் விதத்திற்கான வினோதமான விளக்கம் ஒன்றைத் தந்திருக்கிறா பா.ஜ.க. ஒரு பலமான எதிர்க்கட்சியைச் சந்திக்க வேண்டிய சூழலில் இருப்பதா தான் இப்படி நடந்து கொள்ளுகிறதாம். இந்த வாதத்தின் படி, இந்தியாவி அயற் கொள்கையைத் தீர்மானிப்பது காங்கிரஸா?

இந்த ஞாயம் செல்லுபடியாகும் என்றால், இலங்கையின் ஒவ்வொ அரசாங்கத்தினது இனவாத நடவடிக்கைக்கும் எதிர்க்கட்சி மீது பழி சொல் தப்பிவிட முடியுமல்லவா.

தமிழரசுக்கட்சிக்கும் யூஎன்.பிக்கும் மீண்டும் ஏற்பட்டுள்ள சினேகிதம் பற்றி பத்திரிகையும் எதுவும் கேட்கவில்லை. பரராஜ சிங்கமும் ஒன்றும் சொல்லவில்லை

## தமிழ்த் தேசியவாதிகளின் கவனத்திற்கு

யூகோஸ்லாவியாவில் மிலோஷொவிச் அதிகாரத்தில் இருந்த போது அமெரிக்க கொசோவோ மாகாணத்தில் அல்பனியர்களது பிரிவினைப் போராளிகளை ஆதரித்து பயிற்சியும் அளித்தார்கள். இந்த ஆதரவை நம்பி வளர்ந்த அல்பானிய தேசியவாத கொசோவோவுடன் நில்லாமல் அண்டைநாடான மசிடோனியாவிலும் ஒரு போராட் அலையாக எழுந்தது. இப்போது கொசோவோவில் அல்பானியர்களை அடக் அமெரிக்கா யூகோஸ்லாவியாவின் எசமானர்கட்கு உதவியுள்ளது. மசிடோனியாவி நடக்கும் போராட்டத்தை ஒடுக்கவும் அமெரிக்கா உதவுகிறது.

தேசிய விடுதலையைப் பொறுத்தவரை அமெரிக்காவின் கொள்கை என்ன ஒடுக்குமுறையாளன் அமெரிக்க எடுபிடி என்றால் தேசிய விடுதலை பயங்கரவாதம் ஆகும். ஒடுக்குமுறையாளன் அமெரிக்காவின் அடிமை இல்லை என்றால் எந்த பயங்கரவாதமும் விடுதலைப் போராட்டம் தான். இளிச்சவாயர்கள் அல்பானியர்கள மட்டுமா? தமிழ்த் தேசிய வாதிகள் ஒன்றும் சளைத்தவர்கள் இல்லையே?

## கிரிக்கட் (சூதாட்டம்) பிறந்த நாடு

கிரிக்கட் சூதாட்டம் 1970களிலேயே தொடங்கிவிட்டதாகக் கடைசியாக வந்த தகவல்களின் படி தெரிய வருகிறது. கிரிக்கட் விளையாட்டு ஊழலின் பிறப்பிடமும் கிரிக்கட் விளையாட்டின் பிறப்பிடமும் பிரிட்டனே தான். கிரிக்கட்டில் போல கிரிக்கட் ஊழலிலும் மற்றவர்கள் பிரிட்டனை மிஞ்சி விட்டார்கள். விளையாட்டு, கலைகள் என்பன வணிகமயமாகும் போது ஊழல் தானாகவே அங்கு வந்து விடுகிறது. இன்று ஒவ்வொரு விளையாட்டு வீரரையும் சந்தேகத்துடன் பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் ஒவ்வொரு விளையாட்டின் பின்னாலும் பல்தேசியக் கம்பனிகளும், சூதாட்டக்காரர்களும், புல்லுருவிகளும் கனவான்களாக இருந்து வருகிறார்கள்.

## சென்னை மழைக்கு வன்னியில் குடை

கருணாநிதி சென்னையில் மறியலில் வைக்கப்பட்டதை எதிர்த்து வன்னியில் 'டெலோ' எதிர்ப்பு இயக்கம் நடத்துகிறது. இதே கருணாநிதி ஈழத் தமிழர்களைக் காட்டிக் கொடுத்துக் காரியம் நடத்திய போது இந்த விடுதலை வீரர்கள் யாருக்கும் அவரைக் கண்டித்தும் பேச வாய் வரவில்லை. கருணாநிதி உள்ளே இருந்தாலும் வெளியே இருந்தாலும் ஈழத் தமிழரின் நண்பர் இல்லை. இந்திய இடதுசாரிகள் ஆதரித்தாலும் எதிர்த்தாலும் ஜெயலலிதாவின் அரசியல் அடாவடித்தனம் மாறப் போவதும் இல்லை. நம் முன்னாள் விடுதலைக் காரர்களின் அரசியல் வியாபாரத்தை நடத்த இங்கே உள்ள பிரச்சினைகளை விட அங்கே உள்ளவை அதிகம் பயனுள்ளவை அல்லவா.

## பொது எதிரியும் நண்பர்களும்

நாட்டின் பொது எதிரி புலிகள் தான் என்றும் அந்தப் பொது எதிரியை அழிக்க சகலரும் ஒன்றுபட வேண்டும் என்றும் பிரதமர் கூறி உள்ளார். பிரதமரின் அகாராதிப்படி புலிகள் பொது எதிரி என்றால் அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்திய பிராந்திய மேலாதிக்கம் உலகமயமாக்கல், பல்தேசியக் கம்பனிகள், யுத்த வெறியர்கள்-வியாபாரிகள் போன்ற அனைவருமே நண்பர்கள் என்பதேயாகும். இந்த நண்பர்கள் அனைவரும் ஒன்றுபட்டு தம்முடன் நிற்க வேண்டும் என்றே பிரதமர் கோருகின்றார். அப்படி என்றால் பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு சமாதானம் என்பதெல்லாம் வெறும் புலுடா தானா?

## தொடரும் பழிவாங்கும் படலம்

முன்பு கருணாநிதி ஆட்சியல் இருந்தபோது ஜெயலலிதா அடித்து மயிரைப் பிடித்து இழுத்து சட்டையைக் கிழித்து சட்டசபையில் அட்டகாசம் செய்தவர்கள் கழகக் கண்மணிகள். உடன் பிறப்புகளின் செயலைப் பார்த்து பூரிப்பு அடைந்தவர் கருணாநிதி பின்பு ஜெயலலிதாவைச் சிறையிலும் அடைத்து அக மகிழ்ந்தார். இப்போது கருணாநிதி படுக்கை அறையில் வைத்து கைது செய்யப்பட்டு கன்னத்தில் அறையப்பட்டு சட்டை கிழிக்கப்பட்ட நிலையில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். பழிக்குப் பழி வாங்குவதில் கலைஞரும் அம்மணியும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல.

## குடா நாட்டில் அரசியல் வியாபாரம்

வடக்கில் எந்தவொரு விடயமும் தமக்கு ஊடாக நடக்கவேண்டும் என்றே ஈ.பி.டி.பி கட்சி அதாவது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விரும்புகிறார். அதற்கான முழு ஆசீர்வாதத்தையும் அரசாங்க உயர் மட்டத்திலும் பெற்றிருக்கிறார். அதனால் நியமனம், நிரந்தரம், மாற்றம் இடைநிறுத்தம் யாவுமே அவரது விருப்பப்படி நடப்பதாகப் பேசிக் கொள்ளப்படுகிறது. இதனால் சிறிதர் தலைமை அலுவலகம் அரசாங்க அதிகாரிகளினால் களைகட்டி நிற்கிறதாம். அரசியல் வியாபாரம் என்றால் அப்படித்தானே இருக்கும்.

www.padippakam.com



புதிய பூமி

புதிய பூமி

Puthiya Poomi REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA.

ு 08 யூலை/ஓகஸ்ட் 2001 பக்கம் 12 விலை 10/= சுழற்சி 41

47, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி,
ாழும்பு 11, இலங்கை. தொலைபேசி இல. 435117, 335844

# பேச்சுவார்த்தைக்கு குழிபறிப்போர் சமாதான நாடகம் ஆடுகிறார்கள்

ாார்வே நாட்டின் உதவியுடன் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ாண்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமா என்ற ந்தேகம் பல தரப்புகளிலிருந்தும் எழுப்படுகிறது. பொதுஜன ஐக்கிய ன்னணி தொடர்ந்து ஆட்சியிலிருக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ள ன்றைய நிலையில் நோர்வேயின் சமாதான முயற்சிகள் பற்றி 'நேர்மையாக' ாரும் பேச முடியாது. அரசாங்கம் பாராளுமன்றத்தில் நம்பிக்கை இழந்தால் ாதான முயற்சிகள் பின்தள்ளப்படும் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ான்றவர்கள் கதைப்பதை கேட்டு நகைப்பதைத் தவிர வேறென்ன செய்ய டியும். இதுவரை காலமும் அரசாங்கம் மிகவும் நேர்மையாக சமாதான யற்சிகளை எடுத்து வந்திருந்தால் தானே அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் றுவதுபோன்று சிந்தித்திருக்க முடியும்.

மாதான முயற்சிகளை முன்னெடுக்க பாடுபட்ட நோர்வேயின் விஷேட ாதுவர் எரிக்சொல்ஹெயிம் மீது இலங்கை ஜனாதிபதி சந்திரிகா மாரணதுங்க அதிருப்தி தெரிவித்திருந்தார். இலங்கை அரசாங்கத்தினதும். மிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினதும் உடன்பாட்டின் பேரிலேயே மாதான முயற்சிகளுக்காக எரிக் சொல்ஹெயிம் நியமிக்கப்பட்டார். வரின் முயற்சிகளால் புலிகள் இயக்கம் தொடர்ச்சியாக போர் நிறுத்தத்தில் டுபட்டனர். தெற்கில் எவ்வித தாக்குதல்களிலும் ஈடுபடவில்லை. சமாதான யற்சிகளை முன்னெடுப்பதற்கான இருதரப்பு புரிந்துணர்வு டன்படிக்கைக்கான நகல் தயாரிக்கப்பட்டது. அரசாங்கமே அதில் கையெழுத்திடுவதில் அக்கறை காட்டாமல் இழுத்தடித்து வந்தது. புலிகள் இயக்கத்தின் போர்நிறுத்தத்திற்கு ஏற்ப அரசாங்கம் போர் நிறுத்தத்தில் டுபடவில்லை. அரசாங்கம் அதற்கு சதாகமானதை பெற்றுக்கொள்வதில் ட்டுமே அக்கறையாக இருந்தது என்பது வெளிப்படை. அரசாங்கத்தின் பொறுப்புகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதில் அக்கறையாக இருந்த ரிக்சொல்ஹெயிம்மை சமாதான முயற்சிகளிலிருந்து நீக்கிவிடும்படி ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். அவரை சந்திக்கவும் மறுத்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திடம கலந்துரையாடாமலே நோர்வேயும் இலங்கை அரசாங்கத்துடன் இணங்கி நடந்தது.

சமாதான முயற்சிகளை முன்னெடுக்க எரிக்சொல்ஹெயிம் உட்பட 5 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் றேமன்ட் ஜொகன்சன் தலைமையில் அக்குழு இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மாற்றம் இலங்கை அரசாங்கத்திற்கு நோர்வே இணங்கி போயுள்ளதையே காட்டுகிறது. இதற்கு மத்தியில் யூன் 30ஆம் திகதி புலிகளின் நிலைகள் மீது வான்படை தாக்குதல் தொடுக்கப்பட்டது. நோர்வே சமாதான முயற்சிகள் பற்றி உச்சரிக்க தொடங்கிய காலம் முதல் போர் நடவடிக்கைகளை அரசாங்கம் கைவிடவில்லை. கைவிடுவதற்கான விருப்பத்தையும் தெரிவிக்க வில்லை.

ஜே.வி.பி.யும் சிஹல உருமய போன்ற பேரினவாத கட்சிகளும் ஆரம்பம் முதல் நோர்வே சமாதான முயற்சிகளுக்கு எதிராகவே செயற்பட்டனர். இந்திய அரசும், இந்திய அரசுக்கு சார்பான தொடர்பூடகங்களும் எதிராகவே செயற்பட்டுவந்தன. இந்திய சார்பான இலங்கையின் தமிழ் கட்சிகளும் இந்தியாவின் பாட்டுக்கே ஆடின. நோர்வேயின் முயற்சிகளுக்கு ஆதரவை வழங்கவில்லை.

நோர்வேயின் சமாதான முயற்சிகள் எவ்வித நிபந்தனையுமின்றி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதல்ல. அதனை ஏகாதிபத்திய நலன்களும் அப்பாற்பட்டதாக பார்க்க வேண்டிய அவசியமும் இருக்கமுடியாது. யுத்தத்தை நிறுத்தி சமாதான ரீதியாக அரசியல் தீர்வு காண்பதற்கான அழுத்தத்தை கொடுப்பதற்கான ஒரு அம்சமாக அதனை கொண்டிருக்க முடியும்.

இன்று அவை பற்றியெல்லாம் பேசுவதை விட்டுவிட்டு அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையில்லா பிரேரணை பற்றியே அதிகம் பேசப்படுகிறது. நம்பிக்கையில்லா பிரேரணையிலிருந்து தப்பிக் கொள்வதற்கு 'நோர்வே சமாதான முயற்சிகளை' தூசுதட்டியெடுக்க அரசாங்கம் விரும்புகிறது. யுத்தம் நிறுத்தம், அரசியல் தீர்வு என்பவற்றை பற்றி எதுவுமே கூறாமல் மிகவும் இலகுவாகவும், வசதியாகவும் அரசாங்கத்தை கவிழ்த்துவிட்டு ஆட்சிக்கு வர ஐ.தே.கட்சி எண்ணம் கொண்டுள்ளது. அதற்கு துணைபோவதையே தமிழ் கட்சிகள் விதியாக கொண்டு செயற்படுகின்றன.

நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிக்கவோ எதிர்க்கவோ நோர்வே சமாதான முயற்சிகளை கைவிடவேண்டும் என்று ஜே.வி.பி நிபந்தனை வைக்கிறது. பேரினவாத சக்திகளும் அதனையே நிபந்தனையாக கொண்டுள்ளன. தமிழ் கட்சிகள் நிபந்தனை எதுவுமின்றி ஐ.தே.கட்சியை ஆதரிக்கின்றன. ஈ.பி.டி.பி. நிபந்தனையின்றி அரசாங்கத்துடன் இணைந்து எதிர்க்கின்றது. பேரம்பேசுவதில் கூட சமாதான முயற்சிகளை தூக்கிப்பிடிக்க முடியாத அளவுக்கு தமிழ் கட்சிகளின் நிலை தாழ்ந்து விட்டன.

இந்நிலையில் பேச்சு வார்த்தையும் அரசியல் தீர்வும் சமாதானமும் வென்றெடுக்கப்படுவதற்கு அதிக தூரம் செல்லவேண்டியே உள்ளது. அதற்கான பரந்த வெகுஜனப் போராட்டங்கள் பலதரப்பிலும் முன்னெடுக்கப்படல் வேண்டும். அதற்கான சிந்தனையும் செயல்பாடும் அவசியம்.

ஆசிரியர் குழு

# நாட்டின் பொது எதிரி யார்?

## புலிகளா? அல்லது ?

அண்மையில் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா நாட்டின் இன்றைய பொது எதிரி புலிகள்தான் என்று உரத்துக் கூறி உள்ளார். அத்துடன் அப்பொது எதிரியை ஒழித்துக் கட்டுவதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும் என அழைப்பும் விடுத்துள்ளார். அதாவது நமக்குள் ஒருவரை ஒருவர் எதிர்த்து எதிரிகளாக நின்று கொண்டால் பொது எதிரியான புலிகளுக்கே வாய்ப்பாகி விடும் என்றும் கூறி உள்ளார்.

மேற்படி பிரதமரின் உரை அவருடைய எண்ணக் கருத்து மட்டும் அல்ல. பௌத்த சிங்களப் பேரினவாத நிலையில் உள்ள அனைவரினதும் கருத்தும் அதுவே தான். அவர்களின் தலைமைப் பிரதிநிதியாகவே பிரதமர் தொடர்ந்தும் வெறித்தனமான பேரினவாதப் பேச்சுக்களை அவ்வப் போது வெளியிட்டு வருகின்றார்.

பொது எதிரி என அடையாளப் படுத்துவது அத்தகைய பொது எதிரிக்கு எதிராகப் போராடுவது ஒருவருடைய அல்லது ஒரு கட்சியினுடைய வர்க்க அரசியல் நிலைப்பாட்டைப் பொறுத்த விடயமாகும். ஆளும் நிலையில் உள்ள பௌத்த பேரினவாதிகளுக்கு ஒரு போராடும் இயக்கமும் அவ்இயக்கம் பிரதிநிதித்துவம் செய்யும் ஒடுக்கப்படும் தமிழ் மக்களும் பொது எதிரியாக இருப்பதில் ஆச்சரியம் இருக்க முடியாது.

ஆனால் இத்தகைய பகுப்பு சாதாரண உழைக்கும் ஏகப்பெரும் பான்மையான மக்களுக்கு ஏற் புடையதா என்பதே சிந்திப்பதற்கு உரியதாகும். தமிழ் மக்கள் கடந்து சென்ற நூற்றாண்டு முழுவதும் கட்டம் கட்டமான இன ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டு வந்துள்ளார்கள். அவர்களை ஒடுக்கி வந்தவர்கள் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள நிலவுடமை முதலாளித்துவ ஆளும் வர்க்க சக்திகளாவர். தமது ஒடுக்கு முறைக்கு கையில் எடுத்துக் கொண்ட கருவி பௌத்த சிங்கள மேலாண்மை என்பதையாகும். அதன் மூலம் சிங்கள உழைக்கும் மக்களைத் திசை திருப்பவும் தமது வர்க்க சுரண்டலை மறைத்து மேட்டுக்குடி வாழ்வை வளம்படுத்தி நிலை நிறுத்தவும் முடிந்தது.

கடந்த இரண்டு தசாப்த காலத்தில் இவ் இன ஒடுக்கு முறையை பேரினவாத ஒடுக்கு முறை யுத்தமாக முன்னெடுத்து வந்ததில் ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுசன முன்னணியும் ஒன்றுக் கொன்று சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிருபித்துக் கொண்டனர். எனவே அத்தகைய ஆளும் பேரினவாத சக்திகளுக்கு தமது அடிப்படை அபிலாஷைகள் உரிமைகளுக்காகப் போராடிவரும் எவரும் பொது எதிரியாகவே காணப்படுவர்.

இவ்வாறு காண்பதன் மூலம் நாட்டின் உண்மையான பொது எதிரியையும் அதன் மோசமான நிலைப்பாட்டையும் மறைத்து மக்களை ஏமாற்றி வரும் போக்குத் தொடர்கிறது. சுதந்திரம் என்று கூறப்படுவதற்கு முன்பும் அதற்குப் பின்பும் தமது நிலவுடமை முதலாளித்துவ வர்க்க நலன்களையும் சொத்து சுகபோக வளர்ச்சிகளையும் பாதுகாத்து முன்னெடுத்த ஆளும் வர்க்க சக்திகளே மக்களது பொது எதிரிகளாக இருந்து வந்துள்ளனர். இனத்துவ அடிப்படையில் தமிழ் முஸ்லீம் மலையக மக்களது அடிப்படை உரிமைகளைப் பறித்து அடக்கி ஒடுக்கியதன் மூலம் அம் மக்களின் பொது எதிரிகளாகிக் கொண்டனர். அதேவேளை இதே சக்திகள் தான் வர்க்க ரீதியில் சிங்கள உழைக்கும் மக்களினதும் பொது எதிரிகளாகவும் இருந்து வந்துள்ளனர்.

தமது வர்க்க ஆட்சியைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு இந்நாட்டின் சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகம் உட்பட அனைத்து மக்களது வர்க்க ஐக்கியத்தைக்



குலைப்பதும் அவர்க ளிடையே இன மத மொழி முரண் பாடுகளை வளர்ப்பதும் அடிப்படைத் தேவையாகவும் வழிமுறையாகவும் கொண்டனர். சிங்கள பௌத்த பேரினவாத மேலாண்மைக் கருத்துக்களைப் பரப்பினர். அவற்றை நடைமுறைப்படுத்தும் ஆளும் நிலை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதன் மூலம் சிங்கள மக்களை ஏமாற்றி தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ் மக்களுக்கு எதிராகத் திருப்பிக் கொள்வதில் வெற்றி பெற்றுக் கொண்டனர். இவ் விடயத்தில் வரக்கப் போராட்டம் பற்றி உரத்துப்பேசியும் போராடியும் வந்த பழம்பெரும் இடது சாரிகள் தமது பாராளுமன்ற சந்தர்ப்பவாதப் பாதையின் காரணமாக பௌத்த

**வெகுஜனன்**

சிங்களக் மேலாண்மைக் கருத்தியலுக்குப் பலியாகிச் சரணடைந்தும் கொண்டனர். இது தொடர் கதையாகி பின் வந்த புதிய இடதுசாரிகள் எனத் தம்மைத் தம்பட்டம் அடித்துக்கொண்ட ஜே.வி.பி.யும் அதே பாதையில் தான் சென்று கொண்டிருக்கிறது.

இன்று பௌத்த சிங்கள பேரினவாத மேலாண்மைக் கருத்துக்களை முழுமையாக உள்வாங்கிக் கொண்டுள்ள பச்சை நீலம் சிகப்பு பாராளுமன்ற அரசியல் கட்சிகள் யாவும் தமது அடிப்படை உரிமைகள் வேண்டிநிற்கும் தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ் மக்கள் அனைவரையும் அவர்கள் பக்கத்தில் நின்று போராடும் புலிகள் இயக்கம் உட்பட நேர்மையான இடதுசாரி ஜனநாயக சக்திகள் அனைத்தையுமே பொது எதிரி களாகவே அடை யாளம் கண்டு நிற் கின்றன.

அதேவேளை நாட்டினதும் மக்களினதும் உண் மையான பொது எதிரி யாக இருந்து வரும் ஏகாதி பத்திய சக்திகள் அவர்களது அடிவருடிகளான நிலவுடமை முதலாளித் துவ வாதிகள் பற்றி எத்தகைய கேள்வி யும் எழுப்பப் படுவதில்லை. இன்று உலகமயமாதலின் கீழ் பல்தேசியக் கம்பனிகள் மூலம் சகல வளங்களும் வாரி அள்ளிச் செல்லப்படுகிறதே அவர்கள் பற்றியும் எவருக்கும் அக்கறை கிடையாது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்திய பிராந்தி மேலாதிக்கம் நமது பிராந்தியத்தைத் தமது பிடிக்குள் வைத்திருப்பதற்கு திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றன. யுத்தம் உட்பட அனைத்து சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி தமது உள்நோக்கங்களை பல முனைகள் ஊடாகவும் முன் னெடுத்து வருகின்றனர். அவர்களுக்கு சகல வாய்ப்பு வசதிகளையும் வழங்கி வருவதில் நமது நாட்டின் ஆளும் வர்க்க சக்திகள் தொடர்ச்சியாகச் சேவகம் புரிந்தும் வருகின்றன.

நமது நாட்டின் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டுத் துறைகள் அனைத்தையும் அந்நிய சக்திகளுக்கு கூச்சநாச்சமின்றி தாரைவார்த்துக் கொடுத்து விட்டு அதே அந்நிய சக்திகளின் அரவணைப்பில் வெட்க துக்கம் இன்றி இருந்து வருகிறவர்கள் தான் நாட்டின் துரோகிகளான ஆளும் வர்க்கத்தினர். இவர்கள் தான் உண்மையாக நாட்டின் பொது எதிரிகள். இத்தகைய ஆளும் வர்க்கப் பேரினவாத சக்திகள் தங்களது பொது எதிரி அடையாளத்தை ஏகப்பெரும் பான்மையான மக்களிடமிருந்து மறைத்துக் கொள்வதற்காகவே ஒடுக்க படும் தமிழ் மக்களையும் அவர்களது போராட்ட சக்தியான புலிகளையும் பொது எதிரி என அடையாளம் காட்டுகின்றனர். இது திருடனே தனது திருட்டை மறைக்க திருடன் திருடன் எனச் சத்தமிட்ட கதைபோன்றது தான் பிரதமரின் உரையாகும்.

எனவே நாட்டின் இன்றைய அவல நிலை மாற்றப்படுவதற்கு உண்மையான பொது எதிரி அடையாளப்படுத்தப்பட வேண்டும். அந்தப் பொது எதிரி ஆளும் வர்க்க பேரினவாத ஒடுக்குமுறையாளர்களும் அவர்களுடன் இணைந்து நிற்கும் அந்நிய ஏகாதிபத்திய அயல் மேலாதிக்க சக்திகளுமாவர். இத்தகைய பொது எதிரிகளுக்கு எதிராக ஒவ்வொரு முனையிலும் ஒடுக்கப்படும் அனைத்து மக்களும் ஒன்று பட்டுப்போராடும் நிலையை நோக்கி முன்செல்லல் வேண்டும்

படிப்பகம்

www.padippakam.com



# கரையோர மாவட்டப் பிரச்சினையில் ஆதிக்கச் சிந்தனையில் இருந்து விடுபட வேண்டும்

கிழக்கு மாகாணத்தில் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய கரையோரத் தனி மாவட்டம் என்பது சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் முன்வைத்து வந்த ஒரு கோரிக்கையாகும். மறைந்த அஷ்ரப் காலம் முதல் முன்னாள் அமைச்சர் ஹக்கீம் வரை பொதுசன முன்னணியிடம் வற்புறுத்தி வந்த விடயமும் இத் தனிமாவட்டக் கோரிக்கையாகும். ஆனால் அரசாங்கம் அதனை வழங்குவதற்குத் தயாராக இல்லை. அதற்குக் காரணம் அதன் பேரினவாத நிலைப்பாடேயாகும்.

அரசாங்கம் மட்டுமன்றி ஐக்கிய தேசியக் கட்சியும் தயாராக இல்லை. அவ்வாறு தனி மாவட்டம் வழங்கப்பட்டால் பேரின வாதத்தினால் அதன் நோக்கங்களுக்கு உருவாக்கப் பட்ட அம்பாறை மாவட்டத்தின் பலமும் ஆதிக்கமும் அற்றுப் போய் விடும் என்பதே அதன் அடிப்படையாகும். இவ்விடயத்தில் ஜே.வி.பி. உட்பட சகல பேரினவாதி களும் தத்தமது விளக்கங்களுடன் தங்களது கடும் எதிர்ப்பைக் காட்டி யுள்ளார்கள்.

மறுபுறத்திலே பேரினவாதத்தால் ஒடுக்கப்பட்டுவரும் தமிழ் மக்கள் மத்தியிலிருந்தும் இத்தனி மாவட்டத்திற்கு எதிர்ப்பு கிளம்பியிருந்ததைக் காண முடிந்தது. தமிழர் மகாசபை முதல் தமிழ்க் கட்சிகள் யாவும் எதிர்க்கின்றன.

பொத்துவில் சம்மாந்துறை கல்முனை தேர்தல் தொகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் அம்பாறை மாவட்டத்தின் பேரினவாத அழுத்தங்களால் பாதிக்கப் பட்டு வருகிற அதேவேளை தனிமாவட்டம் வந்து விடும் என்ற அச்சத்தைக் கொண்டிருப்பதாகவே காணமுடிகின்றது. இது மோதிரக் கையால் குட்டு வாங்கினாலும் வெறுங்கையால் குட்டு வாங்குவதா என்ற சிந்தனையின் வெளிப்பாடோ என்றே எண்ணத் தோன்றுகிறது.

மற்றொரு வகையில் தமிழ் மக்கள் தாம் அச்சப்படுவதற்கான காரணத்தையும் கூறுகிறார்கள். அதாவது கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய மூன்று தொகுதிகளிலும் தமிழ்ப் பிரதேச செயலகப் பிரிவுகள் ஏற்படுத்தப் படுவதற்கு முஸ்லீம்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருவது ஏன் என்னும் கேள்வியை எழுப்புகிறார்கள். அந்தக் கேள்வியில் நியாயமும் இருக்கயே செய் கிறது. அத்துடன் ஆலையடிவேம்பு, காரைதீவு பிரதேச செயலகப் பிரிவுகளில் எல்லைப் பிரச்சினைகள் இருந்து வருவதாகவும் சுட்டிக் காட்டுகிறார்கள்.

அதேவேளை கிழக்கின் கரைபோர மாவட்டத்தின் செயற்பாடுகள் தமிழ் மொழியிலும் தமிழ் முஸ்லீம் அதிகாரிகள் மூலமும் முன்னெடுக்கப் படுவதை மிகவும் சாதகமான அம்சமாக முஸ்லீம் தரப்பிலிருந்து கருத்துக்கள் முன்வைக் கப்படுகிறது. இவ்வாறு கூறப்படுவதில் நியாயப்பாடுகள் இருப்பதை மறுக்கவும் முடியாதுள்ளது.

இவ்வாறு ஒரு தனி மாவட்டத்தைப் பெறுவதில் முஸ்லீம் தமிழ் மக்களிடையே ஏட்டிக்குப் போட்டியான கருத்துக்களே பரப்பப்பட்டு பகைநிலை தோற்றுவிக்கப் பட்டு வருகின்றது. கிழக்கில் பேரினவாத ஒடுக்கு முறையின் திட்டமிட்ட நடைமுறைகள் மூலம் தமிழ் முஸ்லீம் மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டு வந்துள்ளமை கடந்த அரை நூற்றாண்டின் வரலாறாகும். தேசிய இனப்பிரச்சினையின் இன்றைய யுத்த நிலைக்கு கிழக்கின் நிலை ஒரு பிரதான பங்கை வகித்து வந்துள்ளது.

எனவே தமிழ் முஸ்லீம் மக்கள் ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டியது பேரினவாத ஒடுக்குமுறையின் அடிப்படைகளையும் அதன் விரிவுபடுத்தல்களையுமே ஆகும். அதை விடுத்து தமக்குள் மோதிக் கொள்வதற்கான பிரச்சினைகளைப் பூதாகரமாக்கிக் கொள்வது எதிரிக்கு உதவுவதேயாகும்.

தனி மாவட்டம் என்பதன் ஊடாக முஸ்லீம். ஆதிக்கம் பற்றிய உள்நோக்கத் தோடு செயல்பட முற்படுவது தவறு ஆகும். அவ்வாறே தனி மாவட்டத்தை முஸ்லீம் விரோதக் கண்ணோட்டத்தில் தமிழ் ஆதிக்க சிந்தனை வழியாக நோக்குவதும் தவறானதேயாகும். இவற்றுடன் ஒவ்வொரு முஸ்லீம் தமிழ் கட்சிகளும் தத்தமது தேர்தல் லாபங்களுக்கான வழி நின்று இப் பிரச்சினையை குறுகிய கண்ணோ ட்டத்தில் பார்ப்பதும் அதுவே ஆளும் பேரினவாத சக்திகளுக்கு உதவுவ தாகவும் அமைந்து வருகின்றது. முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாகக் கொண்ட தனிமாவட்டம் ஏற்படுவது நியாயமான தாகும். அங்கே தமிழ் மக்களது கோரிக் கைகள் நிறைவேற்றப்படுவது அவசியம் ஆகும். இன்றைய யுத்த சூழலில் இப்பிரச்சினையைப் பூதாகரமாக்கினால் அதனால் பயன் அடைவது பேரினவாத ஒடுக்கு முறையாளார்களாகவே இருகக முடியும்.

எனவே முஸ்லீம் தமிழ் மக்கள் இரு பிரிவினரும் உரியகலந்துரையாடல் புரிந்துணர்வு மூலம் ஒருவரை ஒருவர் ஏற்று மதித்து கரையோர மாவட்டத்தைப் பெற்றுக் கொள்வதே சரியானதும் நியாயமானதுமாகும்.

# செட்டியார் தெரு ஊழியர்களின் கோரிக்கை தொடர்ந்தும் மறுக்கப்படுவது ஏன்?

கொழும்பு செட்டியார் தெரு நகைக் கடை ஊழியர்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் அவர்களுக்கு முழு நாள் விடுமுறையை பெற்றுத்தரும்படி கேட்டு தொழில் அமைச்சருக்கு விண்ணப்ப மொன்றை செய்துள்ளனர். மேற்படி கடை ஊழியர்களின் சார்பில் 'டொல்பின் நலன்புரி சங்கம்' அவ்விண்ணப்பத்தை அனுப்பி வைத்துள்ளது.

வாரத்தில் ஒரு நாள் கூட ஓய்வு இல்லாமல் வேலை செய்ய கட்டாயப் படுத்தப்படுகின்ற மேற்படி கடை ஊழியர்கள் அவர்களுக்கு ஞாயிற்றுக கிழமை முழு நாளும் விடுமுறை வழங்கும்படி கடை உரிமையாளர் களிடம் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். கடந்த மேதினத்தன்று அக்கோரிக் கையை முன்வைத்து ஊர்வலத்தையும் கூட்டத்தையும் நடத்தினர். பத்திரிகைகள், தொலைக் காட்சி ஊடாக அவர்களது கோரிக்கை யின் நியாயத்தை எடுத்துக் காட்டினர் துண்டுப்பிரசுர இயக்கமொன்றை நடத்தினர்.

ஆனால் விரல்விட்டு எண்ணக்கூடிய பெரிய கடை உரிமையாளர்களின் விடாப்பிடிவாதத்தினால் அக் கோரிக்கை மறுக்கப்பட்டு விருகிறது. பெரும்பாலான கடை உரிமையாளர் ஞாயிற்றுக் கிழமைகளில் கடைகளை மூடி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கத் தயாராக இருந்தபோதும் சில பெரிய கடை உரிமையாளர்கள் தொடர்ந்து மறுத்து வருவதால் அக்கோரிக்கைக்கு தீர்வு காணமுடியவில்லை.

இதனால் கடைகள் காரியாலயங்கள் ஊழியர்கள் சட்ட ஏற்பாடுகளின் கீழும், மாநகரசபை விதிகளின் கீழும் ஆடை ஊழியர்களின் உரிமைகளை நிலை நாட்டிக்கொள்ள கடை ஊழியர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இக் கடைஊழியர்கள் அவர்களின் கோரிக்கையை வென்றெடுக்க அரசியற் கட்சிகளின் ஆதரவையும் கேட்டுள்ளதாக தெரிகிறது. அத்துடன் கோரிக்கையை வென்றெடுக்கும் வரை தொடர்ச்சியாக பல போராட்டங்களை செய்யவும் அவர்கள் திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது.

காலம் காலமாக உழைத்துக் கொடுக்கின்ற கடை ஊழியர்களின் உரிமைகள் பற்றி பெரிய கடை உரிமையாளர்கள் கவலைப்படுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. செட்டியார் தெரு நகைக் கடை ஊழியர்களுக்கு அதிகமான சலுகைகள் இருப்பதாக அந்த கடை உரிமையாளர்கள் கூறுகின்றனர். அதனால் வாராந்தம் ஒரு நாள் விடுமுறை வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் கூறுகின்றனர். முதலாளித்துவம் வளர்ச்சியடைந்துள்ள நிலையில் தொழிலாளர்களுக்கு ஜனநாயக உரிமைகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. அவற்றைக் கூட வழங்க மறுக்கின்ற செட்டியார் தெரு கடை உரிமையாளர்கள் சட்ட ஏற்பாடு களை மீறுபவர்களாக மட்டுமன்றி மனச்சாட்சியும் இல்லாதவர்களாக இருக்கின்றனர்.

செட்டியார் தெரு நகை வியாபாரம் தற்போதைய வியாபார முறைமைகளுக்கு ஏற்ப ஒருங்கமைக்கபட வில்லை. அதனால் வியாபாரத்தில் பின்னடைவுகளை ஊழியர்களின் உரிமைகளை மறுப்பதால் சரிசெய்ய முடியாது. நகை வியாபாரத்தில் கடை உரிமையாளருக்கும் ஊழியர்களுக்கும் நல்லுறவு நிலவாவிடில் பாதிப்பே விஞ்சும். அதனை உணர்ந்து அந்த பெரிய கடை உரிமையாளர்கள் செயற்பட வேண்டும். இல்லாவிட்டால் கடை ஊழியர்களின் போராட்டங் களுக்கு பதில் சொல்லியே ஆக வேண்டும். ●

# மாவனல்லையில் : ஒரு உரையாட...

மாவனல்லையில் நடந்தது தெரியுமோ?
சொல்லும் படியாய் என்ன நடந்தது!
எரிந்த கடைகள் எத்தனை தெரியுமோ?
எத்தனையாயினும் எல்லாம் திருத்தலாம்!
சூறையாடிய பொருட்களின் அளவு......
எவ்வளவாயினும் மீளவும் தரலாம்!
சேதமான வீடுகள் எத்தனை............
சின்ன விஷயம். சரி செய்திடலாம்
பள்ளிவாசல்கள் இடிப்பட்டனவே.........
புத்தர் சிலைக்கு சேதம் உள்ளதாம்,
எல்லாவற்றையும் மீளக் கட்டலாம்,
இன்னும் பெரியதாய்!
காயம் பட்டோர் தொகை தான் தெரியுமோ?
யாரும் செத்துப் போக வில்லையே!
குற்றவாளிகள் யாரென அறிய............
நட்ட ஈடுகள் வாங்கித் தரவும்
நான் நீ என்று போட்டியுள்ளது!
குற்றிவாளிகள் யாரென.........
குற்றவாளியாய் ஒருவரை ஒருவர்
சுட்டிக்காட்டியவாறாய் உள்ளனர்
குழப்பம் மிகுதி -
விசாரணை வைப்போம்!
விரைவில் இந்த விசாரணை முடிந்து............
அவசரப்பட்டு ஆவதும் உண்டோ-
ஆறுதலான நீதி விசாரணை,
அறிக்கை, ஆய்வு, ஆறப் போடல்-
ஆத்திரம் எல்லாம் அடங்கிய பின்பு
ஆனவிதமாய் நடைமுறை செய்வோம்!
முடிவில் ஒன்றும் நடவாதென்று.........
முடிவில் ஏதும் நடவாதென்று
முன்பு கூட்டியே சொல்ல முடியும்!
மாவனல்லையில் என்ன நடந்தது!
முன்னம் நாங்கள் கண்டிராததா,
இந்த நாடு அழிந்து போனதா,
முஸ்லீம் மக்கள் வாழ வில்லையா!
ஒருநூறாண்டு முன்னம் நாட்டின்
முஸ்லிம்கட்கு எதிராய் நட ந்தவை
மீண்டும் நினைவில் மீளுகின்றது............
பழையதை மீண்டும் கிளறுவதால்தான்
பகைமை இங்கே மூளுகின்றது!
பழையதை யார்தான் கிளறுகிறார்கள்.........
பழைய கதைகள் வேண்டாம் பாரும்,
புதிய வழிகள் உள்ளன,
அதைவிட
மாவனல்லையில் என்ன நடந்தது!
எங்கும் என்றும் நடவாதனவா,
எங்கள் மண்ணில் நிகழாதனவா......
மாவனல்லையில் என்ன நடந்தது!
முன்னம் இங்கு மூண்ட நெருப்பு
இன்னும் இங்கே தொடர்ந்து எரிகுது
சொல்லும் படியாய்ப் புதிதாய் எனினும்
இல்லை, எல்லாம் பழங்கதை எனினும்
செய்யும் படியாய்ப் புதிதாய் உண்டு
நில்லும் ஐயா, சினந்து பொரிகிறீர்............
நிற்க நேரம் இல்லை வருகின்றேன்!
நில்லும் ஐயா, நியாயம் பேசுவோம்.......

# தேசிய கலை இலக்கிய பேரவையின் குடாநாட்டுச் செயற்பாடுகள்

தேசிய கலை இலக்கியப் பேரவை தனது செயற்பாட்டை கொழும்பு மலையகப் பிரதேசங்களில் விரிவுபடுத்தி வரும் அதேவேளை வட பிரதேசத்தில் செயற் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. யுத்த சூழலிலும் பேரவையின் வெளியீடாக தாயகம் கலை இலக்கிய சஞ்சிகை தொடர்ந்து வெளியிடப்படுகின்றது. இளம் தலைமுறை எழுத்தாளர்களுக்கு முதன்மையிடம் கொடுத்து தாயகம் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்க தாகும். அத்துடன் நாடக முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன. மேலும் புத்தகப் பண்பாட்டை விருத்தி செய்வது பற்றிய திட்டங்களும் மேற்கொள்ளப் படுகின்றன.

அண்மைய வாரங்களில் தாயகம் கலை இலக்கிய வாசகர் வட்டங்கள் உருவாக்கம் பெற்றன. யாழ்ப்பாணம். நெல்லியடி, கரவெட்டி. காலையடி பண்டத்தரிப்பு. சாந்தை சில்லாலை. புத்தூர் இருபாலை. கொக்குவில். ஆனைக்கோட்டை போன்ற இடங்களில் கலை இலக்கியக் கூட்டங்களும் கலந்துறையாடல்கள[ளு] இடம் பெற்றன. தாயகம் சஞ்சிகை[யை] மக்கள் மத்திக்கு எடுத்துச் செல்வ[து] அதன் கலை இலக்கியத் தரத்[தை] மேம்படுத்துவது. புதி[ய] எழுத்தாளர்களைப் பயிற்றுவிப்ப[து] போன்ற விடயங்கள் மேறப[டி] கூட்டங்களில் எழுத்தாளர்க[ள்] வாசகர்கள். கல்வியாளர்க[ள்] என்போரால் பேசப்பட்டன.

மேற்படி கூட்டங்களில் தேசியக் கலை இலக்கிய பேரவையின் தலைவ[ர்] கவிஞர் இ.முருகையன். இணைப்பாள[ர்] சோ.தேவராஜா. தாயகம் ஆசிரிய[ர்] க.தணிகாசலம் செயற்கு[ழு] உறுப்பினர்கள் எஸ்.ஆனந்தகுமாரசா[மி] அ.பகீரதன். குமார் ஆகியோர் கலந்[து] கொண்டு கலை இலக்கிய ஆக்[க] முயற்சிகள் பற்றியும் வெளியீடுகளி[ன்] தேவை பரம்பல் சம்மந்தமாகவு[ம்] கருத்துக்கள் வழங்கினர். இ[க்] கூட்டங்களில் எழுத்தாளர்கள். க[லை] இலக்கிய நண்பர்கள் கலந்து கொண[்டு] ஆக்க பூர்வமான கருத்துக்க[ளை] முன்வைத்தனர். ●

படிப்பகம்

www.padippakam.com



# குடிசன மதிப்பீட்டில் மலையகத்தமிழ் மக்கள் எவ்வாறு பதிந்து கொள்வது

முதலாளித்துவ, பேரினவாத அரசொன்றின் குடிசன மதிப்பீட்டை கண்டு தொடைநடுங்க வேண்டிய அவசியம் அடக்கப்படுகின்ற தொழிலாளர்கள், விவசாயிகள் ஒடுக்கப்படுகின்ற தேசிய இனங்களுக்கு இருக்க முடியாதது.

ஆனால் குடிசனமதிப்பீடொன்றின் மூலம் ஒரு இனம் திட்டமிட்டு ஒடுக்கப் படுகின்றமைக்கு நியாயங்களை அரசு தேட முற்படுவதை முறியடிக்க சாத்தியமான வழி வகைகளை செய்ய வேண்டும். அதிலொன்றாக அரசு எதிர்பார்ப்பதைவிட அதிகமான அக்கறையுடன் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

குறிப்பாக மலையகத் தமிழ் மக்களை இந்தியத் தமிழர் என்று பதிவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டே குடிசன மதிப்பீட்டு ஆவணங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. அதன்படி தமிழர்கள் இலங்கை தமிழர் என்றோ இந்தியத் தமிழர் என்றோதான் பதியமுடியும். இலங்கை வாழ் இந்தியவம்சாவளி தமிழர்கள் அனைவரும் மலையகத் தமிழர்கள் என்ற அடையாளத்துட னேயே வாழ்வதால் அவர்கள் தம்மை 'இந்தியத் தமிழர்' என்ற அந்நிய அடையாளத்தை எடுக்க விரும்பவில்லை. அதனால் சிலர் அவர்களை இலங்கைத் தமிழர்கள் என்றே பதிவு செய்துவருகின்றனர்.

மலையத்தமிழ் மக்கள் தனியான தேசிய இனமாக நிலை நிறுத்திக் கொள்ள வேண்டியதால் அவர்கள் இலங்கைத் தமிழர்கள் என்று பதிவதை தவிர்க்கலாம். ஏனெனில் இனவிகிதா சாரத்தை நிலைநாட்டுவது தேசிய இனமென்ற நிலைக்கு மிகவும் அவசியமாகும். அத்துடன் இன்னொரு தேசிய இனமாக பதிந்து கொள்வதனால் இனவிகிதாசாரம் குறையும், வேலைவாய்ப்புகள் உட்பட பலவிதமான இனவிகிதாசார ஒதுக்கீடுகளில் பாதிப்புகள் ஏற்படும். முன்னேறிய இனத்துடன் தமது அடையாளத்தை காட்டிக்கொண்டால் அவர்களின் இனவிகிதாசார உரிமைக்களுக்காகப் போட்டியிடுவது கடினம்.

இலங்கையின் முழு சனத்தொகையிலும் 7.5 விதமாக இருக்க வேண்டிய மலையகத்தமிழ் மக்கள் (இந்தியத்தமிழ் என்ற பதிவு) 5.5 விதமாகவே 1981 இல் கணக்கெடுக்கப்பட்டுள்ளது அவ்விதம் 1996 ஆண்டில் செய்யப்பட்ட முன்னோடி கணக்கெடுப்பில் 3.6 வீதமாக குறைவடைந்துள்ளதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது இதனால் மலையகத்தமிழ் மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் அவர்களுக்கான நிர்வாக அலகுகள், சுயாட்சி அலகுகள். கிராமசேவையாளர் பிரிவு தமிழ்மொழி அமுலாக்கம் போன்றவற்றை உள்ளடக்கிய கோரிக்கைகள் மறுக்கப் படலாம். அதனால் இலங்கைத் தமிழர்கள் என்று பதிவதை தவிர்ப்பது சரியானதாகும்.

குடிசனமதிப்பிட்டு ஆவனங்களின்படி 'மலையத்தமிழ் மக்கள்' என்ற ஏற்பாடில்லாதபடியாலும் மலையகத்தமிழ் மக்கள் என்றே பதிய வேண்டுமென்ற மக்கள் இயக்கங்கள் எதுவும் பலமாக இல்லாதப்படியாலும் எதிர்வரும் குடிசனமதிப்பீட்டில் இந்தியத்தமிழர்கள் என்று பதியவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. இனவிசதாசாரத்தை உறுதிபடுத்துவதற்காக அவ்வாறு பதிவதை விட வேறு வழிவகைகள் இல்லை. அந்த வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்காக மட்டும் (இலங்கை வாழ் இந்தியவம்சாவளி தமிழர்) மலையகத்தமிழ் மக்கள் இந்தியத்தமிழர் என்று பதியலாம்.

ஆனால் நீண்டகால நோக்கில் இலங்கைவாழ் இந்திய வம்சாவளி தமிழர்கள் அனைவரும் மலையகத்தமிழ் மக்கள் என்று பொது தேசிய இன அடையாளத்தை வளர்த்தெடுக்க வேண்டும். அதன்மூலம் இலங்கை நாட்டின் ஒரு தேசிய இன அடையாளத்தை உறுதிப்படுத்தி பேரின இனஒடுக்கலிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

மலையகத்தமிழ் தேசிய இன அடையாளம் 60களிலிருந்து வளர்த் தெடுக்கப்பட்டு வருகிறது. அவ்வடை யாளத்தை அரசாங்க ஆவணங்களுக் காக விட்டுக் கொடுக்க முடியாது. ஒரு போராட்ட வரலாற்றினூடாகவே அவ்வடையாளம் முன்னெடுக்கப்பட்டது. இந்தியக் கூலிகள் என்ற நிலையிலிருந்து பெருந்தோட்டத் தமிழர்கள் என்று மாற்றமடைந்து இன்று மலையகத்தமிழ் மக்கள் என்ற அடையாளம் முன்தள்ளப்பட்டுள்ளது.

எனவே குடிசனமதிப்பீட்டில் இந்தியத் தமிழர் என்று பதிந்தாலும் மலையகத் தமிழ் மக்கள் என்று தேசிய இன அடையாளமே முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே புதிய-ஜனநாயக கட்சியின் நிலைப்பாடாகும். அதனையே மலையக தமிழ் மக்களை பிரிதிநிதித்துவம் செய்யும் அதிகமான அமைப்புகளின் நிலைப்பாடுமாகும். மலையகப்பட்டதாரிகள் ஒன்றியம். உட்பட மலையக புத்திஜீவிகளை கொண்ட அமைப்புகளும் அந்த நிலைப்பாட்டினையே கொண்டுள்ளன. இவை மலையகத் தமிழ் மக்களது தூரநோக்கிலான இருப்பிற்கான அடிப்படை அபிலாஷையாகும்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி தமிழர்களது பிரச்சினைகளின் இக்கட்டான நிலையை பிரித்தானிய ஏகாதிபத்தியமே தோற்றுவித்தது. அதற்கு எதிரான போராட்டம் இலங்கை நாட்டிற்குட்பட்ட தேசிய இன அடையாளத்தின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்பட்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். இந்திய மேலாதிக்கத்தின் அச்சுறுத்தல்களினால் இந்திய அடையாளத்தை எடுக்க முடியாது.

இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்பதனாலும், இந்தியா பெறுமதியான நாகரீகங்களை கொண்டிருப்பதனாலும் இந்திய ஆளும்வர்க்கத்தின் மேலாதிக்க தந்திரோபாயங்களுக்குள் மாட்டிக் கொள்ள முடியாது. இம்மக்கள் இந்தியாவால் கைவிடப்பட்டவர்கள் தான். தமது தேசிய இன இருப்பை அவர்களே போராடி நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

மலையகத் தமிழ் மக்கள் தமக்குரிய தேசிய இன அடையாளத்தைப் பெற்றுக் கொள்வதைச் சிலர் பெரும் பிரச்சினையாகப் பார்ப்பது ஏன் என்பது புரியவில்லை. இவர்கள் இந்திய அடையாளத்தை என்னென்றைக்கும் தம்மீது ஒட்டிக் கொண்டு சலுகை சிலவற்றை அவ்வப்போது பெற்று கூலிக்கார மக்களாக வாழ்வதையே விரும்புகிறார்கள் போதும். எந்தவொரு மக்கள் சமூகத்திற்கும் வளர்ச்சி உண்டு என்பதை மறுத்து ஆளும் பேரினவாத உயர் வர்க்க சக்திகளுக்கு அடிமை விசுவாசம் தெரிவிக்க விரும்புவர்களே மலைகயத் தமிழ் மக்களின் தேசிய இன அடையாளத்தை மறுப்பவர்களாக உள்ளனர். நாம் அப்படிக் கேட்கக் கூடாது, இப்படிக் கோர முடியாது. அதனால் பின் விளைவுகள் வந்து கொள்ளும் என்றவாறு சிந்திப்போர் ஒருவகையான தாழ்வுணர்ச்சியுடை யோரே. இத்தகையோர் ஆளும் வர்க்க காலடிகளில் இருக்கவே தகுதியானவர் களாவர்.

இன்று உலகம் பூராவும் ஒடுக்கு முறைகளை எதிர்த்து தேசிய இனங்கள் போராட்டங்களில், ஈடுபட்டுவரும் வேளையில் மலையகத் தமிழ் மக்களை தமது தேசிய இன அடையாளத்தை தெளிவு படுத்தி முன்னிறுத்துவது அவசியமாகும்.

# பழைய 'தோழர்' ஓ.ஏ. இராமையாவின் புதிய உளறல் எடுபடாது.

மலையகத் தமிழ் மக்களை இந்தியத் தமிழர் என்றே அழைக்க வேண்டும் என்று செங்கொடிச்சங்க பொதுச் செயலாளர் ஒ.ஏ. இராமையா சொல்கிறார். பிரதேசத்தை அடிப்படை யாகக் கொண்டு மலையகத் தமிழ் மக்கள் என்ற தேசிய இனம் உருவாக முடியாது என்று ஒரு கட்டுப்பாட்டையும் விதித்துள்ளார். அரசாங்க ஆவணங்கள் அனைத்தலும் 'இந்தியத்தமிழ்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளதால் அதற்குமாறான அடையாளத்தை எடுக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

நடைபெறவுள்ள குடிசனமதிப்பீட்டில் மலையகத் தமிழர்கள் அனைவரும் இந்தியத்தமிழர் என்றே பதிய வேண்டியிருப்பினும் மலையகத் தமிழ் தேசிய இனம் என்ற அடையாளத்தையே வளர்த்தெடுக்க வேண்டும் என்று மலையகப் பட்டதாரிகள் ஒன்றியம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது. அத்தீர்மானத்துக்கு எதிராகவே இராமையா மேற்படி கருத்தை தெரிவித்திருந்தார்.

'இந்தியா' என்பது இன்னொரு நாடு அந்த 'இந்திய' அடைமொழியை கொண்டு ஒரு தேசிய இனம் அடையாளம் இலங்கையில் வளர்த்தெடுக்கப்படுவது ஆரோக்கிய மானதல்ல என்பதை அவரால் யோசிக்க முடியவில்லை. அரசாங்கங்கள் குத்துகின்ற முத்திரைகளுடன்தான் ஒரு தேசிய இனம் தொடர்ந்து வாழவேண்டுமென்பதில்லை

இடங்கள். பிரதேசங்களின் பெயர்களை கொண்டதாக தேசிய இன அடையாளங்கள் உருவாக முடியாது என்பது மிகவும் பிழையானது. பிரதேச அடையாளங் களை கொண்டு உதாரணங்களை கூறமுடியும். இராமையாவிற்கு விளங்குவதற்கு ஏதுவாக முன்னாள் சோஷலிஸ நாடுகளிலிருந்து உதாரணங்களை பார்க்க முடியும் அனைத்து தேசிய இனங்களும் பிரதேச. இட, மாநில அடையாளத்துடனேயே இனம்காட்டப் பட்டன.

யூகோஸ்லாவிய, செக்கோஸ்லாவிய தேசிய இனங்களின் பெயர்களும் அவ்வாறே அமைந்தன. சீனாவில் 'தீபெத்' என்ற மாநிலத்தின் அடையாளத்தையே தீபெத் மக்கள் பெற்றனர். தேசிய இனங்கள் மொழிகள், மதங்கள், பிரதேசங்கள், நாடுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சிப் பெற்றன என்பதை அவர் மறுப்பதற்கு காரணம் என்ன?

அவரது தொழிற்சங்க காரியாலயத்தில் பழைய மாக்சிச புத்தகங்கள் இருந்தால் அவற்றை தூசு தட்டிப் பார்ப்பது நல்லது. புதிய வளர்ச்சிகளை படிப்பதும் நல்லது. பீட்டர் கெனமன் போன்ற அவரது பழைய ஆசான்களின் 'சிவப்பு புத்தகங்களில் மலையகத் தமிழ் மக்களின் தேசிய இனத்திற்கான அடிப்படைகளை தேடமுடியாத அவரின் தற்போதைய ஆசான் டியூ குணசேகரவிடமும் எதையும் தேடமுடியாது. அவர்களின் பெயர்களை உச்சரிப்பதன் மூலம் தான் இன்னும் கம்யூனிஸ்ட்டாக வாழ்வதாக காட்டித் கொள்ள முயற்சிகளை செய்தாலும் அவர்களின் சிகப்பு பேரினவாதத்திற்கு துணை போகும் தொற்று நோயை மட்டும் இராமையாவால் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒரு காலத்தில் திரிபுவாதிகள் என்று வெறுத்து ஒதுக்கிய 'ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சி' தலைர்களிடம் இராமையாவுக்கு புதிய காதல் ஏற்பட்டது போன்று தற்போது இந்தியதூதரகத்தின் மீதும் காதல் ஏற்பட்டுள்ளது போல் தெரிகிறது. ஏனெனில் இலங்கையில் வாழும் இந்தியவம்சாவளியினர் இந்திய அடையாளத்துடன் இந்தியர்களாக வாழ வேண்டுமென்றே இந்திய தூதரகமும். இந்திய ஆளும்வர்க்கமும் விருப்பம் கொண்டுள்ளன.

மலையகத்தமிழ் மக்களின் பெரும் பான்மையானோரான பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வர்க்க ரீதியாகவும் இனரீதியாகவும் ஒடுக்கப்படுகின்றனர். பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினால் கடுமையாக சுரண்டப்பட்டனர் என்பதையும் இந்திய மேலாதிக்கத்தின் தந்திரோபாங்களால் பயன்படுத்தப் படலாம் அடக்கப்படலாம் என்பதையும் ஏற்பாராயின் இராமையா மலையகத் தமிழ் மக்கள் தனியான தேசிய இனம் என்பதையும் மலையகத் தமிழ் தேசிய இன அடையாளமே தகுந்தது என்பதையும் ஏற்றுக்கொள்வார்.

அவரின் மங்கிய செங்கொடியினூடாக வர்க்கரீதியான விடயங்களை பார்க்காமல் விடுவதே மேல். இராமையா அவர்களே உங்களை நம்பி இலங்கையில் தொழிலாளர்கள் யாரும் இல்லை. எனவே இடைக்கிடை புலம்புவதை விட்டுவிடுங்கள். இல்லா விட்டால் இவ்வாறான பதில்களை ஏற்க வேண்டிய நிலை வரும்.

# எனிக்பெரிக் தோட்டத்தில் மின்சார ஏமாற்று

உடபுசல்லாவ பிரதேசத்தில் இருக்கும் எனிக்பெரிக் தோட்டத்தில் 1997ம் ஆண்டு மின் இணைப்பு வழங்கப் பட்டுள்ளது. ஆனால் இக்குடியிருப்பு களில் மின் விளக்கு எரிந்தும் மண் ணென்னை விளக்கு வைக்க வேண்டிய அவலநிலையே காணப்படுகின்றது.

சுமார் 165 வீடுகள் உள்ள இத்தோட்டத்தில் 1997ம் ஆண்டு மின் இணைப்பு குடும்பம் ஒன்றுக்கு சுமார் 9300/- கடன் வழங்கப்பட்டே கொடுக்கப்பட்டுள்ளது. இதற்காக இன்றும் இவர்கள் மாதாந்தம் தலா 230/- செலுத்தி வருகின்றார்கள்.

இந்த நிலையில் வெளிச்சமில்லாத மின்சாரம் கிடைப்பது ஏன் என தேடிய பொழுதே மின்சாரத்திற்கு உரிய கம்பிகள் போடப்பட்டப் பின்னர் பக்கத்தில் உள்ள கிராமத்திற்கு மின் கம்பிகள் போதவில்லை என்ற காரணத்திற்காக இங்கிருந்து கம்பிகள் கழட்டி செல்லப்பட்டுள்ளது. எனவே மீதமிருந்த கம்பிகளில் 1 பேஸ் மின்சாரத்தை வழங்கிவிட்டு தோட்டத் திற்கு மின்சாரம் வழங்கிவிட்ட தாக பம்மாத்து காட்டப்பட்டு வருகின்றது.

மேற்படி சம்பவம் தோட்டத் தொழிலாளர்கள் பாகுபாடு காட்டப்பட்டு ஏமாற்றப்படுவதற்கு ஒரு சிறு உதாரண மாகும். ஒரு புறம் பேரினவாத நிலை யூடான புறக்கணிப்பு. மறுபுறம் தொழிற் சங்க அரசியல் தலைமைகளின் ஏனோ தானோ என்ற அலட்சியம். இதுவே மலையகத்தில் தொடரும் நிலைமை. தொழிலாளர்கள் சிந்தித்து ஒன்றுபட்டு குரல் கொடுக்க முன்வராத வரை இதை விடப் பெரிதான பிரச்சினை களுக்கு முகம் கொடுக்க முடியாது.

# மலையக இடதுசாரியின் மறைவுக்கு அஞ்சலி



அண்மையில் மறைந்த தோழர். எம்.இராமலிங்கம் மாணவர் பருவப் தொட்டு ஆசிரியனாக, அதிபராக. சிறிது காலம் பாராளுமன்ற உறுப்பினராக, மக்கள் தொண்டனாக வாழ்ந்து மறைந்தவர். பல்வேறு தளங்களில் நின்று செயல்பட்ட போதும் கூட ஆளும் வர்க்கத் திற்கோ அல்லது அவர்களுக்கு சேவை செய்யக்கூடியவர் களுக்கோ அடிபணிந்து செல்லாது மலையக மக்களின் விடுதலைக்காக தனது அரசியல் நிலைப்பாட்டுடன் இறுதிவரை நின்று வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். கஷ்டங்கள் பலமுனைகளிலும் இருந்து வந்து மன அழுத்தங்களுக்கு உட்பட்டிருந்த வேளையிலும் படி இறங்காத ஒரு இடதுசாரியாக தோழர் இராமலிங்கம் தன்னை நிலைப்படுத்தி நின்றார். அவரது மறைவுக்கு புதிய பூமி தனது புரட்சிகர அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.




மலையகத்தின் இராகலை நகரில் புதிய -ஜனநாயக கட்சி நடாத்திய மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் இ. தம்பையா. கட்சியின் பொருளாளர் தோழர் சோ. தேவராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் காண்கிறீர்கள்

படிப்பகம்

www.padippakam.com



# அதிகார மொழியாக ஆங்கிலம்

## 1. ஆங்கிலத்தின் ஆதிக்க நிலை

ஆங்கிலம் இன்று உலக நாடுகள் பலவற்றில் அரச கரும மொழியாக அல்லது இணைப்பு மொழியாக ஏற்கப்பட்டுள்ளது. அதைவிடவும், பிரித்தானிய உலக ஆதிக்கத்தை அடுத்து அமெரிக்க மேலாதிக்கம் நிறுவப்பட்ட பின்பு ஆங்கிலம் உலகின் அதி முக்கியமான வணிக மொழியாகியும் உள்ளது. பிரெஞ்சுக் கொலனியத்தின் சரிவையடுத்துப் பிரெஞ்சு மொழி ஆதிக்கம் செலுத்திய நாடுகளிலும் ஆங்கிலம் ஊடுருவியுள்ளது.

இன்று பல்வேறு அறிவியல். தொழில் நுட்பத் துறைகளிலும் ஆங்கிலத்தின் மேலாண்மை பற்றி யாரும் மறுப்பதற்கில்லை. அதைவிடவும், வணிகம், அரசியல், சட்டம் போன்ற துறைகளிலும் ஆங்கிலத்தின் ஆதிக்கம் உண்மை யானது. அந்த அளவுக்கு, ஆங்கிலம் உலகப் பொது மொழி யாக உள்ளது என்பதில் ஐயமில்லை.

ஆங்கிலத்தின் மேலாதிக்க நிலை யையும் பல்வேறு துறைகளிலும் அதன் மூலம் கருமமாற்றும் வசதியையும் முன்வைத்து, ஆங்கிலமே மனிதரின் உயர்வுக்கு அவசியமான மொழி என்ற வாதம் பரப்பப்பட்டு வருகிறது. தாய்மொழிக் கல்வி யையும் தாய் மொழி மூலமான கல்வியையும் புறக்கணிக்கவும் சிலர் முற்படுகின்றனர். அதுமட்டுமன்றி, ஆங்கிலமல்லாத மொழிகள் மூலம், குறிப்பாக ஆசிய மொழிகள் மூலம் நவீன அறிவு பெறுவது இயலாது என்ற கருத்தும் பரவலாக்கப்பட்டு வருகிறது.

இன்று ஆங்கிலம் பற்றிக் கட்டி எழுப்பப்படுகிற மாயத் தோற்றம் கொலனிய யுகத்தில் ஆங்கிலம் பற்றி உருவாக்கப்பட்ட மாயத் தோற்றத்தைப் பலவழிகளிலும் ஒத்தது. அன்று ஆங்கில மூலம் கல்வி கற்றவர்கட்கு இருந்த சமுதாய அங்கீகாரம் போல இன்றும் ஒரு புதிய அங்கீகாரம் தென்னாசியா முழுவதிலும் காணப்படுகிறது. எப்படிப் பழைய கொலனிய எசமானர்களும் அவர்களது உள்ளூர் எடுபிடிகளும் பாவித்த நிருவாக மொழியாக ஆங்கிலம் இருந்ததோ அப்படியே இன்றும் ஆங்கிலம் புதிய நவகொலனிய எசமானர்களின் மொழியாகவும் அவர்களது உள்ளூர் முகவர்களதும் அதிகாரத்தின் மொழியாகத் தொடர்கிறது. இதை விளங்கிக் கொள்வதற்கு இலங்கையிற் கடைசி இருபது ஆண்டுகளுள் ஆங்கிலம் மீளவும் வென்றுள்ள சமூக முக்கியத்துவத்தைக் கவனித்தால் நன்கு விளங்கும்.

## 2. முன்னாள் கொலனிகளில் ஆங்கிலத்தின் இரண்டாவது எழுச்சி

கொலனிய எதிர்ப்பு ஆங்கில மொழி மீதான துவேஷமாக வெளிப்பட்ட ஒரு காலமும் சூழ்நிலையும் இருந்தன. ஆங்கில மொழிமூலம் அதிகாரம் செலுத்திய ஒரு தரகு முதலாளிய வர்க்கத்திற்கும் அதற்கு ஊழியம் செய்து வந்த வசதிபடைத்த ஒரு உயர் நடுத்தர வர்க்கத்திற்கும் எதிராக இருந்த தேசிய முதலாளிய உணர்வுகள் தாய் மொழிக் கல்விக்கும் ஆங்கிலத்தின இடத்தில் தேசிய மொழிகளை நிர்வாக மொழி களாக்கும் ஆவலுக்கும் காரணமாகின. ஆயினும், தேசிய முதலாளிய வர்க்கங்களின் குறுகலான பார்வையின் விளைவாகத். தாய் மொழியை வளர்ப்பதென்பது சகோதர இனங்களின் மொழி உட்பட்ட சமூக அடையாளங்களை நசுக்குவது என்ற போக்கும் ஊக்குவிக்கப்பட்டது.

தேசிய முதலாளியத்தின் இயலாமை காரணமாக நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாகப் பலவேறு தொழில்நுட்பத் துறைகளில் பயிற்சி பெற்றவர்கள் அயல்நாடுகளில் வேலை தேடிப் போக வேண்டிய சூழ்நிலை உண்டானது. அவ்வாறு போக நேர்ந்த நாடுகளில் ஆங்கிலமே பிரதான மொழியாக அல்லது தொழில் வாய்ப்புக்களைக் கட்டுப்படுத்துவோரின் மொழி யாக இருந்தது. எனவே தாய் நாட்டில் வேலை வாய்ப்பு இல்லாத தாலோ கூடிய வருமானம் கிடைக்கும் என்ற சூழலாலே வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக் களைத் தேடினோர் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்தினர்.

> உண்மையான கல்வி விருத்திக்கு வேறு எந்த மொழியும் தாய் மொழிக்கு மாற்றாக இருக்க முடியாது.

ஒரு நாட்டின் பொருளாதாரம் அதன் பயிற்றப்பட்ட தொழில் வல்லுனர்களை ஏற்றுமதி செய்வதிலேயே தங்கி இருக்கிறது என்றால் அது அந்த நாட்டின் பொருளாதாரம் எவ்வளவு சீரழிந்துள்ளது என்பதையே காட்டு கிறது. ஒரு நாட்டின் தொழில் வல்லுனர்களது திறமைகளை அந்த நாட்டால் பயன்படுத்த இயலவில்லை என்பது அந்த நாட்டில் தொழில் வளர்ச்சி இல்லை என்பதையே சுட்டிக் காட்டுகிறது. இதற்கும் பலவேறு விளக்கங்கள் இருந்தாலும், அடிப்படையான காரணம், மூன்றாமுலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி திட்டமிட்ட முறையில் நசுக்கப்பட்டு வருவதேயாகும்.

## 3. தாய்மொழிக் கல்வியின் பயன்

துரிதமான சமுதாய முன்னேற்றமும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியும் ஏற்பட்டுள்ள உலக நாடுகளில் தாய்மொழிக்கல்வி பெரும் பங்காற்றி யுள்ளது. மக்களுக்கான அடிப்படைக் கல்வியின் பரவலாக்கத்தில் தாய் மொழிக்கு மாற்றாக வேறு எந்த மொழியும் இருக்கமுடியாது.

மொழி என்பது வெறுமனே கருத்துப் பரிமாறலுக்கான கருவியாகப் பார்ப்பது இயந்திரத் தன்மையான சிந்தனை. மொழிக்கு ஒரு சமூக அடையாளம் உண்டு. அதை விட முக்கியமாக ஒரு சமூகத்தின் சிந்தனை வளர்ச்சியும் சிந்தனை மரபும் அதன் மொழியுடன் நெருக்கமாகப் பிணைந்துள்ளன. தனிமனிதச் சிந்தனை வளர்ச்சியுடனும் சமூக உறவுகளுடனும் தம்மைச் சூழ உள்ள உலகை விளங்கிக்கொள்வதிலும் தாய்மொழியின் பங்கு பெரியது.

தாய்மொழிக்குப் பிரதியாக இன்னொரு மொழியைப் பயன்படுத்துவதானால் தாய்மொழியின் சமூகப் பயனை இல்லாதொழிக்கிறதன் மூலமே அதைச் செய்ய முடியும். ஆபிரிக்கக் கண்டத்தி லிருந்து அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்ட மக்கள் விடயத்திலும் இந்தியாவிலிருந்து கூலிகளாக மேற்கிந்தியத் தீவுகள், ஃபிஜி, மடகஸ்கர் போன்ற பகுதிகட்கு இடம் பெயர்க்கப் பட்ட மக்கள் விடயத்திலும் பல ஆபிரிக்க நாடுகளின் விடயத்திலும். அமெரிக்கப் பழங்குடிகளது விடயத்திலும் அவுஸ்திரேலியப் பழங்குடிகள் விடயத்திலும் இவ்வாறான மொழிப் பறிப்பு நடந்துள்ளது.

ஆங்கிலமும் ஃபிரஞ்சு மொழியும் திணிக்கப்பட்டுத் தாய்மொழியின் இடத்தைப் பிடித்ததாலும் தாய்மொழியின் இழப்பால் இச் சமூகங்கள் கண்ட பின்னடைவு பெரியது.

ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் அதன் மரபிற்கு ஒரு முக்கியமான பங்கு உள்ளது. இந்த மரபின் பயனுள்ள பலவேறு அம்சங்களை முறையாக உணர்வதிலும் தாய் மொழியின் பங்கு முக்கியமானது. எனவே மாணவர்களின் மனவளர்ச்சி, புதிய விடயங்களைக் கற்றல் போன்ற விடயங்களில் மட்டு மல்லாமல் ஒரு சமுதாயத்தின் பொறுப் பான உறுப்பினர்களாக அவர்கள் வளர்வதிலும் தாய்மொழியின் பங்குக்கு வேற்று மொழி எதுவும் ஈடாகாது.

## 4. இலங்கையில் தாய்மொழிக் கல்வி

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பிருந்தே தாய்மொழிக்கல்வியின் முக்கியம் உணரப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் டொக்டர் கீறீன் தமிழில் மருத்துவக் கல்விக்கு ஆற்றிய சேவையை இங்கு நினைவு கொள்ள லாம். தொழிற் பயிற்சிக்கான தமிழ் நூல்கள் பிற துறைகளிலும் உருவாக்கப் பட்டுள்ளன. சிங்களத்தை யும் தமிழையும் நவீன அறிவுத் துறை கட்கு ஏற்ற மொழிகளாக வளர்ப்பது பற்றிய அக்கறை பல வேறு பெரியோரால் மேற் கொள்ளபபட்டது. எனினும் பிரித்தானிய கொலனி ஆட்சியின் கீழ் தாய்மொழிப் பாடசாலைகள் ஆங்கில மொழிப் பாடசாலைகளை விடக் கீழான வையாகவே நடத்தப்பட்டன. எனவே. கிறிஸ்துவப் பாடசாலை கட்குப் போட்டி யாக பௌத்த. சைவ. இஸ்லாமிய பாடசாலை களை நிறுவின வர்கள் கூட ஆங்கில வழிக் கல்விக்கே முதன்மை கொடுத்தனர். இதற்கான சமூக பொருளாதாரக் காரணங்கள் பல.

எப்படியாயினும் மொழிவழித் தேசிய வாதத்திற்கும் ஆங்கிலமொழி ஆதிக்க த்துடனான சமரசத்திற்கும் நடுவே பெரிய முரண்பாடுகள் இருந்தன. அதே வேளை, சிறிது முற்போக்கான தேசியவாதிகளும் இடதுசாரிகளும் தாய் மொழி மூலமான கல்வி என்ற கருத்தை நாட்டின் சுதந்திரத்திற்கு முன்பிருந்தே வற்புறுத்தி வந்துள்ளனர். அத்துடன் பாடசாலையில் இலவசக் கல்வியும் பின்பு பல்கலைக் கழகத்தில் இலவசக் கல்வியும் என்ற கொள்கையும் ஏற்கப்பட்டது. இதன் விளைவாகவே இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வந்த ஒரு ஆய்வறிவாளர் பரம்பரை உருவானது.

> ஆங்கிலம் இல்லாமல் எதிர்காலம் இல்லை என்பது அதிகார வர்க்கத்தின் மோசமான ஏமாற்றாகும்.

குறிப்பாகத் தாய்மொழி மூலமான பாடசாலைக் கல்வி முற்றாக நடைமுறைப் படுத்தப்பட்ட பின்பே கிராமப் புறத்து மாணவர்கள் பல்கலைக் கழகங்கட்குப் போக முடிந்தது. மிகக் குறைந்தளவு ஆங்கில அறிவுடனேயே பல்கலைக்கழகம் புகுந்து பட்டப்படிப்பை ஆங்கிலத்தில் முடித்தவர்கள் உள்ளனர். பல்கலைக்கழகக் கல்வி தாய்மொழியில் கிடைத்த போது தாய்மொழியிற் கற்றவர்கள் உள்ளனர். இவர்களில் எவருமே தம்முடன் சமகாலத்தில் ஆங்கில மூலமே கற்றவர்களை விட எவ்வகையிலும் தகுதியில் குறைந்த வர்கள் அல்ல.

தாய்மொழிக் கல்வி விடயத்தில் இலங்கை இந்தியாவை விட மும்முரமாக செயற்பட்டது. எனினும் இதை முழுமையாக நடைமுறைப் படுத்துவதில் பல சிக்கல்கள் இருந்தன.

## 5. தாய்மொழிக் கல்விக்கு குழிபறிப்பு

தேசிய உணர்வு காரணமாக முனைப்புக் கண்ட தாய்மொழிக்கல்வி இயக்கம், சில இடங்களில் குறுகிய தேசியவாதத்தின் எல்லைகளைத் தாண்டமுடியாமல் தத்தளித்தது என்பதும் உண்மை. சிங்களம் படித்தால் மட்டுமல்ல, சிங்களத்தில் கருமமாற்ற முடிந்தாலே தொழில் கிடைக்கும் என்ற அச்சம் எப்போது உருவானதோ, அப்போதே தமிழ் நடுத்தர வர்க்கத் தினரிடையே ஆங்கில மொழி மூலமான உயர்கல்வி பற்றிய அக்கறை மீளவும் உயிர்பெற்றது. இந்த நாட்டில் இல்லாத எதிர் காலத்தை வெளிநாட்டி லாவது தேடலாம் என்ற சபலமும் அதை விட முக்கிய மாகத் தமிழில் தொழில்நுட்பக் கல்வி பெற்றால் இலங்கையில் வேலைவாய்ப்பே இராது என்ற பயமும் தமிழர் நடுவே வலுத்தன.

சிங்களப் பேரினவாதத்தின் மொழிப்பற்று சிங்கள மொழியை வெகுசனங்களுக்குப் பயனுள்ள ஒரு நவீனமொழியாக்குவதில் காட்டிய ஆர்வம் 1970களிலேயே தளரத் தொடங்கி விட்டது. பாடசாலையில் ஆங்கில மூலம் கல்வி கற்கும் வசதிகள் சிறு அளவி[ல்] எனினும் புகுத்தப்பட்டன. குறுகிய தேசிய வாதத்தையும் இன மத அடிப்படையிலான மேலாதிக் கத்தையும் முதன்மைப்படுத்தி[ய] ஒரு சிங்களத் தேசியவாதத் தலைமையால் தாய்மொழி மூலமான கல்வியை உயர்கல்வி, தொழில் நுட்பம், மற்றும் பிற தொழி[ல்] சார்ந்த கல்வித் துறை கட்கு நீடிக்கவும் அதைச் சமூக வாழ்வுட[ன்] இணைக்கவும் வழிகாட்ட முடியவில்லை.

1956க்குப் பிறகு தமிழிலும் சிங்களத்திலும் கலைச்சொற்கள[ை] உருவாக்கவும் ஆங்கிலப் பாடநூல்களை மொழி பெயர்க்கவு[ம்] எடுக்கப்பட்ட முயற்சிகள் உற்சாகத்துடனேயே மேற்கொள்ள[ப்] பட்டன. கலைச் சொல்லாக்கம் பல குறைபாடுகள் நடுவிலு[ம்] கணிசமான அளவுக்கு வெற்றிகரமாகச் செய்யப் பட்டது. புத்தகங்களின் மொழி பெயர்ப்பு எதிர்பார்த்த அளவு வெற்[றி] பெறவில்லை.

தாய்மொழியிலும் சம்பந்தப்பட்ட துறை யிலும் ஆளுமை உள்ளோர் போதாமை ஒரு முக்கிய காரணம் என்றாலும், தமிழ் சிங்கள அறிஞர்கள் நடுவே தாய் மொழிக் கல்வி பற்றிய தீவிர அக்கறை யுடையோரின் தொகை குறைந்தது. எனவே 1970களை ஒட்டி ஏற்பட்ட தேக்கம் 1977க்குப் பின்பு ஒரு சரிவாகியது.

## 6. கல்வித் துறையின் சரிவு

தாய்மொழிக் கல்வி வளர்ச்சியின் போதாமைக்குக் கல்வித் துறையில் எற்பட்ட தேக்கமும் சீரழிவும் முக்கிய பங்களித்தன. கொலனிய ஆட்சிக்காலம் முதலாகக் கல்வியின் இலக்கு அரசாங்க உத்தியோகம் என்ற ஒரு மனோபாவம் இருந்து வந்தது. பல்கலைக் கழகப் பட்டதாரிகளின் வேலையின்மை காரணமாக மருத்துவம் பொறியியல் ஆகிய துறைகட்கான போட்டி வலுத்தது. இதன் விளைவாக ஏற்பட்ட தரப்படுத்தல் போன்ற அரசியற் பிரச்சனைகள் ஒரு புறமிருக்க, விஞ்ஞானக் கல்விக்கான தேவை அதிகமாகிய அதே வேளை முறையான விஞ்ஞானக் கல்வியை நாட்டின் எல்லாப் பகுதிகளில் உள்ள பாட சாலைகளிலும் வழங்க அரசாங்கங்கள் தவறிவிட்டன.

அரசியற் காரணங்கட்காக விஞ்ஞானக் கல்வியில் ஆய்வுகூடப் பரிசோதனை மெல்ல ஓரங்கட்டப்பட்டது. விஞ்ஞான ஆய்வுகூட. விஞ்ஞானச் செய்முறைக் கல்வி வசதிகளை எல்லாப் பாடசாலை கட்கும் வழங்குவதற்குப் பதிலாக உயர் கல்விக்கு அவசியமான விஞ்ஞானச் செய்முறையின் அளவு படிப்படியாகக் குறைக்கப் பட்டது. கடந்த சில ஆண்டுகளில். விஞ்ஞான உபகரணங் களையே கண்டிராத மாணவர்கள் மருத்துவம், பொறியியல், விவசாயம் போன்ற கல்வித் துறைகளில் பட்டப்படிப்புக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதற்கும் மேலாக 1970களில் சிறிய அளவில் தொடங்கிய ரியூஷன் முறை 1970களில் ஒரு பெருந் தொழில் என்று சொல்லக் கூடிய அளவுக்கு வளர்ச்சி பெற்றுக் கடந்த பத்து ஆண்டுகளில் பாடசாலைகட்கு மாற்றீடான ஒரு நிறுவனமாகிவிட்டது. அரச பாடசாலைகள் கிரமமாகப் புறக் கணிக்கப்பட்டு வந்துள்ளன. போதிய வசதிகள் இல்லாத நிலையில் பாடத்திட்டத்திலும் கற்பிக்கும் முறைகளிலும் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் மேலும் குழப்பத்திற்கே வழி வகுத்தன.

முற்றிலும் அரசாங்கக் கட்டுப் பாட்டிலேயே எல்லாப் பாடநூல்களும் தொகுக்கப்பட்டு வழங்கப்பட்டுவந்த சூழலில், படிப்பு என்றால் சோதனையில் தேறுவதற்கான பயிற்சி என்ற நிலை உருவான பின்பு மாணவர்களின் சமூக, விஞ்ஞான அறிவை வளர்க்கக் கூடிய நூல்கள் வருவது மிகவும் குறைந்து விட்டது. அதைவிட சோதனைகளில் தேறுவதற்குத் தேவையானவை தவிர்ந்த எதையுமே நமது பாடசாலைக் கல்விமுறை ஊக்குவிக்கவில்லை என்பது இன்றைய கல்வித் துறையின் நிலையை நன்றாக அடையாங் காட்டுகிறது.

## 7. தனியார் பாடசாலைகளின் மீளுயிர்ப்பு

தேசிய முதலாளிய அதிகாரத்துக்கும் கிறிஸ்துவ மத பீடங்கட்கும் ஏற்பட்ட முரண்பாட்டின் விளைவாக மத நிறுவனங்களின் ஆளுமைக்குட்பட்ட அரசாங்க மானியம் பெற்ற பாடசாலைகள் தனித்துச் சொந்தச் செலவில் இயங்காத பட்சத்தில் அரசின் பொறுப்பில் எடுக்கப்படும் எனத் தீர்மானித்தது. இது நாடு முழுவதற்கும் பொதுவான ஒரு கல்வி முறையை உருவாக்கவும் தாய்மொழிக் கல்விக் கொள்கையைக் குறுக்கீடின்றி நடை முறைப் படுத்தவும் வசதியாயிற்று.

தனியார் பாடசாலைகளாக இயங்கிய சில பாடசாலைகளும் அரசாங்கத்தின் கல்விக் கொள்கைக்கு உடன் பாடான முறையில் செயற்பட்டன. 1977க்குப் பின்பு மீளவும் அதிகாரத்திற்கு வந்த புதிய பணக்கார வர்க்கமும் தமது சமுதாய மேலாதிக்கத்தை மீள நிலை நிறுத்துவதில் முனைப்பாக இருந்தனர். இவர்களின் தேவையை ஒட்டியே ஜே.ஆர்.ஜயவர்தன தலைமையிலான அரசாங்கம் கல்வித்துறையில் படிப்படியாகச் சில மாறுதல்களை இயலுமாக்கியது. தனியார் மருத்துவக் கல்லூரி இவற்றுள் ஒன்று. இது தனியார் பல்கலைக் கழகங்களை உருவாக்க இயலுமா என்று ஆழம் பார்த்த முயற்சி. ஆனால் வெற்றி பெறவில்லை. மற்றது 'சர்வதேச' பாடசாலைகள்' எனப்படும் ஆங்கில மொழி வழிப் பாடசாலைகள்.

ராஜதந்திர சேவையில் உள்ள அயல்நாட்டோர் போன்றவர்கட்கான சர்வதேசப் பாடசாலை ஒன்று இந்த நாட்டில் இருந்து வந்தது. தான். ஆனால் உள்நாட்டவரின் குழந்தை கட்காக ஆங்கில மூலம் கல்வி புகட்டும் பாடசாலைகள், தங்கள் குழந்தைகளை மேல் நாடுகளில் படிப்பதற்காகப் பயிற்றுவிக்கும் நோக்கம் கொண்ட வசதி படைத்த பெற்றோரின் தேவை சார்ந்தே உருவாகின. இதைவிட அயல்நாட்டுப் பல்கலைக் கழகங்களுடனான ஒத்துழைப்பு என்ற அடிப்டையிலும் வேறு சில அடிப்படையிகளிலும் தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுகிற முயற்சி தொடர்கிறது.

தொடர்ச்சி 7ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# ஜே. ஆரின் மாவட்ட சபைப் பொறியில் அண்ணன் அமிர்தலிங்கம் வீழ்ந்து கொண்டார்

ஜே.ஆர். ஜயவர்த்தன மாவட்ட அபிவிருத்திச் சபைகளை உருவாக்குவதன் மூலம் தேசிய இனப் பிரச்சனையைத் தீர்க்கப் போகிறார் என்ற எதிர்பார்ப்பு அமிர்தலிங்கத்திடம் இருப்பதற்கான நியாயம் 79அளவிலேயே வற்றி விட்டது. 79அளவில் வடக்கில் அரசாங்கம் தன் இராணுவ வலிமையைக் கணிசமாக அதிகப் படுத்திவிட்டது 1978ல் பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்ட போதே இதற்கான திட்டம் உருவாகி விட்டது என்பதை அமிர்தலிங்கம் அறியாமல் இருந்திருக்க முடியாது. த.வி.கூட்டணி தனக்கும் தீவிரவாத இளைஞர்கட்கும் ஒரு தொடர்பும் இல்லை என்று சொன்னாலும் அதை அரசாங்கம் நம்பவில்லை. உண்மை யான நிலை யாதெனில். அமிர்தலிங்கம் தலைமை தமிழ் இளைஞர்களைப் பயன்படுத்தித் தனது செல்வாக்குக்கு உட்பட்ட ஒரு குழுவை வளர்த் தெடுத்த அதே வேளை. அத்தலைமை யால் கட்டுப் படுத்த முடியாத பிற குழுக்களும் உருவாகி வந்தன.

த.வி.கூட்டணித் தலைமையின் வரலாற்றை அறிந்த தீவிரவாத இளைஞர்கள் அதன் தமிழீழப் பிரகடனத்தை ஏற்றாலும் த.வி.கூ. அதை வென்று தரும் என்று நம்பியதாகக் கூற முடியாது. தேர்தலின் பின் ஒரு வருடத்திற்கு உள்ளேயே த.வி.கூ. தலைவர்களிற் பெரும் பாலோருடன். குறிப்பாக அமிர்தலிங்கத் துடன். பலருக்குக் கசந்து விட்டது. பழமையாகவே பாரளுமன்றப் பதவியைப் பயன்படுத்தி எல்லாத் தமிழ் இளைஞர் களையும் திருப்தி செய்திருக்க முடியாது. இந்த நிலையில் ஒரு வலிய. கைமையான அரசாங்கத்தை வெளிவெளியாக எதிர்த்து மோதவும் முடியாமல் அனுசரித்துப போகவும் முடியாமல் திண்டாடிய த.வி.கூ. தலைவர்கள் முன்பு இருந்த தெரிவு களில் ஒன்று பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதாகும். இதற்கு அவர்கள் என்றும் ஆயத்தமாக இருக்கவில்லை. இளைஞர் குழுக்களின் வன்முறை சிறிது சிறிதாக வலுத்தது. இதை அடக்கி ஒடுக்குவது என்ற அரசாங்கக் கொள்ளை அது எதிர்பார்த்ததற்கு மாறான விளைவு களையே ஏற்படுத்தியது. த.வி.கூ தலைமைக்கும் தீவிரவாத இளைஞர்கட்கும் இடையே நெருக்கம் இருப்பதாகவும் இளைஞர்களைக் கட்டுப்படுத்த விரும்பாமல் த.வி.கூ. அவர்களை மேலும் ஊக்குவிப்பதாக ஆளுங்கட்சியி லிருந்து தீவிர சிங்களப் பேரினவாதிகள் முன் வைத்த குற்றச்சாட்டை மறுப்பதானால் த.வி.கூ. அரசாங்கத்துடன் சேர்ந்து அவர்களை ஒடுக்குவதற்கு உதவுவதை விட்டால் வேறு வழியில்லை. ஆனால் அதனைச் செய்வது முழுமையான தற் கொலைக்கு ஒப்பானது என்பதை அமிர்தலிங்கம் அறிவார். அதை விட. த.வி.கூ. தலைவர்களுள் சிலர், குறிப்பாக யோகேஸ்வரன் போன்றோர், இளைஞர்கள் மீதான கடும் நடவடிக்கையை ஏற்க மாட்டார்கள் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். அவரைப் பலவீனப்படுத்துவதற்குத் தருணம் பார்த்திருந்த சந்திரகாசன் தனது கூட்டாளிகளான கோவை மகேசன் போன்றோர் மூலமாக உள்ளிருந்தே நெருக்குவாரங்களைக் கொடுத்து வந்தனர்.

த.வி.கூ. தலைமையைப் பொறுத்த வரை. போராடித் தமிழீழத்தை வென்றெடுக்க முடியாது என்பது போக. ஜே.ஆர்.ஜயவர்தன தயவில் நம்பகமான நியாயமான தீர்வு ஒன்று கிடைத்தாலொழிய வேறு வழியில்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இதை ஜயவர்தன நன்கு அறிந்திருந்தார்.

இல்லாமல் செய்வதும் யூ.என்.பி. ஆட்சியின் ஒரு முக்கியமான வேலைத் திட்டமாக இருந்தது. மறுபுறம், யூஎன்.பி யின் அதிரடி நடவடிக்கைகளில் இருந்து ஸ்ரீ.ல.சு. கட்சியை மீட்கும் முயற்சிகள் தொடங்கின. இச் சூழ் நிலையில் திருமதி பண்டாரநாயகவின் அரசியல் உரிமைகளைப் பறிக்கும் முயற்சியும் 'சட்ட ரீதியாக' மேற்கொள்ளப்பட்டது.

ஏற்றுக் கொண்டார்.

இந்த வில்சன் ஒரு அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர். 1970ல் இலங்கையில் சோஷலிஸ ஆட்சி வந்துவிட்டது என்று வெறுத்துக் கனடா போன தேசபக்தர். நாடுவிட்டுப் போனாலும் வர்க்க பாசம் கெடாத முதலாளிய விசுவாசி. 1983ம் ஆண்டு வன்முறைக்குப் பின்னரே ஜே.ஆர். ஜயவர்தனவின் பேரினவாதம் பற்றியும் நேர்மையீனம் பற்றியும் தான் அறிந்ததாகச் சொன்ன வில்சன், 1983க்குப் பிறகும் தனது அரசியல் தரகுப் பணியைக் கைவிடவில்லை.

ஜே.ஆர். ஜயவர்தன த.வி.கூட்டணியை ஏமாற்றும் நோக்குடன் தயாரித்த

பூரணமான முட்டாளாக்குவதற்குச் செய்த பேருதவியாகும்.

அது மட்டுமின்றித் தனது மைத்துனர் சந்திரகாசனையும் சமாளித்து த.வி. கூட்டணிக்குள் இருந்து பிரச்சனைகள் எழாமல் தடுப்பதிலும் வில்சன் வெற்றி கண்டார். உண்மையில் எந்த வித அதிகாரமும் இல்லாத ஒரு மாவட்ட அபிவிருத்திச் சபைகட்கு 1981ல் தேர்தல்கள் நடந்தன. அந்தத் தேர்தலிற் கூட த.வி.கூட்டணியை அவமதிப்பது என்று யூ.என்.பி. தலைமை முடிவுகட்டி யிருந்தது. அந்தத் தேர்தலின் போது நிகழ்ந்த அரச வன்முறையும் அதிகாரத் துஷ்பிரயோகமும் பற்றி யாழ்பாணத்தில் அப்போது இருந்த எல்லாரும் அறிவார்கள்.

## அண்ணன் காட்டிய வழி (8)

**- இயமவரம்பன் -**

த.வி.கூ., ஸ்ரீ.ல.சு.க, சோவியத் சார்பு கம்யூனிஸ்ட்டுகள், ல.ச.ச.க., ந.ச.ச.க. ஆகியன சேர்ந்து செயற்படுவதற்கான அடையாளங்களும் தோன்றின. இவ்வாறான கூட்டு எவ்வளவு காலம் நிலைத்திருக்மோ என்பது ஒருபுற மிருக்க, இது அரசாங்கத்திற்கு எதிராகக் சவால் விடும் தைரியத்தை மக்களுக்குக் கொடுக்கும் என்பது பற்றிய கவனமே யூஎன்.பி. ஆட்சியிடம் இருந்தது. 1980ல் திருமதி பண்டாரநாயக்கவின் மீதான அரசியற் பழிவாங்கலை நடத்திய யூ.என்.பி. ஆட்சி. அதே ஆண்டு, நவசமசமாஜக் கட்சி பிற கட்சிகளையும் தொழிற் சங்கங்களையும் கலந்தா லோசித்து அவற்றின் ஆதரவைப் பெறாமல் தனித்து நின்று தலைமை தாங்கிய பொது வேலைநிறுத்தத்தை முறியடித்தது. இதன் விளைவாகத் தொழிற்சங்க இயக்கமும் மேலும் வலுவிழந்தது.

மாவட்ட அபிவிருத்திச் சபைச் சட்டமூலத்தின் மூலம் மாவட்டங் கட்கு உண்மையான அதிகாரம் ஏதும் வழங்கும் நோக்கத்தைக் கொண்டிருக் வில்லை. இறுதி முடிவுகளைத் தன் வசம் வைத்திருந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையில் வழங்கப்பட்ட அதிகாரங் களைக் கூட நடைமுறையில் செயலிழக்கச் செய்ய இடமிருந்தது என்பதை உணரமுடியாத அறிவிலி வில்சன் என்று நம்புவது கடினம்.

வில்சன் ஜயவர்தனவிடம் பேரம் பேசி சாதித்தவை பற்றி அவர் சொல்லிய எதையும் த.வி.கூ. தலைமை கூட் நம்பவில்லை. ஜயவர்தன மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு எந்த விதமான அதிகாரமும் தருவார் என்பதற்கு சபைகள் தொடர்பான சட்ட வரைவில் போதிய ஆதாரம் இல்லா ததை நன்கு அறிந்த அமிர்தலிங்கம் மாவட்ட அபிவிருத்தி சபை மசோதாவை



தேர்தலில் வாக்குப் பெட்டிகள் கடத்தப்பட்டதும் பிற மோசடிகளும் செய்வதில் யூ.என்.பிக்கு மூன்று வருடகாலப் பயிற்சி இருந்தது. யாழ் நூலகத்தை எரித்ததன் மூலம் ஜேர்மன் ஃபாசிசவாதிகளுக்குத் தாங்கள் எவ்வகையிலும் சளைத்தவர்கள் அல்ல என்று அந்தத் தீவைப்புக்குத் தூண்டுகோலாக இருந்த அரசாங்க அமைச்சர்களும் அரச படைகளும் நிருபித்தனர். யாழ்ப்பாணப் பாராளு மன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடும் தீக்கிரையானது.

ஆனாலும் என்ன. த.வி.கூ. மாவட்ட அபிவிருத்திச் சபையில் சகல படாடோபங்களுடனும் பங்கேற்றுப் பதவியில் அமர்ந்தது. இது தீவிரவாத இளைஞர்களைப் பொறுத்த வரை. மிக்க கொடிய துரோகச் செயலாகவே காணப்பட்டது. மறுபுறம் த.வி.கூட்டணி க்குள் அமிர்தலிங்கத்திற்கு எதிராக இருந்த குழுவினரும் தம் எதிர்ப்பை வெளிவெளியாகக் காட்டுவதற்கு வசதியான சூழ்நிலையும் இதனால் உருவானது. ●

## ஜே. ஆருக்கும் - கூட்டணிக்கும் தரகராக இருந்தவர் ஏ.ஜே. வில்சன்

[illegible] குறைந்தளவிலான சலுகைகளை வழங்குவதற்கு மேலாக எதைச் செய்யவும் அவர் ஆயத்தமாக இருக்கவில்லை. வடக்குக் கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றங்களை மும்முரமாக்கித் தமிழரின் பாரம்பரியப் பிரதேசம் என்ற ஒன்றை முற்றாகவே

த.வி.கூட்டணி யூஎன்.பிக்கு எதிரான வெகுசனப் போராட்டம் எதிலும் இணையாமலும் எதற்கும் ஆதரவு தராமலும் சமாளிக்கும் பொறுப்பை செல்வநாயகத்தின் மருமகனும் யூஎன்.பி. தலைவர்களின் பிரியத்துக் குரிய வருமான காலஞ்சென்ற ஏ.ஜே.வில்சன்

எதிர்ப்பது என்று த.வி.கூட்டணி எடுத்த முடிவுடனேயே கொழும்புக்குப் போனார்.

அவரை அந்த மாவட்ட அபிவிருத்தி சபை மசோதாவை ஏற்கவும் ஜயவர்தனவை நம்பவும் செய்வதில் வில்சன் பெற்ற வெற்றி. அமிர்தலிங்கத்தை ஜே.ஆர்.

---

### அதிகார மொழி.....

6ம் பக்க தொடர்ச்சி

பொதுமக்களுக்கான பாடசாலைக்கல்வி சீர் குலைந்து. பல்கலைக்கழகம் பட்டதாரிகளின் தரமும் கீழிறக்கப் பட்டுவருகிறது. இதன் மூலம் ஆங்கில மூலம் கல்வி கற்றவர்களும் வசதி படைத்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களுமான புதிய புத்திஜீவி - நிபுணர் - நிர்வாகி அதிகார வர்க்கம் ஒன்று நாட்டில் தன்னை மேல் நிலையில் நிறுவ இயலுமாகிறது.

#### 8. கறுப்ப ஆங்கிலேயர்களின் உபதேசம்

1977க்குப் பின்பிருந்து. ஆங்கிலத்தை மீண்டும் ஆட்சி பீடம் ஏற்ற வேண்டும் என்று கனவுகண்டவர்கட்குப் புது உற்சாகம் பிறப்பெடுத்தது. சிங்களப் பேரினவாதத்தையும் சிங்கள பௌத்த மேலாண்மையையும் முன்னெடுத்து அரசியல் செய்யும் ஒரு முதலாளி வர்க்கத்தின் தேசப்பற்று. மொழிப்பற்று. சமயப் பற்று என்பன எல்லாமே பசப்பானவை தான். எனவே. சிங்கள பௌத்தம் என்பது அந்நியரின் மேலாதிக்கத்திற்கு வசதியான ஒரு மூடு திரையே என்பதில் சந்தேகம் இல்லை.

மொழிப்பிரச்சனையைத் தீர்ப்பதாகச் சொல்லி தமிழையும். ஆங்கிலத்தையும் ஏற்கனவே இருந்த சிங்களத்துடன் சேர்த்து அரச கரும மொழிகளாக 1990 அளவில் அறிவிக்கும் முன்னரே ஆங்கிலம் அதிகார பூர்வமற்ற அரசகரும மொழி யாகிவிட்டது. சிங்களம் உள்ளூரில் மக்கள் மீது ஆணை செலுத்தவும். ஆங்கிலம் முக்கியமான அலுவல்களை எல்லாம் நடத்தி முடிக்கவும். தமிழ் ஒரு பேருக்காகவும் அரச கரும மொழியாகின.

தரகு முதலாளிய அதிகாரம் அதிகாரத்திற்கு வந்த பின்பு பண்பாட்டு ஊடுருவல் மும்முரமானது. தொலைக் காட்சி இதற்கு மிகவும் வசதியான ஊடகமானது களியாட்ட மனைகள். சூதாட்ட நிலையங்கள். விபசாரம். போதை மருந்துகள் போன்றன ஒரு புதிய பண்பாட்டுச் சீரழிவுப் பரிமாணத்தைப் புகுத்தின. அந்நியச் செலாவணி வரவு என்ற பேரில் உல்லாசப் பிரயாணிகளின் வரவு ஊக்குவிக்கப்பட்டு அதன் மூலம் இந்தச் சீரழிவு உக்கிரமடைந்தது. இந்தச் சமூகச் செயற்பாடுகளின் மூலம் உருவான உதிரி, புல்லுருவி வர்க்கம் அந்நியர் தயவில் தொழில் நடத்தியது. இதன் மூலம் உருவான தொழில்கட்கு ஆங்கிலத்தில் பேசும் ஆற்றல் ஒரு குறைந்த பட்சத் தேவையானது.

நாட்டின் உண்மையான உற்பத்திப் பெருக்கம் சாராத சில சமூகத் தேவைகள் சார்ந்து பெருநகரங்களில் உருவான பொருளாதாரம் ஆங்கிலத் தையே தன் பிரதான மொழியாகக் கொண்டு செயற்பட்டது. நாட்டின் பொருளாதாரம் அந்நியருக்குப் படிப்படியாகத் தாரைவார்க்கப்பட்டுக் கொண்டு போனதன் பின்னணியில் ஆங்கிலமில்லாமல் எதிர்காலமே இல்லை என்ற மயக்கத்தை ஏற்படுத்துவது இலகுவானது.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆங்கிலத்தை இந்த நாட்டின் முழுச் சனத்தொகையினர் மீதும் திணிப்பது என்ற மூர்க்கத்னத்துடன் ஒரு பிரசாரம் முடுக்கி விடப்பட்டுள்ளது. இதன் விளைவாக பாடசாலைகட்குப் போட்டியாக முளைத்துள்ள ற்யூட்டறி களை ஒத்த அளவில் ஆங்கில மொழிச் கற்பிக்கும் நிறுவனங்களும் புற்றீசல்கள் போல கிளம்பின.

தனியார் மயமாதல் என்ற அரசாங்கக் கொள்கை ஆங்கில அறிவு போதாதவர் களை ஒதுக்குவதற்கு உதவும். ஆனால் உள்ளூரில் ஆங்கிலம் கற்றவர்களால் 'சர்வதேச' பாடசாலைகளில் படித்து வந்த மேட்டுக்குடிப் பிள்ளைகளுடன் போட்டியிட முடியுமா? என்றாலும் ஆங்கிலத்தின் மூலமே விமோசனம் என்ற மயக்கம் இப்போதைக் வளர்முகமாகவே இருக்கும்.

#### 9. பண்டாரநாயக்கவின் புதைகுழி

பண்டாரநாயக்க சிங்களப் பேரினவாத அரசியலில் மிக முக்கியமான பங்கு வகித்தவர் என்பது ஒரு விடயம். அதே வேளை. ஏகாதிபத்திய எதிர்ப்பு. சுதேசிய நலன்கள். சுதேசியப் பண்பாட்டு எழுச்சி, தாய்மொழிக் கல்வி போன்ற விடயங்களில் அவரது கொள்கைகள் தமிழ்ச் சமூகத்திற்கும் நன்மை அளித்தவை தாம். அவரது கொள்கைகள் சிறிமா பண்டாரநாயக்க வாலும் கடைப்பிடிக்கப்பட்டன. இன்று அவர்களது மகளின் ஆட்சியில் பண்டாரநாயக்கவை ஒரு முற்போக்குவாதியாக. தேச பக்தராக. ஏகாதிபத்திய எதிர்ப்பாளராக அடையாளம் காட்டிய ஒவ்வொரு கொள்கையும் காற்றில் விடப்பட்டுள்ளது.

ஆங்கிலத்தையே இலங்கையின் உண்மையான முழுமையான அதிகாரமொழியாக நிறுவுவதற்கான முயற்சிகளுக்கு இன்று அதிகார பூர்வமாக அத்திவாரம் இடப்பட்டுள்ளது. ஆங்கிலத்தை இரண்டாவது அல்லது மூன்றாவது மொழியாக அல்லாமல் கல்விக்கான மொழியாக்கும் ஆலோசனை முன்வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவது பற்றிய காரியங்கள் இப்போது மேற்கொள்ளப் படுகின்றன. இதன் உண்மையான நிலை என்ன?

சுயவிருப்பின் அடிப்படையில் பாடசாலை களில் ஆங்கில வழிக் கல்வி வழங்கப் படும் என்பது அரசின் கொள்கை. இதன்படி வசதி மிக்க பாடசாலைகளில் ஆங்கில வழிக் கல்வி சமூகத்தில் ஒரு மிகச் சிறிய பகுதியினருக்கு முறையாகக் கிடைக்கும். இன்னொரு சிறு பகுதியினருக்கு அரைகுறையான ஆங்கில வழிக் கல்வி கிடைக்கும். பெரும் பாலானவர்கள் மிகவும் வசதி குறைந்த பாடசாலைகளில் தாய்மொழியில் கல்வி பெறுவார்கள். உயர் கல்வியில் இவர்களது நிலை ஆங்கிலம் படித்தவர்களுடையதற்குக் கீழ்ப்பட்டு இருக்கும். தொழில் வாய்ப்புக்களும் குறைவாக இருக்கும்.

இந்த நிலைக்கும் கொலனி ஆட்சிக் காலத்திற் காணப்பட்ட நிலைக்கும் அடிப்படை வேறுபாடு என்ன? அந்நியர் நேரடியாக ஆண்ட காலத்தில் தாய்மொழிப்பற்று என்பது விடுதலைக் கான ஒரு போராட்டக் கருவியாக இருந்தது. இன்று பேரினவாதம் அதை மழுங்கடித்த மொட்டைக்கத்தியாக்கி விட்டு மக்கள் முன் தேச பக்த வேடம் போடுகிறது. ஒரு துளி இரத்தமும் சிந்தாமல் ஏகாதிபத்தியம் இந்தப் புதிய துரோகக் கும்பலை வைத்துத் தன் நவகொலனியக் கொள்ளையடிப்பைத் தொடரமுடிகிறது. இதுவே சிங்களப் பேரினவாதிகள் இந்த நாட்டுக்கும் செய்துள்ள பெரிய துரோகம்.

#### 10. தாய்மொழிக் கல்வியும் மார்க்சிச — லெனினிசவாதிகளும்

தாய்மொழிக்கல்வியின் தேவை பற்றி மார்க்சிச லெனினிச வாதிகளுக்கு என்றுமே இரண்டு கருத்துக்கு இடமிருக்கவில்லை. மாணவர்களின் கல்விக்கு மிகவும் ஏற்ற மொழி என்ற அளவிற்கும் அப்பால் அவர்கள் தாய்மொழிக் கல்வியின் முக்கியத்தை உணர்ந்திருக்கிறார்கள்.

ஒரு சமூகத்தின் பண்பாட்டு அடையாளத்தை வலுப்படுத்துவதிலும். பன்முகப்பட்ட வளர்ச்சியிலும் தாய்மொழிக்கல்வியின் பங்கு முக்கியமானது. இன்றைய ஏகாதிபத்திய விரோத, தேசிய இன விடுதலைச் சிந்தனை களின் எழுச்சிக்கும் போராட்டத்திற்கும் தாய்மொழிக் கல்வி ஒரு வலிய ஆதார சக்தியாகும். அதை விட முக்கியமாகத் தன்னம்பிக்கை மிக்க ஒரு இளைய பரம்பரையின் உருவாக்கம் ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப மிக அவசியமானதாகும். எனவே தாய்மொழிக் கல்விக்கு ஆதரவாக எவ்வளவு முனைப்புடன் மார்க்சிக லெனினிசவாதிகள் அன்று செயற்பட்டார்களோ அதையும் மிஞ்சிய வீரியத்துடன் இன்று தாய்மொழிக் கல்விக்குக் குழிபறிப்பது பற்றியும் அவர்கள் எதிர்த்து நிற்கிறார்கள்.

> **தாய்மொழிக் கல்வியே அடிப்படையானது மேலும் எத்தனை மொழியையும் கற்பது தவறல்ல.**

தாய்மொழிக் கல்வி கொள்கை என்பது தாய்மொழியை மட்டுமே கற்பிபபது என்ற கொள்கையல்ல.

தொடர்ச்சி 10ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# குடாநாட்டில் தொடரும் சாதியப் பாகுபாடுகள்

நமது யாழ் குடாநாடு பல நல்ல விடயங்களுக்கு முன்னுதாரணம் காட்டப்படும் ஒரு பிரதேசமாகும். அதேவேளை மோசமான பழமைச் சிந்தனைகளுக்கும் அதன் வழியான நடைமுறைகளுக்கும் கூட அப்பிரதேசம் ஒரு வழிகாட்டியாக இருந்து வருவது கவலையுடன் நோக்க வேண்டிய ஒன்றாகும்.

அத்தகையவற்றில் முதன்மையாக இருந்து வருவதுதான் சாதியச் சிந்தனையும் அதன் வழியான நடைமுறைகளுமாகும். இது இரண்டாயிரம் ஆண்டுகாலப் பழைய சுமையாகத் தொடர்ந்து கொண்டிருக் கிறது. அன்று தொழில்களின் அடிப்படையில் மனிதர்கள் உயர்வு தாழ்வுப் பாகுபாடுகளுக்கு நிரந்திர மாக்கப்பட்டனர். இன்று அத்தகைய தொழில்கள் மறைவுற்ற நிலையில் பிறப்பின் வழியாக அதன் தொடர்ச்சி பேணப்படுகிறது. இன்றைய நவீன உலகில் ஒருவரை ஒருவர் நோக்கிகும் போது இச் சாதியத்தின் ஊடாகவே பார்க்கப் படுகின்றார். இதில் தமிழர்கள் குறிப்பாகக் குடாநாட்டுத் தமிழர்கள் முன்னணியில் இருந்து வருகிறார்கள் என்பது மறுக்கப்பட முடியாத ஒன்றாகும். இந்த இழிவு இன்றைய பேரினவாத ஒடுக்கு முறைச் சூழலிலும் உள்ளார்ந்த இறுக்கத்துடன் இருந்து வருகின்றது.

இதன் வெளிப்பாட்டை குடாநாட்டுப் பாடசாலைகளில் தாராளமாகக் காணலாம். பல்கழைக்கழகம் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் என்பனவற்றிலும் சாதியம் தனது ஆதிக்கத்தைக் கொண்டிருக்கிறது. மாணவர்கள் ஆசிரியர்கள் அதிபர்கள் விரிவுரை யாளர்கள் பேராசிரியர்கள் அனைவருமே இச்சாதிய அளவுகோல் மூலமே தமது கல்விப் பணியை முன்னெடுத்து வருகின்றனர். நாளாந்த செயற் பாட்டிலும் முக்கிய முடிவுகள் மேற் கொள்ளப்படும் தருணங்களிலும் சாதியச் சிந்தனைக் கருவூலமே முன்நிலை வகித்துக் கொள்கிறது.

பாடசாலைகளில் மாணவர்களைப் பாகுபடுத்துவதும் "தாழ்த்தப்பட்ட" மாணவர்களை புறம்தள்ளி ஒதுக்குவதும் அதிபர்கள் ஆசிரியர்களுக்கு இயல்பான தொரு விடயமாகவே இருந்து வருகின்றது. அண்மையில் ஒரு மாணவன் சாதியின் காரணமாகப் பழிவாங்கப்பட்டு இறுதியில் பாடசாலையை விட்டே போகுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டான். அம் மாணவன் பழிவாங்கப் படுவதற்கு அப் பாடசாலையின் ஒழுக்கத்திற்கு பொறுப்பான ஆசிரியரே காரணமாக இருந்தார். சாதியம் பாராட்டுவதும் பழிவாங்குவதும் அவரது நிலையில் ஒழுக்கத்திற்கு அப்பாற்பட்ட விடயமாகும்.

இவ்வாறு குடாநாட்டின் ஒவ்வொரு கல்வி வலயத்திலும் நிறைய உதாரணங்களை எடுத்துக் காட்ட இயலும்.

இன்றும் பல பாடசாலைகள் தனித் தாழ்த்தப்பட்ட மாணவர்களைக் கொண்டவையாகவே இயங்கி வருகின்றன. அத்தகைய பாடசாலை களுக்கு ஆசிரியர்களாக மாற்றம்பெற்று வருவதற்கு "உயர்சாதி" ஆசிரியர் என்போர்

## பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை பாதிக்கப்பட்டு வரும் மாணவர்கள்

விரும்புவதில்லை. தமது சொந்த நலன்களுக்காக மாற்றம் பெற்று வந்தாலும் ஏனோ தானோ என்ற நிலையில் தான் கற்பித்தலில் ஈடுபடுகிறார்கள். அத்துடன் உங்களுக்கு ஏன் படிப்பு என்ற மனோபாவத்தில் அவ் ஆசிரியர்கள் நடந்து கொள்கிறார்கள்.

அதேவேளை கிராமங்களை அண்டிய பெரிய பாடசாலைகளில் "தாழ்த்தப்பட்ட" ஆசிரியர்களை உள்வாங்கிக் கொள்வதில் மறுப்பும் தயக்கமும் நிராகரிப்புமே இடம் பெற்று வருகின்றது. "தாழ்த்தப்பட்ட" ஆசிரியர்கள் கலந்து கற்பிக்கும் சில பெரிய பாடசாலைகளில் 'எங்கடை ஆள்' 'மற்றப் பகுதி ஆள்' என்று பிரிக்கப்பட்டு நன்மை தீமை நிகழ்வுகள் விருந்து வைபவங்களில் புறக்கணிக்கப்படுகின்றனர். இடம் அறிந்து 'வாய் நனைக்கும்' சாதிய நடைமுறை ஆசிரியர் மாணவர்கள் அதிபர்கள் என்போரிடையே தொடர்கிறது.

இது யாழ் பல்கலைக்கழகத்திலோ அன்றி ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளிலோ இல்லை என எவரும் சத்தியம் செய்து விடமுடியாது. யாழ் மாவட்டம் அடுத்த மாவட்டங்கள் என்று ஒன்றுக்குள்ளேயே வேறுபாடு காட்டப்படும் நிலை காணப்படுகின்றது என்றால் சாதியம் தனது வக்கிரத்தை எவ்வாறு கொண்டிருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். பல்கலைக்கழகத்திற்குள் மாணவர்கள் வந்த ஒரு சில மாதங்களிலேயே துல்லியமான சில வழிமுறைகள் மூலம் ஒரு மாணவனின் சாதியப் பின்னணி அறிந்து கொள்ளப்படும். இதற்கு உத்தியோக பூர்வ படிவங்கள். கணனிப்பதிவுகள் இன்றியே சாதிய ஞாபங்கள் உரியவாறு மூளைகளில் பதிவு பெற்று விடும். வெளிப்பார்வைக்கு கதைக்கப்படும், சிரிக்கப் படும் கல்விகற்பிக்கப்படும். ஆனால் உரிய வேளைகளில் சாதியம். தனது ஆதிக்க செயற்பாட்டை நடைமுறைப் படுத்திக் கொள்ளும். பிரதான தீர்மானம், இறுதி முடிவு என்பனவற்றில் இச் சாதிய முத்திரை தன்னை மிக நாசுக்காகப் பதித்துக் கொள்ளவே செய்யும்.

இதன் காரணமாக பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் ஆற்றலும் ஆர்வமும் உள்ள "தாழ்த்தபட்ட" சமூக மாணவர்கள் மனநிறைவு அற்ற ஒருவகை விரக்தியுடனேயே தமது கல்விச் செயற்பாட்டைக் மேற்கொண்டு வருகின்றனர். இது அவர்களிடையே ஒருவகை உளவியல் தாக்கத்[...] ஏற்படுத்தி வருகின்றமையையும் கா[...] முடிகின்றது.

அண்மையில் ஒரு பல்கலைக் க[...] மாணவன் வீட்டில் அவரது சகோதரி[...] திருமணம் நடைபெற்றது. ஆன[...] அத்திருமணத்திற்கு சக பல்கலைக்க[...] மாணவர்களுக்கோ அன்றி ஆசிரி[...]களுக்கோ அழைப்பிதழ் கொடு[...]வில்லை. ஏன் என்று விசாரித்தபே[...] ஏன் வீண் பிரச்சனையை ஏற்படு[...] வேண்டும். தனது பல்கலைக்க[...] அனுபவத்திலிருந்து மேற்[...] அழைப்பைத் தவிர்த்துக் கொண்டே[...] எனக் கூறியதைக் கேட்க முடிந்த[...] யாழ் பல்கலைக்கழகத்தில் பழ[...]வாதமும் சாதியமும் எந்தத் திசை[...] செல்கின்றது என்பதற்கு இது போ[...] பல உதாரணங்களைக் கூறலாம்.

குடாநாட்டுப் பாடசாலைகளிலே[...] அன்றி பல்கலைக்கழகம் ஆசிரி[...] பயிற்சிக் கல்லூரிகளில் அப்படி இல்ல[...] யாவும் சமத்துவ சன்மார்க்கமாக[...] இருக்கிறது எனச் சத்தியம் செய[...] எவரும் முன் வரமாட்டார்கள் என்[...] உறுதி.

மேற்படி நிலை நீடித்து வரும் சூழலி[...] தான் தமிழ்த் தேசிய இனத்தி[...] பேரினவாத ஒடுக்கு முறைக்கு எதிரா[...] விடுதலைப் போராட்டம் சாதியம் உட்[...] பழமைவாதப் பிற்போக்கு சிந்தனைக[...] நடைமுறைகளின் பாரிய மாற்றங்கள[...] வேண்டி நிற்கிறது. சாதியத்தை[...] அதன் கேடுகெட்ட தனத்தை அம்ப[...] படுத்தி எதிர்த்து நிற்பதன் வாயிலாக[...] தமிழரின் விடுதலைப் போராட்[...] மார்க்கம் பல மடையவும் முன்னுக்கு[...] செல்லவும் முடியும்.

# வடக்கு கிழக்கில் குடிசன மதிப்பீடு
## பேரினவாதத்திற்கு புள்ளி விபரமா?

வடக்கு கிழக்கின் இன்றைய நிலை உலகறிந்த உண்மையாகக் காணப்படுகின்றது. யுத்த பூமியாக்கி மக்களைக் கொன்றழித்ததுடன் அவர்களது பொருளாதாரத்தை சிதைத்து நாசமாக்கிக் கொண்டவர்கள் பேரினவாத ஆளும் வர்க்கத்தினர். அதேவேளை தொடரும் இரண்டு தசாப்த யுத்தத்தால் வடக்கு கிழக்கின் தமிழ் முஸ்லீம் மக்கள் இடம் பெயர்ந்தவர்களாக அல்லற்பட்டு அலைந்த வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்று அந்நாட்டிலே வேண்டப் படாதவர்களாக முகாம்களில் வைத்து வதைக்கப்படுகின்றனர். மேற்குலகம் நோக்கிப் புலம் பெயர்ந்தவர்கள் பல லட்சம் பேர் படும் வேதனைகளும் அனுபவிக்கும் இன்னல்களும் நாளாந்தம் வளர்ந்து செல்கின்றன.

வடக்கு கிழக்கில் வீடுகள் தரை மட்டமாக்கப்பட்டுள்ளன. ராணுவ வலயங்களில் மக்கள் விரட்டப்பட்டு திரும்ப முடியாது அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்ச வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். நில புலம் வீடுவாசல் இழந்து நாளாந்தம் உயிருக்காகப் போராடி வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் குடிசன மதிப்பீடுக்கு என்ன? வேண்டிக் கிடக்கிறது. குடியும் குலைந்து சனமும் அகன்ற நிலையில் குடிசன மதிப்பீட்டிற்கு என்னதான் அர்த்தம் இருக்கிறது.

இக் குடிசன மதிப்பீட்டை வடக்கு கிழக்கில் நடாத்துவதன் மூலம் ஒரே ஒரு நன்மை மட்டும் அடையப்படும். அதாவது வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் எண்ணிக்கை வீழ்ச்சி காட்டப்படும். அவ்வாறே முஸ்லீம் மக்களது தொகையும் குறைத்துக் காட்டப்படும் இதன் மூலம் தமிழர்களது முஸ்லீம்களது விகிதாசாரம் ஏற்கனவே இருந்ததை விட குறைவானதான ஒரு புள்ளி விபரம் வெளியிடப்படும். அதுவே சகல தேவைகளுக்குமான உத்தியோக பூர்வ புள்ளி விபரமாக்கப்படும். உயர் கல்வி, வேலை வாய்ப்பு, உத்தியோக உயர்வு, வளங்கள் பங்கிடப்படல், நிதி ஒதுக்கீடு, அபிவிருத்தி, பாராளுமன்றப் பிரதிநிதித்துவம். உள்ளூராட்சி மன்றங்களின் தொகையில் வெட்டு என்பன படிப்படியாக நடைமுறைக்கு வந்து கொள்ளும். இதனையே பேரினவாதம் எதிர்பார்த்து நிற்கிறது. அதற்குரிய புள்ளி விபரத் தருணத்தை எதிர்வரும் குடிசன மதிப்பீடு வழங்கியுள்ளது.

மேலும் இக் குடிசன மதிப்பீடு தாங்கள் கடந்த இருபது வருடங்களாக நடாத்தி வரும் பேரினவாத ஒடுக்குமுறை யுத்தத்தின் மூலமாக வடக்கு கிழக்கைச் சிதைந்தவற்றைப் புள்ளி விபரப் படுத்திக் கொள்வதாகவும் அமையும். இப்புள்ளி விபரத்தின் மூலம் எஞ்சியுள்ளவற்றையும் அழித்துக் கொள்ள வாய்ப்பு இருக்கவே செய்யும்.

ஆதலால் இக் குடிசன மதிப்பீட்டை வடக்கு கிழக்கு மக்கள் புறக்கணிப்பதே நியாயமானதும் சரியானதுமாகும். வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லீம் மக்களுக்கு இக் குடிசன மதிப்பீடு ஒரு சுருக்குக் கயிறாகவே இருக்கும்.

## சன நாயகம்

இடுகாடாய் தேசம்
இருண்டிருக்க
இடை இடையே
இரைச்சலாய் அவலங்கள்
எப்போதும் கேட்கும்

சுடு காட்டு பிண நெருப்பு
சுடர் விட்டு எரியும்
அதை காட்டி
விடியலென
மேடைகள் முழங்கும்

புதையுண்டு போன
சிதையினிலே
சிறுசுகள் நடக்கும்
பிசு பிசுத்து போன
குருதியில் பிணம் தேடும்
சோதனைகள் தொடங்கும்

அமைதிகளாய் யுத்தம்
அதிரடியாய் நடக்கும்
அதனுள்ளே சமாதான
சத்தம் மட்டும் கேட்கும்

ஆயுதங்கள் மொழியில்
அதிசயங்கள் நடக்கும்
மானுடங்கள் மட்டும்
முடங்களாய் சரியும்

பிணங்களின் வாடை
பிடரியைத் தாக்கும்
புத்தனின் இல்லை இல்லை
பித்தனின் பூமியிலே
சன நாயகம் பேசும்

**மகேந்திரன்**

## ஊளைச் சத்தம்

*அந்த*
*உதய மரத்து*
*ஊதற் காற்று*
*ஊ.. ஊ... என்று*
*ஊளையிட*

*நாய்களின்*
*ஊளை*
*நடுத்தெருவுக்கு*
*வந்து விட்டது*

*நவக்கிரக முகங்களாய்*
*குரைத்துக் கொண்டிருந்தவை*
*ஓர் முகமாய்*
*ஊளையிடத்*
*தொடங்கியுள்ளது*

*ஒன்று இரண்டு மட்டும்*
*தனித் தனியே*

*சங்கத்து*
*சாக்கடையில்*
*ஊதித் திளைத்து*
*நாறிய பிணங்கள்*

*நரிகளாய்*
*நாளாந்தம் பங்கிடப்பட்டே*
*வருகின்றது*
*எங்களிடம்*
*எஞ்சியது*
*பசித்த வயிறும்*
*அழுத கண்ணீரும்*
*நாய்களின் ஊளைச்*
*சத்தங்கள் மட்டுமே.*

**மு. நாகராஜன்**




யாழ் நகரில் புதிய-ஜனநாயக கட்சி நடாத்திய மேதினக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் உரையாற்றிக் கொண்டிருப்பதையும் மேடையில் ஜனநாயக வாலிபர் முன்னணிப் பிரிதிநிதி ச. தவராசா கட்சியின் வட.பிரதேசச் செயலாளர் கா.கதிர்காமநாதன் தாயகம் சஞ்சிகையின் ஆசிரியர் க.தணிகாசலம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கூட்டத்தில் கலந்துகொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்

படிப்பகம்

www.padippakam.com



# அவசரகாலச் சட்டம் காலாவதியானது
# ஒடுக்குமுறைச் சட்டங்கள் இறுக்கப்படுகிறது

ாதுஜன ஐக்கிய முன்னணி ரசாங்கம் அதன் ஆட்சிகாலத்தை த்துக்கொள்ளும் சூழ்நிலையில் ருக்கிறது. பாராளுமன்றத்தில் றுதியான பெரும்பான்மை மில்லாமல் இருக்கிறது. சிறிலங்கா ஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ழ் ஹக்கீமை அமைச்சர் பதவியிலிருந்து னாதிபதி சந்திரிகா விலக்கியதற்கு ருகு ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்தில் திர்கட்சி வரிசையில் அமர்ந்தார். வருடன் இன்னும் ஆறு எம்.பிக்களும் திர்கட்சி வரிசைக்கு சென்றனர். தனால் உறுதியான பெரும் பான்மை ல்லாமல் பொதுஜன ஐக்கிய ன்னணி அரசாங்கம் திண்டாடுகிறது. வசரகால சட்டத்தை மேலும் டிப்பதற்கான பிரேரணையை ராளு மன்றத்தில் சமர்ப்பிக்க டியா திருக்கிறது. அதனால் ற்போது அவசரகால சட்ட திகள் அமுலில் இல்லை.

யங்கரவாத தடை ட்டம் அமுலில் ருக் கிறது. ச் சட்டத்தின் ரிவு 27இன் கீழ் ச் சட்டத்தை றைவேற் று தற்கு பாதுகாப்பு மைச்சர் ஒழுங்கு விதிகளை க்கலாம். அதனைப் பயன்படுத்தி னாதிபதி சந்திரிகா சில ரகடனங்களை செய்துள்ளார். ப்பிரகடனங்களின்படி கொழும்பு பெரும்பகுதி. வடக்கு கிழக்கு பிரதேசம் ன்பவற்றில் ஆயுதப்படையினர் டவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற ழி செய்யப்பட்டுள்ளது.

அப்பிரகடனங்கள் சட்டப்படி வலுவானவை அல்ல. ஏனெனில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஏற்பாடு களை நோக்கங்களை நடைமுறைப் படுவதற்காக ஒழுங்கு விதிகளை ஆக்க முடியும் என்றே பயங்கரவாத தடைச்சட்டத்தின் பிரிவு 27 கூறகிறது அவ்வொழுங்கு விதிகளும் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும்.



அப்பிரிவில் ஜனாதிபதி பிரகடனங்கள் எதனையும் செய்ய முடியாது. ஜனநாயக த்தை நேசிக்கும் எவரும் அவசரகால சட்ட ஒழுங்குவிதிகள் அமுலில்லாதது போனமை குறித்து மகிழ்வடைவர்.

அவசரகால நிலைமை என்பது பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அவசரகால ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தி சாதாரண சட்டத்தின் கீழ் மக்களுக்கு உறுதி செய்யப் பட்டிருக்கும் உரிமைகளை இடைநிறுத்துவதாகும். தனிமனித உரிமைகளை மறுத்து கைது செய்தல். விசாரணை தடுத்து வைத்தல் என்பவற்றை ஏதேச்சதிகாரமாக செய்வதற்கு ஆயுதப்படைகளுக்கு அதிகாரத்தை வழங்குவதாகும். முதலாளித்துவ அமைப்பின் கீழ் முன்னேற்றகரமான பரிபாலன முறையாக கொள்ளப்படும் சிவில் நிர்வாகத்தின் பெரும்பகுதியை ஆயுதப்படைகளுக்கு கையளிப்பதாகும். 1971 முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்ட அவசரகால நிலைமை சிற்சில காலங்களில் இல்லாமல் இருந்தாலும் தொடர்ச்சியாக இன்றுவரை எமது நாடு அவசரகால நிலைமையிலேயே ஆளப்பட்டு வருகிறது. இன்றைய இலங்கையின் இளம் சமூகத்தினருக்கு சாதாரண நிலைமையின் கீழ் இருந்த 'சுதந்திரமான' நிலைமை பற்றிய அனுபவமோ அறிவோ இருக்க முடியாது. அந்தளவுக்கு நீண்நாட்கள் நாடு அவசரகால நிலைமையில் இருந்து வருகிறது.

1970களில் மட்டுமன்றி 1980களின் இறுதியிலும் அவசரகால நிலைமையின் கீழ் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் யுவதிகள் ஆயுதப் படையினரால் கொல்லப்பட்டனர் தடுப்புக்காவலில் இருந்த ஜே.வி.பி. தலைவர் ரோஹன விஜேவீர உட்பட சில அரசியல் தலைவர் களும் கொல்லப் பட்டனர்.



அவசரகால நிலைமை களின் கீழும். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழும் தமிழர்கள் கொல்லப் படுவது மன்டு மன்றி, கைது. தடுத்து வைப்பு. சித்திர வதை. போன்ற பலவித மான அடக்கு முறை களுக்கும் ஆளாகி யுள்ளனர். மூவாயிரம் தமிழர்கள் வரை தற்போது சிறைகளில் இருந்து வருகின்றனர்.

இன்றும் என்றும் அவசரகால சட்டத்தை நீடித்து வைத்திருக்கும் நிலைமையை அனுமதிக்கக் கூடாது. அவசரகாலச் சட்டத்தை அடியோடு இல்லாமல் செய்ய மக்கள் இயக்கங்கள் முன்னெடுக்கப்பட்டு அரசியற் கட்சிகளுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட வேண்டும். அவசரகால சட்ட நீடிப்பு கூட இனவாதரீதியாகவே நியாயப்படுத்தப்படுகிறது. தமிழீழ புலிகளிடமிருந்து சிங்கள மக்களைப் பாதுகாப்பதற்காகவே அவசரகால சட்டத்தை அமுல் செய்ய வேண்டியிருப்பதாக அரசாங்கத்தினரும் வெளியிலுள்ள பேரினவாதிகளும் கூறி வருகின்றனர்.

அவசரகாலச் சட்டத்தை எதிர்ப்பதாக கூறுகின்ற ஜே.வி.பி வடக்கு கிழக்கில் மட்டும் அது அமுலில் இருந்தால் பரவாயில்லை என்று கூறுகிறது. அத்துடன் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவாக இருப்போருக்கு எதிராகவும் பிரத்தியேகமாக கடுமையான சட்டத்தை ஆக்க வேண்டும் என்று கூறுகிறது. இப்போது அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை யை எதிர்த்த ஐ.தே. கட்சி தொடர்ந்து என்ன செய்யும்? ஆட்சிக்கு வந்தால் என்ன செய்யும் என்பதற்கெல்லாம் தெளிவான விடைகள் கிடையாது. அவசர கால சட்டம் போன்ற அடக்குமுறைச் சட்டங்களின் உதவி யின்றி ஐ.தே. கட்சியாலும் ஆட்சி செய்ய முடியாது. இவை அனைத்தும் ஆளும் வர்க்க சர்வாதிகாரத் தோற்றத்தை நிர்வாணப்படுத்திக் காட்டுவனவாகவே உள்ளன. அரசு யந்திரமும் ஆளும் வர்க்கமும் எவ்வாறு ஆட்சி செய்கிறது என்பதை விளங்கிக் கொள்ள உரிய சந்தர்ப்பமாகக் கொள்ளலாம்.

# இந்திய மேலாதிக்கத்தின் அபாயத் திட்டங்கள்
## அமெரிக்க பன்னாட்டுக் கம்பனி வடிவமைக்கிறது

திருகோணமலை துறைமுகத்தையும். திருகோணமலை நகரையும் இந்தியா பூரண கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக் கொண்டுள்ளது. திருகோணமலை துறைமுகத்தையும். நகரையும் அபிவிருத்தி செய்வதென்ற 'இலங்கை-இந்திய கூட்டுத்திட்டமொன்றினூடாக' இந்தியா அதன் கட்டுப்பாட்டை சட்டபூர்வமாக எடுத்துக் கொண்டுள்ளது. திருகோணமலை துறைமுக அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும வகையில் 26மைல் பாலமொன்று அமைக்கப்பட விருக்கிறது. அதாவது இலங்கையையும் இந்தியாவையும் பிரிப்பதாக அமைந்துள்ள பாக்குநீரிணையின் மீது கொள்கலன்களை இந்தியாவிற்கு எடுத்துச் செல்வதற்கு வசதியாக மேற்படி பாலம் அமைக்கப்பட விருக்கிறது. இதன் மூலம் இந்தியாவும் இலங்கையும் தரை வழியாக இணைக்கப்பட்டு விடும்.

திருகோணமலை இயற்கை துறைமுகத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற இந்தியாவின் நீண்டகாலத் திட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது. தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமான வடக்கிற்கும் கிழக்கிற்கும் மத்தியில் அமைந்துள்ள திருகோணமலை மாவட்டம் இந்தியாவின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு செல்லப் படுகிறது. இதனைத் தொடர்ந்து வைத்துக்கொள்வதற்கு அளவாகவே தமிழ் மக்களின் போராட்டத்தை பார்க்கும் அல்லது கட்டுப்படுத்தும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய விடயமல்ல.

இந்தியாவின் முதலீட்டுடன் திருகோணமலையில் சகல வசதிகளுடன் கூடிய சர்வதேச தரத்திலான துறைமுகத்துடன் கூடிய புதிய நகர அபிவிருத்தித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட விருக்கிறது. கண்டியில் 432 ஹெக்டேயர் காணியில் தகவல் தொழில்நுட்பம்-பௌதீக தொழில் நுட்பம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் பேட்டை யொன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது. பிபிலையில் 19474 ஏக்கர் காணியில் அன்னாசிப் பழச் செய்கையை அடிப்படையாக கொண்ட பழச்சாற்று உற்பத்தி மேற்கொள்ளப்பட விருக்கிறது.

இவையெல்லாம் இந்திய ஆளும் வர்க்கத்தின் கனவுகள் நனவாவதற்கான சான்றுகளாகக் கொள்ள முடியும். இனப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு இந்திய ஆளும் வர்க்கம் இலங்கையில் அதன் மோலாதிக் கத்தை நிலைநாட்டு கின்றது என்பதற்கு ஆதாரங்களாக அமைகின்றன. மேற்படி இந்திய முதலீட்டால் இலங்கையில் முன்னெடுக்கப்படவுள்ள மூன்று முக்கிய திட்டங்களும் இலங்கையின் பிரதான விடயங்களில் தலையீடு செய்வதாகவே அமைகின்றது.

திருகோணமலை துறைமுகத்தை கைப்பற்றுவதில் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் பெரும் போட்டி நிலவியது. அமெரிக்காவின் ஆசீர்வாதத்துடன் இந்தியா முழு திருகோணமலை நகரத்தையும் தற்போது அதன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது. மேற்படி மூன்று திட்டங்களுக்குமான உள்ளகக் கட்டமைப்புகளை அமெரிக்க பன்னாட்டு கம்பனியொன்றே மேற்கொள்ள இருக்கிறது.

இலங்கையின் இறைமையைப் பற்றி பெரிதாக பேசுகின்ற சிஹல உருமய. போன்ற சிங்கள தீவிரவாத பாசிச அமைப்புகள் தமிழ் மக்களின் போராட்டத்தை அவற்றின் பிரதான எதிரியாக கொண்டு இந்திய மேலாதிக்க. விஸ்தரிப்பு வாதத்திற்கு இணங்கிப் போகின்றன. தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தை ஏகாதிபத்திய சதி என்று சிங்களமக்களிடம் காட்டும் அவர்கள் இந்திய விஸ் தரிப்புவாத இந்துத்துவத்திற்கு அடிமையாவதை பெருமையாகவே கொள்கின்றன. முன்பு இந்திய விஸ்தரிப்பு வாதத்தை பிரதானமாக எதிர்ப்பதாக காட்டிக் கொண்டு மலையக தோட்டத் தொழிலாளர்களை இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் ஆதரவாளர்களாக காட்டிய ஜே.வி.பி. மேற்படி இந்தியாவின் 'மூன்று அபிவிருத்தி திட்டங்கள்' என்ற இந்திய மேலாண்மைக்குரிய விடயங்கள் பற்றி மௌனமாக இருக்கின்றன.

THREE VAST INDO-LANKA INFRASTRUCTURE DEVELOPMENT,
AGRO-INDUSTRIAL & INDUSTRIAL PROJECTS

A Fortune Global 500 bank closes in June 2001 arranging USD 50 million for a privately-owned American company to begin developing and implementing the projects :

1. 432-hectare IT & Biotech Industries Park in Kandy.
2. Juice-concentrate manufacture from pineapples grown in 19,474 acres in Bibile area.
3. New city and full-scale International port in Trincomalee.

The third project includes a 26-mile bridge over Palk Strait to move containers with Indian goods via expanded/ improved existing highways to the port for outbound shipments to the world at large and moving of containers containing raw materials from the port to India in the opposite direction. A vast free-trade zone at the new city is also planned.

Businessmen from Sri Lanka, India and elsewhere interested to join a meeting at High Commission of a South Asian country this week may

Call 078 607400, 077 340113 or 074 721713

நன்றி : சண்டே ரைம்ஸ் (24-06-2001)

அப்பிரதான திட்டங்கள் பற்றி இலங்கை மக்களின் அபிப்பிராயம் கேட்கப்பட வில்லை. பாராளு மன்றத்தின் அனுமதி கேட்கப்பட்டதாகவும் தெரியவில்லை. இலங்கையின் முக்கிய விடயங்கள் இந்தியாவின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு செல்லப்படும். அத்திட்டங்கள் பற்றி இலங்கை மக்களினதோ, அரசியற் கட்சிகளினதோ அபிப்பிராயங்கள் கோரப்படவில்லை.

இந்தியாவின் மேலாதிக்கத்தினை நிலை நாட்டவும், ஏகாதிபத்திய உலகமயமாதலில் இலங்கையை அதனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதிலுமே இந்தியா கவனமாக இருந்து வருகிறது. தமிழ்மக்களின் பிரச்சினையை தூக்கிப் பிடித்துக் கொண்டு இலங்கையில் தலையிட இடம் தேடிக் கொண்ட இந்தியா இடம் கிடைத்தவுடன் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதை வெளிப்படையாக காட்டி நிற்கின்றது.

இந்தியா ஏற்கனவே இலங்கை இந்திய வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் தனது வர்த்தக நலன்களை இறுக்கிக் கொண்டது. ஆணையிறவு வீழ்ச்சியைத் தொடர்ந்து நேரடி நிதி உதவி ராணுவ போர்க்கப்பல் உதவிகள் வழங்கியது. நோர்வே யின் சமாதான முயற்சியை குழப்ப பின்னால் இருந்து செயற்பட்டது. அபிவிருத்தி முதலீடு என நாளாந்தம் புகுந்து கொண்டு வருகிறது இந்தியா. இத்தகைய தொடர் திட்டங்களின் அடிப்படையிலேயே தற்போது அமெரிக்க ராட்சத பன்னாட்டுக் கம்பனி மேற்படி மூன்று திட்டங்களுக்கான உள்ளகக் கட்டமைப்பை வடிவமைத்து செயல்படுத்த ஒப்பந்தமாகியிருக்கிறது. இந்திய-அமெரிக்க கூட்டு இலங்கையின் இறமைக்கும் சுதந்திரத்திற்கும் மிகப் பெரிய வேட்டாக அமையப் போகிறது.

அசோகன்

படிப்பகம்

www.padippakam.com



# தமிழகத்தைச் சாப்பிட்ட தலைவர்கள் தங்களுக்குள் சண்டை போடுகிறார்கள்!

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு முத்து வேல் கருணாநிதிக்கு சென்னை நகரிலே பவள விழா கொண்டாட்டப் பட்டது. ஏற்கனவே வைத்திருந்த கலைஞர், டாக்டர் பட்டங்களுடன் மனு நீதிச் சோழன் என்னும் அடைமொழியும் வழங்கப்பட்டு ஏகப்பட்ட புகழாரங்கள் கூறப்பட்டன. முதலமைச்சரும் தி.மு.க. வின் தலைவருமான மு.கருணாநிதி பூரிப்பால் கிறுங்கிப்போனார். தமிழ் மூச்சோடும் முதலமைச்சர் பதவியோடும் இறுதிக் காலத்தை முடித்துக் கொள்வதுடன் சகலரையும் ஓரங்கட்டி தனக்குப் பின் தன் மகன் மு.க.ஸ்டாலினை முதலமைச்சராக்கி அரச கட்டில் ஏற்றக் கனவும் கண்டு வந்தார். கடந்த தேர்தலில் எல்லாமே தலைகீழாகிக் கொண்டது.

கடந்த ஆட்சிக் காலத்தில் ஊழல் சக்கிரவர்த்தினி எனப் பெயர் பெற்ற அம்மா என்ற அடைமொழிக்குச் சொந்தக் காரியான ஜெயலலிதா தனது முழுப் பலத்தையும் பயன்படுத்தி அறுதிப் பெரும்பான்மையுடன் பதவிக்கு வந்தும் கொண்டார். தனது முதலமைச்சர் பதவியே கேள்விக் குறியுடன் இருந்து வரும் சூழலிலும் கூட பழிவாங்கும் வக்கிரத்துடன் கருணாநிதியை நடுநிசி வேளையில் இழுத்துச் சென்று சிறையில் அடைத்தும் கொண்டார்.

ஒருவாரமாக நடைபெற்ற இந்த அரசியல் நாடகத்தில் காட்சிகள் அதிக ரசிகர்களை ஆவலுடன் ஈர்த்துக் கொண்டது. அத்துடன் அடுத்த காட்சியைப் பார்க்க ஒவ்வொரு நாளும் மக்கள் ஆவலாக இருந்தனர். இதில் ஒரு சாரார் கருணாநிதிக்கு அனுதாபம் கொண்டு இந்த வயதில் அந்த மனிசனுக்கு இப்படிச் செய்யலாமா என்றும் திட்டிக் கொண்டனர்.

அதேவேளை ஜெயலலிதாவின் செயலுக்கு நியாயம் பேசுவோர் முன்பு கருநாநிதி கருணாமூர்த்தியாகவா இருந்தார். சட்டசபையில் ஒரு பெண்ணை செய்த அவமானம் தொட்டு சிறையில் அடைத்து மகிழ்ந்தவர் அல்லவா? அப்படிப்பட்டவருக்குப் பாடம் படிப்பித்தது சரியே என்றும் வாதிடுகின்றனர்.

இந்த வேளையில் தான் திராவிடர் இயக்க தலைமைகள் பற்றிய கடந்த காலத்தை அரசியல் ரீதியில் நோக்க வேண்டியுள்ளது.



அறிஞர் என்று மகுடமிட்டு அழைக்கப் பட்ட அண்ணாத்துரை தலைமையில் தமிழகத்தில் 1967முதல் ஆரம்பித்தது திராவிடக் காரர்களின் ஆட்சி. அவரது மறைவுக்குப் பின் கலைஞர், மக்கள் திலகம், அம்மா என்ற அடைமொழி களைத் தாங்கிய கருணாநிதி, எம்.ஜி.ஆர். ஜெயலலிதா ஆகியோர் மாறி மாறித் தமிழகத்தை ஆண்டு வந்திருக்கிறார்கள். திராவிடச் தேசியம் பின் தமிழ்த் தேசியம் அவர்களின் பொருளாகியது. சினிமா அதன் பிரச்சார ஆயுதமாகியது.

பிராமணிய எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, சாதி ஒழிப்பு, பெண் விடுதலை - இவை அனைத்தையும் உள்ளடக்கிய திராவிடப் பொன்நாடு காணப் புறப்பட்டவர்கள் தான் இந்த திராவிட இயக்கத்தினர். இந்த இயக்கத்தின் ஸ்தாபகத் தலைவரான ஈ.வே.ராவை முதலிலே கைகழுவிக்கொண்ட தி.மு.க. வினர் அண்ணாத்துரை தலைமையில் ஆட்சி அமைத்தனர். ஆட்சி அதிகாரத்தின் சுவை அதிகரிக்க அதிகரிக்க தமது ஆரம்ப காலக் கொள்கைகள் நடைமுறைகள் அனைத்தையும் அவ்வப் போது கை நழுவ விட்டுக்கொண்டனர்.

இந்த திராவிட இயக்க ஆட்சிகளையும் அதன் தலைவர்களையும் சுற்றி நிலவுடமையாளர்களும் முதலாளிகளும் வர்த்தகப் பெரும்புள்ளிகளும் சூழ்ந்து கொண்டனர். தேர்தலில் வாக்களிப் பதற்கு மட்டுமே மக்கள் தேவைப் பட்டனர். மக்களது தேவைகள் ஏமாற்றுக்களாகவே செய்யப் பட்டன. ஆனால் சொத்துடையோரினதும் சுகபோகிகளதும் தேவைகள் உடனுக்கு உடன் நிறைவேற்றி வைக்கப்பட்டன.

மாறி மாறி ஆட்சி அதிகாரத்தில் இருந்து கொண்டு ஊழல் மோசடி அதிகார துஷ் பிரயோகம் என்பனவற்றில் ஊறித் திளைத்தனர் தலைவர்கள். கோடி கோடியாகக் கொள்ளையிட்டு மாடிமனைகள் சொத்து சுகங்கள் தேடிக் கொண்ட இவர்கள் மக்களுக்கு அடுக்கு மொழி வசனங்களும் சினிமா மூலமாக கனவுலக காட்சிகளும் காட்டி நின்றனர் பாமர மக்களின் அறியாமையை ஏழ்மையை கல்வி அறிவின்மையைப் பயன்படுத்தி அவர்களை ஏமாற்றி தமிழன் ஆட்சி என்றும் தமிழகத்தை பூஞ்சோலை யாக்குவோம் என்று பொய்யுரைத்து தங்களையும் தம்மைச் சுற்றியிருந்த பெருச்சாளிகளை பணமுதலைகளை வளர்த்தும் கொண்டனர்.

அது மட்டுமன்றி தங்களுக்குள் அடிபட்டு ஒருவரது ஊழல் மோசடியை மற்றவர் தத்தமது ஆட்சியில் வெளியே கொண்டு வந்தும் கொண்டனர். கருணாநிதி அவர் மகன் ஸ்டாலின் உட்பட அவரது பரிவாரங்களின் ஊழல் கோவைகள் ஒரு புறம் குவிந்து காணப்படுகிறது. மறுபுறம் ஜெயலலிதா-சசிகலா பரிவாரங்களின் ஊழல் கோவைகள் இருந்து வருகின்றன. தமிழகத்து மக்களின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் திறக்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கையை விட இவ் ஊழல் மோசடி லஞ்சம் அதிகார துஷ்பிரயோகம் என்பன வற்றுக்கான கோவைகளின் எண்ணிக்கையே மிகமிக அதிகமாகும். மொத்தத்தில் தமிழகத்தைச் சாப்பிட்டு ஏப்பமிட்டதில் திராவிடக் கட்சித் தலைமைகள் ஒருவருக்கு மற்றவர் எவ்விதத்திலும் குறைந்தவர்கள் அல்லர். அது மட்டுமன்றி திராவிடச் சீர்திருத்தம் பேசப்பட்ட மண்ணிலே இன்று மதவெறியர்களான பாரதிய ஜனதா கட்சிக்கு இடம் பிடித்துக் கொடுத்து எட்டப்பா வேலை செய்து கொண்டவர்களும் இதே திராவிடக் காரர்கள் தான். இவர்கள் பேசிய திராவிடத் தேசியம் தமிழ்த் தேசியம் எல்லாம் பணக்குவியல் முன்பு பஞ்சாய் பறந்து விட்டன. மக்களது வாழ்க்கை நிலை வறுமை பஞ்சம் பட்டினி நோய தீர்க்கப்படவிலலை. தொழிளாளி



விவசாயியின் நிலை உயரவில்ல உழைப்புக்கு உரிய பயன் கிடை கவில்லை. சாதியும் தீண்டாமை ஒழியவில்லை. பெண்களின் இழ நிலைமாறவில்லை. ஆதிக்க சக்திகள் அடக்கு முறை களுக்கு கை கொடுத் வந்தவர்களும் இதே திராவிட காரர்கள் தான். அது மட்டுமன்றி உ மயமாதல் என்னும் ஏகாதிபத்திய திட்டத்தின் மூலமான பன்னாட்டு கம்பனிகளுக்கு தமிழகத்தில் பா விரித்து படுக்கைத் துணையாக இருந் வருபவர்களும் இத்திராவிட காவலர்கள் தான். கோடி கோடியாக பணத்தைச் சேர்த்துக் கொண்டதுட கோடி கோடியாகக் கொள்ளையி வதற்கும் நிலவுடமைக் காரளுக்கு முதலாளிகளுக்கும் வர்த்தகருக்கு வழிகாட்டிநிற்கும் இத்திராவிட காரர்களை தமிழக மக்கள் நிச்சய அடையாளம் காணும் காலம் வந் தீரும். அரசியல் ரீதியாகவும் அறி பூர்வமாகவும் இந்த அரசியல் மோசடி கும்பல் அம்பலப்படுத்தப்பட்டு மக்களா நிராகரிக்கப்படும் வரை தொடர்ந்து தமிழகத்தை இவர்கள் சாப்பிட்டு கொண்டேதான் இருப்பார்கள்.

இந்திய ஜனநாயகம், தமிழ் தேசிய மாநில ஆட்சி என்பனவற்றின நிர்வாணக் கோலம் அவலட்சண காட்டி நிற்கிறது. இதற்கு மேலு பாராளுமன்ற முதலாளித்துவ ஆட் பற்றியோ அன்றி தேசியவாதம் எங்கே கொண்டு சென்று விடும் என்பத சம்மந்தமாகவோ அதிக விளக்க தேவையற்ற ஒன்றாகும்.

---

**அதிகார மொழி.....**

7ம் பக்க தொடர்ச்சி

அந்நிய மொழிகளில் எத்தனையைக் கற்றாலும் கேடு இல்லை என்பது மார்க்சிச லெனினிசவாதிகள் அறிந்த விடயம். எந்தெந்த அந்நிய மொழிகள் என்ற விடயத்தில் அவர்கள் குருட்டுத்தனமான ஆங்கில மோகத்திற்குப் பலிபோவதில்லை. மாணவர்கள் தங்கள் தங்கள் கல்வித் துறைகளில் அறிவு மேம்பாட்டுக்காக ஆங்கிலத்தைக் கற்க வேண்டிய அளவுக்கு அதன் தேவை ஏற்கப்படுகிறது. அதே வேளை தாய் நாட்டின் பிற மொழிகளில் பயிற்சி பெறுவது சமூகங்களிடையில் நல்லுறவுக்கு உதவும். இன்னும், மூன்றாமுலக நாடுகளின், குறிப்பாக ஆசிய நாடுகளின், மொழிகளிலும் பயிற்சி வழங்கப் படுமாயின் அதுவும் பயனுள்ளதே சுருங்கச் சொன்னால், தாய் மொழிக்கல்விக் கொள்கை என்பது, பிறமொழிகளுக்கு எதிரான கொள்கை அல்ல. அது, ஒரு மொழியின் முழுமையான பயன்பாட்டின் மூலம் சமூகத்தின் மேம்பாட்டுக்கு வழிவகுக்கிற ஒரு காரியமாகும். மார்க்சிச லெனினிசம் மக்களை முதன்மைப் படுத்துகிற ஒரு சிந்தனை முறையாவதால் அதன் கல்விக் கொள்கையில் தளம்பல் இல்லை. அவர்கள் தாய்மொழிக் கொள்கை விடயத்தில் எந்தத் தேசியவாதி களையும் விட உறுதியாக இருந்து வருவதன் நியாயமும் அதுவே.

## முடிவாக

தாய்மொழிக் கல்விக் கொள்கை என்பது பாடசாலைக் கல்விமுறை சார்ந்தோ தொழிற் கல்வி உட்பட்ட மேற்படிப்புச் சார்ந்தோ மட்டும் கடைப்பிடிக்கப்படும் காரியமாக இருக்க முடியாது. அது முழுச் சமுதாயத்தினதும் சிந்தனை விருத்தி சார்ந்த விடயமாகும். தாய் மொழிக் கொள்கை அரசாங்கத்தை மட்டுமே நம்பி இருக்க முடியாது. ஏனெனில் முதலாளிய சமூக அரசியல் முறையில் அரசாங்கங்கள் மக்களின் நன்மைக்காகச் செயற்படுகிற அமைப்புக்களாக முடியாது.

எனவே தாய்மொழிக் கல்விக் கொள்கைக்குத் துரோகமான காரியங்களை எதிர்ப்பதும் தாய்மொழிக் கல்விக்கு முழு ஆதரவு தரும்படி ஆட்சியாளர்களை வற்புறுத்துவதும் போக, வெகுசன மட்டத்தில் தாய்மொழி மூலம் சமூகப் பயனுள்ள விஞ்ஞான, தொழில்நுட்ப, சமூகவியல் விடயங்களை மாணவர்முதலாக மூத்தவர்கள் வரையில் விரும்பிப் பெறுதற்கான ஊக்குவிப்பு மிகவும் முக்கியமானது. இவற்றின் பரவலாக்கம் பகுத்தறிவுச் சிந்தனையும் விஞ்ஞான அனுகுமுறையும் மக்களிடையே வளர உதவும். பரந்துபட்ட மக்களிடையே புதிய அறிவுக்கான பசி கிளறிவிடப் பட்டால் அது ஒரு வலிய இயந்திரம் போல சமுதாயத்தை முன்னோக்கி உந்தும்.

இளையோரிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல், சமூக நடைமுறை சார்ந்த விடயங்கள் பற்றிய தெளிவான சிந்தனைகளை வளர்த்தல், அனைத்தினும் முக்கியமாக, எல்லாவற்றையும் கேள்விக்கு உட்படுத்தி விவாதிக்கும் பண்பை வளர்த்தல் என்பன பற்றி நாம் மிகுந்த ஊக்கம் எடுப்போமாயின் தாய்மொழிக்கல்விக்கு இன்று ஏற்பட்டுள்ள இடையூறுகளை முறியடிக்க வல்ல ஒரு வலிய சமூகச் சக்தியை நாம் மீண்டும் விரைவிற் கான இயலுமாகும்.

~ தேசபக்தன் ~

---

**மூனாப் பொன்னம்பல.**

11ம் பக்க தொடர்ச்சி..

தேவை ஒரு புறமும் அவர் தங்களுக்கு வேண்டாத சிலரை ஊக்குவித்தார் என்ற மனவருத்தம் மறுபுறமும் சிலரை வாட்டுகிறது. கைலாசபதி தினகரனில் இருந்த காலம் சிறியது. அதன் மூலம் அவரால் யாரையேனும் 'இருட்டடிப்புச்' செய்திருக்க முடியாது. ஏனெனில் அப்போது சுதந்திரன், ஈழகேசரி போன்ற பல களங்களும் இருந்தன.

கைலாசபதி தனக்கு உடன்பாடான சமூக இலக்கியப் பார்வையுடையவர் களை மிகவும் ஊக்குவித்தார் என்பது உண்மை. ஒரு ஃபாசிசவாதியையோ குறுகிய இனவாதியையோ முதலாளியப் பழமைவாதியையோ அவர் ஏன் வலிந்து போய் ஊக்குவிக்க வேண்டும்? கேள்வியை இன்னொரு விதமாகக் கேட்கிறேன். மு.பொ. வகையறாக்கள் தங்கள் நிலைப்பாட்டுக்கு உடன்பாடற்ற எந்த ஒரு படைப்பாளியையும் ஊக்குவித்திருக்கிறார்களா? ஊக்குவிக்க வேண்டாம், எவரது தகுதியையும் கூட அங்கீகரித்திருக்கிறார்களா? இன்றுங் கூட, மு.பொ. சு.வில்வரத்தினத்தை மிஞ்சின கவிஞன் இல்லை என்பது தான் இவர்களது கூப்பாடாக இருக்கிறது. அறமும் ஆன்மீகமும் பேசுகிற மு.பொ.வின் கூட்டாளி வில்வரத்தினம் 'தமிழ் இனி 2000' சென்னை மாநாட்டில் தனது மாக்சிச விரோத ஒப்பாரியை வைத்து விட்டு வந்தார். அங்கு போக முன்பு கம்பன் கழகம் மேடையில் தன் நூலுக்கு அரங்கேற்றம் வேண்டி மேடை ஏறி அவமானப்பட்ட கதையைக் கேட்டால் இவர்களது ஆன்மீகம் பற்றி நன்றாக விளங்கும்.

ஈ.பி.டி.பி. யினரின் தயவில் தங்களது சொந்த அலுவல்களைப் பார்த்துக் கொள்வதும், நூல் வெளியீடுகள் பரிசுகள் என்று வரும்போது சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறை அரசாங்க என்பதை ஒருபுறம் ஒதுக்கி வைத்த விட்டுக் கைநீட்டி உதவி கோருவது ஒருவகை ஆன்மீகம் தான். தமிழ் விடுதலைக்குத் தலையும் ஈ.பி.டிபிக்கு வாலும் காட்டுகிற இந்த விலாங்குத் தனம் தானாக ஒழியாது.

இன்று தமிழ் மக்கள் நடுவே மாக்சிச லெனினிசவாதிகளின் நேர்மையான நிலைப்பாடு பற்றிய தெளிவு ஏற்பட்டு வளர்ந்து வருகிறது. விடுதலை இயக்கங்களின் அரசியல் உதிரித்தனம் பற்றி மக்கள் இன்று நன்றாக அறிவார்கள். இந்த நிலையில், திரும்பவு தமிழ் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்த விரும்புகிறவர்களுக்கு மு.பொ. போல கூலிப்படைகள் தேவை. ஆனாலும் இந்தக் கூலிப்படைகளிடம் இருக்கிறவை எல்லாம் எப்போதோ முனை மழுங்கிப் போன பொய்கள் தான். இவற்றை இன்னமும் இயங்கச் செய்வது கொள்கை அல்ல. வெறும் காழ்ப்பும் தன்முனைப்பும்தான்.

---

# புதியதும் பழையதின் வழியில்

தோழர் சண்முகதாசன் மலையகத் தொழிலாளர்களது அரசியல் விழிப்புணர்வை வளர்த்தெடுக்கத் தொழிற்சங்க இயக்கத்தைப் பயன்படுத்தினார். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றார். இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களைப் பெருமளவில் கொண்ட சங்கம் மலையகத்தில் 1960களிலும் 1970களின் முற்பகுதியிலும் பெரிய அதிர்வலைகளை எழுப்பியது. தொண்டமான் தலைமையிலான துரோக அரசியலுக்கு உண்மையான சவாலாக எழுந்த அச்சங்கம் மலையகத்தில் 'செங்கொடிச் சங்கம்' என்று அன்புடன் அழைக்கப்பட்டது.

1972ல் மாக்சிச லெனினிசவாதிகளின் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவைப் பாவித்து ஓ.ஏ.ராமையா என்கிற சந்தர்ப்பவாதி இச் சங்கத்தைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து ஒரிரு ஆண்டுகளிலேயே சீரழந்து விட்டதால் தோழர் சண்முகதாசன் தலைமையில் 'புதிய செங்கொடிச் சங்கம்' என்ற பேரில் மாற்று அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. என்றாலும் 1977க்குப் பின் ஏற்பட்ட மாற்றங்களின் சூழ்நிலையில் இத் தொழிற் சங்கத்தால் வலுவுடன் செயற்பட முடியவில்லை.

ராமையா திரிபுவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஒடுக்குமுறை அரசாங்கத்தில் ஒரு காலும் 'இந்திய வம்சாவழிக்' கூட்டணியில் தொண்டமான் தலைமையிலான பிரதேசவாதத் தளத்தில் மறுகாலுமாக நின்று அல்லற்பட்டு அடையாளம் இழந்து போயிருக்கிறார். செங்கொடிச் சங்கமும் அவரோடு சேர்ந்து அரோகரா ஆகிவிட்டது.

இப்போது புதிய செங்கொடிச் சங்கம் என்ற பேரைக் கெடுக்க அந்தப் பேரைப் பாவித்து, ஒரு திரிபுவாதியின் தூண்டுதலில், அத் தொழிற்சங்கத் துக்கு மீள உயிரூட்டப்பட்டுள்ளது. அதன் தலைவர் மலையகத்தில் உள்ள ஒரு என்.ஜி.ஓ. பேர்வழி. அவரது கீழ்த்தரமான சந்தர்ப்பவாதம் பேர்பெற்றது. புதிய செங்கொடிச் சங்கம் என்ற பேர் உருப்படக் கூடாத என்பதில் இவர்களுக்கு எவ்வள அக்கறை!

படிப்பகம்

www.padippakam.com



# மூனாப் பொன்னம்பலத்தின் முழுப்பொய் அம்பலம்!

கம் கண்ட பிரசாரகர்களில் க்டர் கொயபெல்ஸ் பிடிவாத வர். எந்தப் பொய்யையும் திருப்பித் பிச் சொன்னால் மெய்யாகிவிடும் து அவரது கொள்கை. இந்த த்தில். சொல்லுக்கும் செயலுக்கும் ன்பாடு இல்லாத சான்றோர்களும் பர். ஹிற்லரின் பிரசாரகராக ந்த கொயபெல்ஸ் ஜேர்மன் யவாதத்திற்கும் ஜேர்மன் ∴பாஸிஸ வாதத்துக்கும் ஆற்றிய தொண்டு ப்பரியது. உலகப் போரில் ∴ ஸக் தோற்றாலும். அதன் பாதிப்பு டருகிறது. கொய பெல்ஸ் ந்தாலும். அவரது பிரசாரப் பரியம் தொடருகிறது. ஈழத் தமிழ் க்கியப் பரப்பில் சத்தியத் தேடல் ற பேரில் கொயபெல்ஸ் கொள்கை நின்றவர்களுள் பொன்னுத்துரை முக்கியமானவர். று மு. பொன்னம்பலம் எஸ். ரவை மிஞ்சி விடுவதென்று

வைத்து தளையசிங்கம் எழுதிய நாவல் எடுபடவில்லை என்றால். அதற்கான பழியை யார் மீது போட முடியும்? 'இரசிகமணி' கனக செந்திநாதன் முதலாக பேராசிரியர்கள் சதாசிவம். வித்தியானந்தன் போலானவர்கள் வரையிலான ஒரு பெரிய சான்றோர் பட்டாளமே திரண்டு நின்று இடதுசாரி களை மறுத்துச் செயற்பட்ட போது. இவர்களை மீறி முற்போக்கு எழுத்தாளர்களால் தளையசிங்கம் போன்றவர்களை எப்படி 'இருட்டடிப்புச்

தவறியதில்லை. என்றாலும் அவருடைய பிரதான எதிரியாக பேராசிரியர் கைலாசபதியே இருந்து வந்திருக்கிறார்.

அதிகாரம் பற்றியும் அதிகாரத் துஷ்பிரயோகம் பற்றியும் நிறையப் பேசுகிற மு.பொவும் அவரது கூட்டாளிகளும் தங்கள் கைகளில் பத்திரிகைகள் அகப்படும் போது அடிக்காத கொட்டம் இல்லை. 1980களில் யாழ்ப்பாணத்தில் இளைஞர் இயக்கங்களின் ஆதிக்கம் ஓங்கிய போது இடதுசாரிகளைத் துரோகிகள் என்று முத்திரைகுத்தி ஒதுக்கவும் முடியுமான போது மிரட்டல்கட்கு உட்படுத்தவும் இந்த ஆன்மீகவாதிகள் கூசியதில்லை.

மாறியது. சுந்தரராமசாமி என்கிற தமிழக இடதுசாரி எதிர்ப்பாளரது குடும்பத்தின் ஆதிக்கத்திலுள்ள 'காலச்சுவடு' என்ற இருமாத சஞ்சிகை 'தமிழினி 2000' என்ற மாநாட்டை நடத்தியது. அதில் சில நிகழ்ச்சிகட்காக 'கைலாசபதி அரங்கு' என்ற பேரில் ஒரு அரங்கு அமைக்கப் பட்டது. அதைக்கூடப் பொறுத்துக் கொள்ள இயலாமல் சரிநிகரிலேயே அதைப்பற்றி ஒரு 'விவாதத்தை' தொடங்கி மூக்கு உடைபட்டார் இந்த மு.பொ. இது போலவே. விபவி என்கிற இன்னொரு என்.ஜி.ஓ. நடத்திய ஒரு இலக்கியத்(?) தகவல் ஏட்டிலும் மு.பொ.வும் அவரை அண்டியவர்களும் பண்ணிய அட்டகாசத்துக்கும் குறைவு இல்லை. இப்பொழுது 'மூமுன்றாவது மனிதன்' என்கிற ஒரு சஞ்சிகை மூலம் அதே

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1980வரை தமிழ்த் தேசிய எழுச்சிக்கு ஒரு பெரும் தடையாக இருந்ததாகவும் மு.பொ. எழுதுகிறார். 1964க்குப் பிறகு மு.பொ.எ.ச. என்பது சில உதிரிகளின் பாசறையாகவே இருந்தது. பலர் பேரளவிலேயே அதில் இணைந்திருந்தார்கள். சாதிய எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவாக நிற்கவும் இ.மு.பொ.எ.ச தயங்கியது. இதனால் அதன் உண்மையான தன்மை அம்பலமாகியது. இதன் பின்பே தேசிய கலை இலக்கியப் பேரவை உருவாக்கப்பட்டது.

1974ல் யாழ்ப்பாணத்தில் தமிழாராய்ச்சி மாநாட்டை வைப்பது என்ற எண்ணம் முற்றிலும் அரசியல் நோக்கத்துக்காக முன்வைக்கப்பட்டது என்ற உண்மையை மு.பொ. அறிவார். இந்த முடிவை இலங்கைத் தமிழாராய்ச்சி மன்றத் தலைவர் வி.எஸ். துரைராஜா மிகவும் வன்மையாக எதிர்த்து மாநாட்டு நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கிக் கொண்டார். ஒரு சர்வதேச மாநாட்டுக்குக் கொழும்பே உகந்த இடம் என்ற நியாயமும் மு.பொ. உணராததல்ல. அதைவிட.

**கைலாசபதி தனக்கு உடன்பாடான சமூக இலக்கியப் பார்வையுடையவர் களை மிகவும் ஊக்குவித்தார் என்பது உண்மை. ஒரு ∴பாசிசவாதியையோ குறுகிய இனவாதியையோ முதலாளியப் பழமைவாதியையோ அவர் ஏன் வலிந்து போய் ஊக்குவிக்க வேண்டும்?**

கணங்கட்டிவிட்டார்.

டத்துக்குள் இருக்கிற மூன்று ன்கு பேரையே அவரவருடைய றையில் அதி உன்னதமானவர் என்று ட்டுவதில் மிகுந்த அக்கறை ாண்டது காலஞ்சென்ற ளையசிங்கத்தின் பக்தர் குழாம். புகழ்ச்சியும் தம்மைச் சாராதவர்கள் ான தூற்றுதலும் இவர்களுடைய திய பஜனையும் தியானமுமாகும். ந்நாதர் தளையசிங்கம். இடது ரிகளையும் கம்யூனிஸ்ற் சிந்தனை யும் எதிர்ப்பதற்கு அரைவேக்காட்டு னத்துவமும் குழப்பான ஆன்மீகமும் ந்த ஒரு சிந்தனையை முன் த்தார். தான். மார்க்சீயத்தைக் ந்து போகிறதாகவும் சொல்லிக் ாண்டார். அவருக்கு மார்க்சீயம் றியும் தெரியாது நவீன சிந்தனையு வும் ஆழமான பரிச்சியம் இல்லை ர்பது பேராசியர்கள் கைலாசபதி. வசேகரம். கவிஞர் முருகையன் கியோர் முன்வைத்த விமர்சனங்கள் ம் தெளிவானது. தளைய சிங்கம் ன்படுத்திய பல மார்க்சிச விரோத தங்கள் என்கவுண்டர் என்ற சிகையி லிருந்து பெறப்பட்டதை ராசிரியர் கைலாசபதி சுட்டிக் ட்டியிருந்தார். தளையசிங்கம் டுமில்லாமல் பலவேறு இந்திய ர்க்சிய விரோதிகளுக்கும் ன்கவுண்டர் போன்ற ஏடுகள் ன்வைத்த இலக்கியக் கொள்கைகள் ன்பட்டிருக்கின்றன. தளையசிங்கம் விதை. சிறுகதை, நாவல் போன்ற பற்சிகளில் கைவைத்த போதும் வரது படைப்புக்கள் இலக்கியம் என்ற கையிலே ஒரு பெரிய பாதிப்பை ற்படுத்திவில்லை. சமூக அளவிலும் வை முக்கியத்துவம் பெறவில்லை. வருடைய விமர்சன முயற்சி டதுசாரி, முற்போக்கு எழுத்து முயற்சி ளைத் தாக்குகிற நோக்கத்தையே னைப்பாகக் கொண்டது. அதற்கு வறு வெறுமதி இருக்கவில்லை.

மிழ் இன உணர்வு கொடிகட்டிப் க்கத் தொடங்கிய 1956க்கும் பிறகு. மிழ்த் தேசியவாதத்தை மையமாக

செய்ய முடிந்திருக்கும்? பேராசியர்கள் கைலாசபதியும் சிவத்தம்பியும் முன்னுரைகள் எழுதாததால் தான் எல்லாமே குடிமுழுகிப் போனது என்பது இந்த நொண்டிக்குதிரைகள் எல்லாம் சறுக்கியதற்குச் சாட்டாகிவிட்டது.

பேராசிரியர் கைலாசபதியை மு.பொ. கடுமையாகத் தாக்குவதற்குச் காரணம் உண்டு. பேராசியர் கைலாசபதியிடம் நழுவல் போக்கு இல்லை. வெட்டொன்று துண்டு இரண்டு என்று சொல்லிவிடுகிறவர். மிரட்டிப் பணியவைக்கக் கூடியவரும் இல்லை. எனவே அவரை நம்பகமற்றவராக்குவது அவுசியம். அவரை அவதூறுகள் மூலம் கிழிறக்கிவிட்டார். அவரது கருத்துக்களைச் செல்லாதவையாக்க விடலாம். இதில் கைலாசபதிக்கு மாறாக அகப்படுகிற ஒவ்வொரு சாட்சியமும் பயன்படுகிறது. சாட்சிகளின் நேர்மை பற்றி யாருக்கும் அக்கறை வேண்டிய தில்லை. பேராசிரியர் சிவத்திம்பி அப்படியில்லை. வளைந்து கொடுத்து வாழத் தெரிந்தவர் அவர். கடுமையான விமர்சனங்களுக்கு முகங் கொடுக்க வேண்டி வந்தால். அதுவும் சரி இதுவும் சரி என்று பேசிக் கழன்று விடுவார். தமிழ்த் தேசியவாதத்துடன் சமரசம் செய்யத் தொடங்கிய பிறகு அவரது திரிபுவாத மார்க்சிசம் மேலும் தடுமாறி மார்க்சிக மறுப்பு வரை போய் மீண்டது. புதிதாக எந்த ஒரு சிந்தனை மேற்கிலிருந்து வந்தாலும் அதனுடன் தனக்குப் பரிச்சயம் இருப்பாதாகக் காட்ட வேண்டிய நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்திக்கொண்டார். இந்தக் குழப்பங்களின் நடுவே தன்னுடைய கடந்தகால இடதுசாரிச் செயற்பாட்டில் பெரும் பகுதியை அவர் தவறென்று சொல்லியதன் மூலம் மு.பொ. போன்றோரின் மன்னிப்பைப் பெற்று விட்டார். அதுவும் மில்லாமல் இப்போது கம்ப வாரிதி (!)யுடைய ஆசி கூட அவருக்குக் கிட்டியுள்ளது. (இது. தி வி.க. பரிசு உபயம்!)

கவிஞர்கள் முருகையன். சிவசேகரம் இருவரையும் வசதி அகப்படும் போதெல்லாம் தாக்குவதற்கு மு.பொ.

1990 அளவில் நின்றுபோன 'அலை' சஞ்சிகையில் மிகவும் கீழ்த்தரமான மொழியில் அவர்கள் இடதுசாரிகளை நிந்தித்து எழுதினார்கள். 1987ல் தமக்குச் சாதகமாக ஏற்பட்ட ஒரு சூழலில் 'திசை' என்ற சஞ்சிகையை இடதுசாரிகளைத் தாக்குவதற்கும் தமது மனவக்கிரங்களை எல்லாம் கொட்டித் தீர்ப்பதற்கும் நன்றாகப் பயன்படுத்தினார்கள். விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் பூரணமான ஆதிக்கம் செலுத்திய ஆறு வருடக் காலத்தில் இவர்களுடைய தேசியவாத மார்க்சிச விரோதம் கூடக் "காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே" என்கிறது போல இவர்களை அதிகார மோட்சத்துக்கு ஏற்ற உதவாமல் போய்விட்டது.

ஈ.பி.டி.பி. தலைமையின் உதவியுடன் யாழ்பபாணத்திலிருந்து வெளியேறிக் கொழும்பில் குடியேறிய பிறகு. மு.பொ. கைக்கு ஒரு என்.ஜி.ஓ. ஏடு எட்டியது. சார்லி அபயசேகரா என்கிற ஈழத்து என்.ஜி.ஓ. பிதாமகரின் மோர்ஜ் நிறுவனத்தின் ஏடாகத் தொடங்கிய 'சரிநிகர்' இடதுசாரிகள் மீதும் குறிப்பாக மார்க்சிச-லெனினிசக் கட்சிகள் மீதும் காழ்ப்பு மிகுந்த சிலருடைய ஆதிக்கத்தில் இருந்தது. இவர்களின் பத்திரிகை அனுபவம் மிகவும் குறைபாடானது. எனவே தனிப்பட்ட தாக்குதல்கள். செய்திகளை வெளியிடுவதில் பொறுப்பீனம் போன்ற சிறு பிள்ளைத்தனங்கள் எல்லாம் சரிநிகரில் நிறைய இருந்தன. தமிழில்

## குள்ள நரிக் கூட்டத்தில் ஊளையிடும் ஒரு நரி

பழைய பொய்களை அவிழ்த்து விடுகிறார்.

விக்ரர் ஐவன் நடத்துகிற 'ராவய' சிங்கள வார ஏட்டின் சகோதர ஏடான ஆதவனில் பேராசிரியர் சிவத்தம்பி மீது டொமினிக் ஜீவா கட்டவிழ்த்து விட்ட மூர்க்கத்தனமான தாக்குதலுக்குப் பதில் எழுதுகிற தோரணையில். மூன்றாவது மனிதனில் மு.பொ. தன் பழைய பொய்களுக்கு உயிர் கொடுக்கப் படாதபாடு பட்டிருக்கிறார்.

அமெரிக்காவுக்கு ஒருவர் புலமைப் பரிசில் பெற்றுப் போவதையோ அமெரிக்க தகவல் நிலையம் ஒருவரது நூலை வெளியிடுவதையோ எந்த இடதுசாரியும் கண்டிக்க நியாயமில்லை. அதேவேளை சி.ஐ.ஏ. வெளியிடுகிற ஏட்டிலிருந்து கம்யூனிச எதிர்ப்புப் பொய்களை விமர்சனம் இல்லாமல் எடுத்தாள்வதால் ஒருவர் சி.ஐ.ஏ. முகவராக இருக்க அவசியமில்லை. ஆனால் அவரது மனோபாவம் பற்றிய சந்தேகங்கள் நியாயமானவை. இப்படிப் பட்ட தளைய சிங்கத்தை நியாயப்படுத்த வேண்டிக். கைலாசபதி மீது வீண்

**விடுதலை இயக்கங்களின் அரசியல் உதிரித்தனம் பற்றி மக்கள் இன்று நன்றாக அறிவார்கள். இந்த நிலையில், திரும்பவும் தமிழ் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்த விரும்புகிறவர்களுக்கு மு.பொ. போல கூலிப்படைகள் தேவை. ஆனாலும் இந்தக் கூலிப்படைகளிடம் இருக்கிறவை எல்லாம் எப்போதோ முனை மழுங்கிப் போன பொய்கள் தான்.**

மாற்றுப் பத்திரிகைகள் இல்லாத நிலையில். மேஜர் நிதி உதவியுடன் இவர்களால் சரிநிகரை நடத்த முடிந்தது. விற்பனையும் ஓரளவு நன்கு இருந்தது. "என்.ஜி.ஓ. பணமிருக்கும். ஏ.சி.யில் அறையிருக்கு" என்று ஆர்ப்பாட்டமாக நடந்த சரிநிகருக்கும் அதன் என்.ஜி.ஓ எசமானர்களுக்கு முரண்பாடுகள் வந்த பிறகு. காசைத் தண்ணீராகப் பொழிந்த என்.ஜி.ஓ. காசருவி வற்றி விட்டது. அதோடு சரிநிகரின் சரித்திரமும் மெல்ல முடிந்தது இன்னொரு கதை.

கறையான் புற்றெடுக்க கருநாகம் குடிபுகுந்த கதையாக இந்த என்.ஜி.ஓ. கூடாரத்தில் மு.பொ. புதிதாக வந்து ஒண்டிக்கொண்டு. மார்க்சிய எதிர்ப்பாகவும் தன் ஆசிகளை இரந்து நிற்காத எழுத்தாளர்களை ஏசியும் எழுதிவந்தார். சொந்தப் பேரிலும் புனைபேர்களிலும் எழுதினார். இவருக்கு உடந்தையாக இவருடைய ஜால்ராவாக ஒருவரும் அங்கே பின் நவீனத்துவம். கட்டுடைப்பு என்றெல்லாம் ஏதேதோ எழுதிவந்தார் சரிநிகரில். இவற்றுக்கு எதிரான கடுமையான பதிலடிகள் கிடைத்தாலும். கொயபெல்ஸ் வழியில். சூடு ஆறிய பின்பு மறுபடியும் அதே பொய்களைச் சொல்லி வருவது அவர்களுடைய வழமையாக

சந்தேகங்களை மு.பொ. குவிப்பது ஏன்?

பேராசிரியர் கைலாசபதியும் முருகையனும் ஒடுக்குமுறைகட்கு எதிராகப் போராடினார்கள் என்பது மு.கா.வின் இன்னொரு கேள்வி. மு.பொ. அறிந்தவரை. துவக்குத் தூக்கினால் தான் போராட்டமாக இருக்கும். அவர்கள் இருவரும் சாதிய ஒழிப்புக்கு எதிரான போராட்டத்தின் போது தைரியமாக முன்வந்து குரல் கொடுத்தவர்கள். பல வேறு காரணங்கள் சொல்லி அந்தப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்த திரிபுவாதிகள் போலவோ தமிழ்த் தேசியவாதிகள் போலவோ, அவர்கள் தயங்கிப் பின்நின்றவர்கள் இல்லை. போராசிரியர் கைலாசபதி டொமினிக் ஜீவாவை தன் வீட்டில் சாதி காரணமாக விருந்துக்கு அழைக்கவில்லை. என்று 1975ல் வாய் கூசாமல் டொமினிக் ஜீவா பொய் சொல்லியுள்ளார். இதனைக் கலாநிதி எம்.ஏ. நு∴மான் கடுமையாக மறுத்தும் கண்டித்தும் அப்போதே எழுதினார். அதன் பின்பு டொமினிக் ஜீவா நீண்டகாலமாக இந்தப் பொய்யைத் திரும்பவும் கூறவில்லை. 'அலை' இந்தக் கிலுசுகெட்ட பொய்யை 1980ல் மீளவும் பிரசுரித்தது. அலையை ஆதாரமாக் வைத்து மு.பொ. இப்பொய்க்கு இன்று புத்துயிர் கொடுக்க முயல்கிறது ஏன்?

யாழ்ப்பாணம் தான் தமிழ் ஆராய்ச்சியின் மையமுமல்ல. எனவே கொழும்பில் வைக்குமாறு வற்புறுத்தியது மு.பொ. சொல்லுகிற விதமான 'துரோகம்' ஆகாது.

யாழ்ப்பாணத்தில் நடந்த மாநாட்டை ஒரு தமிழரசுக்கட்சிப் பிரசாரத் திருவிழா வாக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியோ தமிழரசுக் கட்சிப் பிரமுகர் அமிர்தலிங்கத்தின் அரசியற் கூத்துக்கள் பற்றியோ கவனம் காட்டாத எவரும் மு.பொ. சொல்கிற வற்றை நம்பலாம்.

சத்தியாக்கிரகம் தொடர்பாகப் பேசும் போது 'சீன அணியினர்' பற்றி மு.பொ. எழுதுகிறார் 1961ல் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் எங்கே 'சீன அணி' இருந்தது? பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டாமா? சத்தியாக்கிரகப் போராட்டம் தமிழரசுக் கட்சிக்குள்ளேயே போதிய கலந்தாலோசனை இல்லாமல் தொடங்கப்பட்டது. என்பது மட்டுமில்லாமல். எந்த விதமான வேலைத்திட்டமும் இல்லாமல் தொடங்கப்பட்டதுமாகும். போராட்டத்தை எப்படி வழி நடத்துவது என்று திசை தெரியாமல் தவித்த தமிழரசுத் தலைமை தோட்டத் தொழிலாளரை அதில் இணையுமாறு கேட்டது. மலையகத் தமிழரது உரிமைகள் பற்றிப் பேசுவதை 1957ல் பண்டா செல்வா ஒப்பந்தக் காலத்துடனேயே நிறுத்திவிட்ட கட்சி தமிழரசுக்கட்சி. அப்போதே சிங்களம் மட்டுமே சட்டத்தை ஏற்றுக் கொண்டதும் தமிழரசுக்கட்சியே. கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சிகளையும் முந்தியே தமிழரசுக்கட்சி சிங்களத்தை நாட்டின் ஒரே அரச கரும மொழியாக ஏற்றது என்பது முக்கியமானது. தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகம் எந்தப் பிரச்சனைகளை மையமாக வைத்துத் தொடங்கப்பட்டது. ஏன் தொடங்கப்பட்டது. அதன் வேலைத் திட்டம் என்ன என்ற அடிப்படையில் கவனியாமல் வெறுமனே தமிழர் பேரால் போராடினால் சரி என்று சொல்வது ஞானமும் ஆகாது. ஆன்மீகமும் ஆகாது நேர்மையாக விமர்சித்த தோழர் சண்முகதாசனைத் தமிழ்த் துரோகி ஆக்குகிற தேவை ஏன் மு.பொ.வுக்கு ஏற்பட்டிருக்கிறது?

பேராசிரியர் கைலாசபதி தினகரனில் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுச் செயற்பட்ட காலத்தில், தினகரன். யூ.என்.பி. ஆதரவு தனியார் நிறுவனம் ஒன்றின் கையில் இருந்தது. இளம் பட்டதாரியான கைலாசபதி தினகரனில் சாதித்தவை பற்றி மு.பொ. சினக்கிற போது. கைலாசபதி தனக்குச் சாதகமற்ற ஒரு சூழலில் தனது செயல் ஆற்றல் மூலம் வென்றவை பற்றிய தனது ஆற்றாமையையே திரும்பவும் காட்டுகிறார்.

போராசிரியர் கைலாசபதி தினகரன் மூலம் பல எழுத்தாளர்களை வளர்த்தெடுத்தார் என்பதை மறுக்கும்

தொடர்ச்சி 10ம் பக்கம்

## பரமார்த்த குருவின் உதய தரிசனம்

காழும்புத் தமிழ்ச் சங்கம் தயாரித் ளித்த சிறுவர் நாடகங்களில் ஒன்று மார்த்த குருவும் சீடர்களும் பற்றியது. ந்த நாடகச் சுவரொட்டியில் இருந்து த்தைப் பார்த்த போது உள்ளூர்ப் மார்த்த குரு ஒருவருடைய நினைவே னதில் வந்தது.

ம்பன் பேர் சொல்லிப் பிழைக்கிற ருவானவர், மே மாத முடிவில் கலந்து காண்ட பொதுக் கூட்டம் ஒன்றில் ன்னுடைய அனுமார் வியாபாரத்திதை யாயப் படுத்த சேக்கிழாரையும் பெரிய ராணத்தையும் சாட்சிக்கு அழைத்துப் பசினார். அவரைத் தொடர்ந்து பேசிய ருவாவடுதுறை ஆதீன முதல்வர். த் தெளிவாக, "ஜெயராஜீக்கு கம்ப மாயணம் நன்றாகத் தெரியக் கூடும். னால் பெரிய புராணம் பற்றி எதுவும் ரியாது" என்று சொல்லி வைத்தார்.

பரமார்த்த குருவின் முகத்தில் ஈயாடவில்லை.

யூன் மாத பகுதியில் உதயதரிசனம் நிகழ்ச்சியில் ஒரு பார்ப்பனரது பவள விழா பற்றிப் பேசுவதற்காக அழைக்கப்பட்டிருந்த பரமார்த்த குருவானவர் தனது சாதியக் கொள்கையை மீண்டும் வலியுறுத்தினார். வர்ணாசிரமத்தை நியாயப்படுத்திப் பார்ப்பனர் ஏன் மற்றச் சாதியார் எல்லாரையும் விட உயர்ந்தோராக இருந்து வந்தனர் என்பதற்கான நீண்ட விளக்கம் ஒன்றையும் தந்தார்.

பராமார்த்த குருவின் புதிய தலித்திய சீடப்பிள்ளையாக இணைந்துள்ள காகித மல்லிகைக்காரர் இதுபற்றி என்ன சொல்லுவாரோ?

படிப்பகம்

புதிய பூமி
Puthiya Poomi
புதிய பூமி
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA.
சுற்று 08 யூலை/ஓகஸ்ட் 2001 பக்கம் 12 விலை 10/= சுழற்சி 41

# ஜே.வி.பி. என்ன கூறுகிறது? ஆசன அதிகரிப்பில் அக்கறை

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் ஜே.வி.பி. எந்தப்பக்கம் என்று அறிவிக்காமல் அது மக்களின் பக்கம் இருக்கும் என்று அதன் தலைவர் கூறினார். பொலிஸ். நீதி. பகிரங்க சேவை. லஞ்ச. தேர்தல் ஆணைக் குழுக்களை அரசாங்கம் நியமிக்குமானால் அரசாங்கத்தை எதிர்ப்பதில்லை என்று ஜே.வி.பியினர் கூறினர். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிற்கு கொடுக்கும் வாக்குறுதிகள் அதிகமாக இருந்தால் ஐ.தே.கட்சியை ஆதரிப்பதில்லை என்று தெரிவித்தனர். பின்னர் எந்தவொரு கட்சிக்கும் ஆதரவளிப்பதில்லை என்று தெரிவித்தனர். நம்பிக்கையில்லா பிரேரணை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு வரும்போது ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர்கள் மனச்சாட்சிபடி முடிவெடுத்து வாக்களப்பார்கள் என்று கூறினர் பிரேரணை பாராளுமன்றத்தில் எடுக்கப்படும் போது யோசித்து முடிவெடுப்பதாகவும் கூறினர். நம்பிக்கையில்லாத தீர்மானம் தொடர்பாக இன்னும் பல தீர்மானங்களை எடுக்கலாம். அது தான் ஜே.வி.பி என்று மக்கள் விளங்கிக்கொள்ளலாம்.

பாராளுமன்றத்தில் 10 ஆசனங்கள் இருந்தே இந்தக்கதி என்றால் ஆசனங்கள் கூடினால் ஜே.வி.பி. தாங்குமா என்பது சந்தேகமே. பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெற்றால் தற்போது ஜே.வி.பி. க்கு இருக்கும் 10 ஆசனங்கள் 25 ஆக அதிகரிக்கும் நாட்டு மக்களின் நலன் என்று கூறுவது பாராளுமன்றத்தில் அவர்களுக்கு இருக்க வேண்டிய ஆசனங்களின் எண்ணிக்கையையே குறிக்கும். அதற்கு அளவாகவே அவர்களில் எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கின்றனர். அரசாங்கத்துடன் இருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி. சமசமாஜக் கட்சி ஆகியவற்றை ஜே.வி.பி விமர்சித்தாலும் அக்கட்சிகளைப் போன்று ஜே.வி.பியும் பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையையே அடிப்படையாகக் கொள்கின்றது.

## அரசியல் சந்தர்ப்பவாதம் அதிகரிக்கிறது

ஏனைய இடதுசாரி கட்சிகளையோ. முன்னணிகளையோ வளரவிடாது தடுப்பதிலும் ஜே.வி.பி என்ற ஒரு கட்சியின் ஏகபோகம் இருக்கவேண்டும் என்றே அது விரும்புகிறது. நாட்டின் இ[illegible] பிந்துனுவெவ கொலைகள் அதன் பின்பு மலையகத்தில் நடைபெற்ற சம்பவங்கள். மாவனெல்லையில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டமை என்பன பற்றியும் பேசும் போது ஜே.வி.பி. தலைவர்கள் சிஹல உருமய போன்ற கட்சிகளின் பேரினவாத மொழியிலேயே பேசுகின்றனர்.

இந்திய ஆளும் வர்க்கத்தின் மேலாதிக்கம் பற்றியும் இலங்கையின் விடயங்களில் அதன் அப்பட்டமான தலையீடு பற்றியும் பேசுவதையே ஜே.வி.பி நிறுத்திவிட்டது.

மக்களின் பங்களிப்புடனான புரட்சி. அமைப்பு மாற்றம் என்பன பற்றி கதைப்பதை கேட்க முடிவதில்லை.

ஏகாதிபத்திய எதிர்ப்பு பற்றி அவ்வப்போது குறிப்பிடும் ஜே.வி.பி. உண்மையான எதிர்ப்பு போராட்டத்தில் சிங்கள மக்களின் தேசிய அபிலாஷைகள் மட்டுமன்றி தமிழ். முஸ்லிம். மலையகத் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளும் கணிப்பில் எடுக்க வேண்டும் என்பதை மறுத்துவருகிறது.

தமிழ் மக்களின் போராட்டத்தை ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்துடன் இணைப்பதற்கு பதிலாக தமிழ் மக்களின் போராட்டத்தை ஏகாதிபத்திய சதி என்றே ஜே.வி.பி. கூறுகிறது. தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கு பதிலாக பொத்தம் பொதுவாக சிங்கள. தமிழ். முஸ்லிம் மக்களின் ஒற்றுமை என்று கூறிக்கொள்வதன் மூலம் பேரினவாத கண்ணோட்டத்துடனேயே இருப்பதை வெளிப்படுத்துகின்றது. பிரிவினைக்கு எதிரான யுத்தம் செய்யப்பட வேண்டும் என்று சொல்வதன் மூலம் தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் யுத்தத்தை நியாயப்படுத்துகின்றது.

இவ்வாறான நிலைப்பாட்டினால் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஐ.தே.கட்சிக்கும் மாறாகவே இடதுசாரி சக்தியின் தலைமையிலான மூன்றாவது சக்தியொன்றின் வளர்ச்சிக்கு தடை போடப்படுகிறது.

இந்நிலையில் ஜே.வி.பியை ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்தியென்றோ புரட்சிகர சக்தியென்றோ யார் தான் நம்பப்போகிறார்கள். ●

# புதிய-ஜனநாயக கட்சியி[ன்] 23 ஆண்டுகள்

புதிய ஜனநாயக கட்சி தனது இருபத்தி மூன்றாவது ஆண்டை நினைவு கூர்கி[…] 1978ம் ஆண்டு யூலை மூன்றாம் திகதி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ([…] என்னும் பெயரில் தன்னைப் பிரகடனம் செய்து கொண்டது. ஏற்கனவே 1[…] பழைய கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து பிறந்த மாக்சிச லெனினிசக் கம்யூ[…] கட்சியின் தொடர்ச்சியாகவே மேற்படி கட்சி தோற்றுவிக்கப்பட்டது மாக[…] லெனினிசம் மா ஓசேதுங் சிந்தனையை வழிகாட்டும் கோட்பாடாகத் தொட[…] முன்னெடுக்கும் திடசங்கற்பத்துடன் கட்சி நிலை நிறுத்தப்பட்டது. அதன் முதல[…] பொதுச் செயலாளராக மறைந்த தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் தெ[…] செய்யப்பட்டார். 1991ல் இடம் பெற்ற கட்சியின் இரண்டாவது தேசிய காங்[…] கட்சியின் பெயரைப் புதிய-ஜனநாயக கட்சி என மாற்றிக் கொண்டது.

தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தின் மறைவுக்குப் பின் தோழர் சி.கா.செந்தி[…] பொதுச் செயலாளராகவும் தோழர் இ.தம்பையா தேசிய அமைப்பாளராகவும் தே[…] சோ. தேவராஜா பொருளாளராகவும் மத்திய குழு தெரிவு செய்துகொண[…] கட்சியின் மத்திய குழு. அரசியல் குழு செயற்குழு. பிரதேசக் கமிட்[…] என்பனவற்றின் மூலமாக கட்சி வடக்கு கிழக்கு மலையகம் கொழும்பு பிரதேசங்[…] வேலைகளை முன்னெடுத்து வந்துள்ளது.

கடந்த இருபத்தி மூன்று ஆண்டுகளில் கட்சியும் தோழர்களும் மிகவும் நெருக்க[…] துயரங்கள். இழப்புகள். சோதனைகள். வேதனைகள் மத்தியில் மி[…] அர்ப்பணிப்புடன் கட்சியைக் கட்டிக் காத்து அதன் மாக்சிச லெனி[…] தனித்துவத்துடன் முன்னெடுத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சமக[…] சர்வதேச தேசிய சூழல்கள் உருவாக்கிய பாதமான நிலைமைகளிலும் ஒரு மா[…] லெனினிசக் கட்சியைக் கட்டியெழுப்பி சகல விதமான சவால்களுக்கும் […] கொடுத்து முன்னெடுப்பதில் உள்ள பாரிய கஷ்டங்களை கட்சியும் தோழர்க[…] கம்யூனிஸ்ட் உறுதியுடன் கடந்து வந்திருப்பது இன்று நினை[…] கூரப்படவேண்டியதாகும். உயிரிழப்பு. சித்திரவதை. தடுத்து வைப்பு. சி[…] தலைமறைவு. அச்சுறுத்தல் போன்றவற்றை எமது தோழர்கள் எதிர்நே[…] வேண்டியதாயிற்று. அரசு யந்திரத்தினாலும் ஆயுதம் ஏந்திய தமிழ் இயக்கங்கள[…] முடுக்கி விடப்பட்ட மேற்படி நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்தே நமது […] கடந்த 23 ஆண்டுகளைக் கடந்து வந்துள்ளது.

இன்று புதிய இரத்தம் பாச்சப்பட்ட நிலையில் தொடர்ந்தும் தனது மாக்சிச லெனி[…] மாஓசேதுங் சிந்தனைப் பாதையில் முன்னோக்கி செல்வதில் உறுதியு[…] நடக்கின்றது. இவ்வருடப் பிற்பகுதியில் கட்சி தனது நான்காவது தேசியக் காங்கி[…] நடாத்த உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். வேகமாக மாறி வருகின்ற தே[…] சர்வதேசிய சூழலில் அரசியல் தத்துவார்த்த நடைமுறை வேலைத் திட்டங்[…] பற்றி மேற்படி கட்சிக் காங்கிரஸ் முடிவுகளை மேற்கொள்ள இருக்கின்றது.

கட்சியின் வழிகாட்டலின் கீழ் புதிய பூமி. New Democracy, தாயகம் கலை இலக்[…] சஞ்சிகை என்பன தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. விரை[…] மலையகத்திலிருந்து சமூக அரசியல் கலை இலக்கிய சஞ்சிகை வெளிவர உள்[…] இவற்றுடன் புதிய பூமி வெளியீட்டகம் அரசியல் தத்துவார்த்த நூல்களை[…] வெளியிட்டு வருகின்றன. தேசிய கலை இலக்கியப் பேரவை தனித்தும் கூட்டாக[…] தமது உறுப்பினர்களினதும் மற்றும் நண்பர்களினதும் எழுத்தாக்கங்களை வெளியி[…] வந்துள்ளது. விரைவில் அது தனது நூறாவது நூல் வெளியீட்டை வெளி[…] இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நாடும் மக்களும் அபாயகரமான அரசியல் சூழலுக்குள் இழுத்துச் செல்லப்ப[…] கூடிய இன்றைய நிலையில் நமது கட்சி கடந்த கால அனுபவங்கள் பட்டறிவு[…] மூலமாகப் பெற்றவற்றிலிருந்து மேலும் உறுதியுடன் முன் செல்வதற்கு திடசங்கற்[…] கொண்டு நிற்கின்றது.

இவ்வேளை கட்சிக்காகவும் மக்களுக்காகவும் இறுதிவரை செயல்புரி[…] தியாகவாழ்வு வாழ்ந்து மறைந்த அனைத்து தோழர்களுக்கும் கட்சி மத்திய கு[…] தனது புரட்சிகர வாழ்த்து அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றது. அதேவே[…] பல்வேறு அபாய நெருக்கடிகள் மத்தியிலும் கட்சியின் பன்முக வேலைகளை[…] முன்னெடுத்து வரும் ஒவ்வொரு தோழரையும் வாழ்த்தி உறுதி சேர்த்து நிற்கின்[…]

- ❖ மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை வெல்க!
- ❖ புதிய ஜனநாயக கட்சி வளர்க!
- ❖ புரட்சிகர வாழ்த்துக்கள் உரித்தாகுக!

## வடக்கு கிழக்கு..

1ம் பக்க தொடர்ச்சி.

அமைப்புக்களையும் இணைக்கத்தவறிவிட்டது. தமிழ் கட்சிகளின் அழைப்பை ஏற்று புதிய-ஜனநாயக கட்சி. ஜனநாயக இடதுசாரி முன்னணி. ஐக்கிய சோஸலிஸ கட்சி தியேச. தேசிய ஜனநாயக இயக்கம் மற்றும் சிங்கள ஜனநாயக அமைப்புகள் போன்ற இடதுசாரி இயக்க உறுப்பினர்களும் தலைவர்களும் தலைவர்களும் கணிசமான தொகையில் கலந்து கொண்டு பங்களிப்பை செய்தனர். அவர்களின் பங்களிப்பை ஏற்றுக் கொள்வதை மறியல் போராட்டத்தை ஒழுங்குசெய்தவர்கள் தவறியே விட்டனர். யுத்தத்திற்கு எதிராகவும். இனவாதத்திற்கு எதிராகவும். தமிழ் மக்களின் மீதான அநீதிகளுக்கு எதிராகவும் தொடர்ச்சியாக வெகுஜன இயக்கங்களை மேற்படி இடதுசாரி இயக்கங்கள் முன்னேடுத்து வருகின்றன. தமிழ். மலையகத் தமிழ். முஸ்லிம் மக்களின் உரிமைக் கோரிக்கைகள் சாதாரண சிங்கள மக்களை சென்றடைவதற்கான வடிகாலாக இடதுசாரி அமைப்புகளே இயங்கி வருகின்றன. அவ்வாறு சென்றடைவதை பற்றி கவலைப்படாமல் இருந்ததே தமிழ் அமைப்புகளின் இன்றைய பின்னடைவிற்கு முக்கிய காரணமாகும். சிங்கள மக்களை பற்றி யோசிக்காமல் சிங்கள மக்களின் ஆளும் வர்க்கத்தினருடன் மட்டுமே கொடுக்கல் வாங்கல்களை செய்து வந்ததே தமிழ் தலைமைகளின் தவறாக கொள்ளப் படுகிறது. அதே பாதையில் தொடர்ந்தும் தமிழ்த்தலைமைகள் சொல்லுவது இன்னும் பாரிய பின்னடைவுகளுக்கே வழி கோலும்.

தமிழ். மலையகத்தமிழ். முஸ்லிம் மக்களின் தலைவிதியை தீர்மானிக்கும் உரிமையை அவர்களுக்கே உரிய

தாக்கிக் கொள்ள பெரும்பான்மையின சிங்கள மக்களின் ஆதரவு தொகுக்கப் பட வேண்டும். அதனால் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டப் பாதை இலகுவாக்கப்படும். சிங்களமக்களின் ஆதரவை திரட்ட முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ளாமல் விட்டால் முழு சிங்கள மக்களையும் பேரின வாதிகளிடம் தள்ளுவதற்கு உதவுவதாக அமையும்.

தேசிய வாதத்தை அடிப்படையாகக் கொண்ட. குறுகிய இனவாத நிலைப்பாடுகளை கொண்டவர்களுக்கு 'சிங்கள மக்களின் ஆதரவு' தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் வெற்றிக்கு தவிர்க்க முடியாத நிபந்தனையாக இருப்பதை புரிந்து கொள்ள வேண்டும். இருந்தாலும் நடைமுறையில் ஏற்படும் பின்னடைவுகளிலிருந்தாவது பாடங்களை படிக்க தவறுவது மீண்டும் மீண்டும் தவறு இழைப்பதாகும். இது இவ்வாறிருக்க சில ஊடகவியலாளர்களும் இதனை உணர்ந்து செயற்படுவதாக இல்லை. அவர்கள் தொடர்ந்து இடதுசாரிகளை சாடிவருவதையே தொழிலாக கொண்டுள்ளனர். இடதுசாரிகளின் பங்களிப்பை மறுக்கும் அவர்களின் குறுகிய இனவாத நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவேண்டும் யூலை 6ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் இடதுசாரிகள் கலந்து கொண்டதை வெளிப்படுத்தாது சில ஊடகவியலாளர்கள் இருட்டடிப்பு செய்தனர்.

எல்லாவிதமான எதிர்ப்புணர்வுகளும் நடைமுறையில் இயல்பாக ஒன்று சேரும் போது எதிர்பியக்கங்களை நடத்துபவர்களும். ஊடகவியலாளர்களும் பொறுப்பாக செயற்படுவது அவசியம் ஆகக் கூடியளவிலான எதிர்ப்புகளை தொகுத்து எதிர்ப்பியக்கங்களுக்கு வலுசேர்க்க வேண்டும். அவர்கள் கற்றுக்கொள்வார்களா?

## ஜனாதிபதியின்....

1ம் பக்க தொடர்ச்சி

இஸ்ரேலையும் கட்டி யணைத்துக் கொண்டது அரசாங்கம். உள்நாட்டில் பேரினவாதிகள் யுத்த வெறியர்கள் ஆயுத வியாபாரிகள் என்போரது ஆலோசனைக்கு முதன்மை அளித்துக் கொண்டது. பேரினவாத ஒடுக்கு முறையைத் தேசிய இனங்கள் மீது ஏவிவிட்டதுடன் அவர்களின் எந்த உரிமைகளையும் வழங்க மறுத்துக் கொண்டது. பேச்சு வார்த்தையை ஏமாற்றிக் கொள்வதில் கபட நாடகம் ஆடியது.

இந்நிலையில் பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை இழந்து எந்த நேரமும் கவிழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கம் அமைக்க பேரினவாதியான பிரதமர் எடுத்த முயற்சிகள் பயன் அளிக்கவில்லை. அப்படி அது அமைந்தால் அதைவிட அபாயகரமானது வேறு எதுவும் இருக்க முடியாது. இருபுறத்திலும் உள்ள பேரினவாதிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைத்தால் பேரினப் பிசாசுகளின் ஆட்சியாகவே அமைந்துகொள்ளும்.

தற்போதைய அரசியல் யாப்பின் கீழ் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மையோ மூன்றில் இரண்டு ஆசனங்களோ கிடைப்பது அரிது புண்ணியத்தை நரித்தனப் பிற்போக்குவாதியான ஜே.ஆர். செய்து விட்டுச் செத்து விட்டார். இன்று அவருடைய கட்சியும் கூட மண்டையில் அடித்து மாய்கிறது. பொதுத் தேர்தல் ஒன்று திரும்பவும் நடாத்தப்பட்டாலும் கூட நிலையான அரசாங்கம் வரமுடியாத பயனற்ற நிலையதான். சிறுபான்மை இனக் கட்சிகளை உதைத்து விட்டு பேரினவாத அகங்காரத்துடன் நடந்து கொள்ள எத்தனித்தவர்களின் கதியை பேரினவாதம் பேசுவோரால் கூடப் பாதுகாக்க முடியவில்லை. ஆளும் வர்க்க அதிகாரம் யார் கைக்கு என்பதே இன்று இரு பிரதான கட்சிகளுக்கிடையிலான போட்டியாகும்.

இந்நிலையில் பாராளுமன்ற சந்தர்ப்பவாத ஏமாற்று அப்பால் யுத்தத்தையும் ஏகாதிபத்தியத்தையும் மேலாதிக்கத்தையும் எதிர்த்து மாபெரும் மக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்புதல் வேண்டும். சிறு பொறி காட்டுத்தீயை மூட்டவல்லது என்ற யதார்த்த உண்மை வழி நின்று சளைக்காது முன்முயற்சி செய்தல் வேண்டும். இன்றைய அரசாங்கத்தை விட ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்தால் சகல பிரச்சினைகளும் பெருமளவுக்கு குறைந்து விடும் என்ற மாயையில் இருந்து மக்கள் விடுபடல் வேண்டும். மாறி மாறி ஆட்சி செய்து இவ் இரு கட்சிகளாலும் பட்ட துயரங்கள் இழப்புகள் சோகங்களை நினைவு கூர்ந்து கொள்வது தேவையானதாகும். அது சரியான அரசியல் சிந்தனைக்கு உட்படல் வேண்டும்.

## பல்கலைக்கழக.

1ம் பக்க தொடர்ச்சி..

பல்கலைக்கழகங்கள் வெறுமே[…] நாற்சுவர் கல்விக் கூடங்கள் அல்[…] சமூகத்தில் ஒடுக்கு முறைகள் நிகழ[…] போது அதன் உணர்வுக[…] பல்கலைக்கழக மாணவர்களை[…] பாதிக்கவே செய்யும். அவ்வேளைகள்[…] நீதி நியாயம் கேட்பதிலும் உரிமைக்கு[…] எழுப்புவதிலும் முன் நிற்கவே[…] செய்வார்கள். அது தவறு என்றா[…] பல்கலைக்கழகங்கள் வெறு[…] கட்டிடங்களாகவே இருக்க முடியும்.

எனவே எங்கு பல்கலைக்கழ[…] மாணவர்களோ அன்றி ஏனை[…] மாணவர்களோ பழிவாங்கப்பட[…] அடக்கு முறைகளுக்கு ஆளாக்க[…] பட்டால் அதனை எதிர்த்து நிற்ப[…] சகலரினதும் கடமையாகும். கை[…] செய்யப்பட்ட மாணவனை விடுதலை[…] செய்வதை விடுத்து பல்கலை[…] கழகத்தையே மூடிக் கொள்[…] பிரச்சினைக்குப் பரிகாரமாகா[…] இவ்விடயத்தில் மாணவர்கள் மக்[…] ஐக்கியம் அவசியமானதாகும். ●

எனவே பரந்தளவில் ஐக்கியப்பட்டதுமா[…] வெகுஜனப் போராட்டப் பாதை ஒன்[…] மூலமே மக்களுக்கான வேலை[…] திட்டத்தை வென்றெடுக்க முடியு[…] அந்தத் தூர இலக்கை நோக்கி[…] செல்வதற்கு இன்றைய அரசிய[…] நிலைமைகள் ஊடே உரிய திட்டங்[…] வகுக்கப்படல் வேண்டும்.

வெளியிடுபவர் : இ. தம்பையா இல. 47. 3ம் மாடி. கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட். கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யு.கே. பிரின்டஸ் 91. விவேகானந்தா மேடு. கொழும்பு 13.

படிப்பகம்